
கோகுலம்

GOKULAM

மார்ச் '98 ரூ. 5.00





கோகுலம்

மார்ச் '98 ♦ மலர் : 16 ♦ இதழ் : 2

அருமைச் சிறுவர் சிறுமியரே!

படிப்பும் பரீட்சையும், நல்ல மார்க் வாங்கி தேர்ச்சி பெறுவதும் முக்கியம்தான். ஆனால் அதைவிட முக்கியம் உடல் ஆரோக்கியம். உடல் நலமாக இருந்தால்தான் உள்ளத்தில் உற்சாகம் இருக்கும். சோர்வின்றி உழைக்க முடியும்.

உடல் ஆரோக்கியம் என்பது தேகப்பயிற்சியாலும் சமசீரான நல்ல உணவாலும் கிட்டுவது. ஒன்றுக்கு ஒன்று அனுசரணை. ஒன்றில்லாமல் மற்றதால் மட்டும் பலன் கிடைக்காது.

தேகப்பயிற்சியை நீங்கள் ஓடி ஆடி விளையாடுவதன் மூலமே பெற்று விடுவீர்கள். ஆரோக்கிய மான உணவு சாப்பிடுகிறோமா என்பதில்தான் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். ருசியான உணவெல்லாம் ஆரோக்கியமானதல்ல; ஆனால் ஆரோக்கியமான உணவை ருசியாகத் தயாரிக்க லாம்.

சமசீர் உணவில் நமக்குத் தேவையான புரதச் சத்து, சர்க்கரைச் சத்து, கொழுப்பு, வைட்டமின் கள் மற்றும் தாது உப்புகள் ஆகியன கிடைக்கின்றன. 'காய்கறியும் பழங்களும் விற்கிற விலையில் சமசீர் உணவுக்கு எங்கே போவது? அதைவிட வைட்டமின் மாத்திரை வாங்கி சாப்பிட்டு விட லாம்' என்று தோன்றும்!

ஆனால் இது தவறான கருத்து. வைட்டமின் மாத்திரைகளுக்கு உடல் பழகிவிட்டால் இயற்கை உணவிலிருந்து வைட்டமின் சத்தை கிரகித்துக் கொள்ளும் சக்தியை உடலுறுப்புகள் இழந்து விடும். மேலும் குறைந்த பட்ச தேவைக்கு அதிகமாக விழுங்கப்படும் வைட்டமின் மாத்திரைகள், கழிவுப் பொருளாக வெளியேறுமே தவிர, உடலில் சேமித்து வைக்கப்படுவதில்லை.

எனவே அந்த அந்த சீசனில் உள்ளதற்குள் மலிவாகக் கிடைக்கிற காய்கறி வகைகள், பழங்கள் சாப்பிட்டு வந்தாலே போதும். அதுவும் ஏராளமாக விழுங்க வேண்டுமென்பதில்லை. அளவாக உண்டு வரலாம்.

"அது சரி, காசுக்கு எங்கே போவது?" என்ற கேள்வி எழுந்தால், "நாளைக்கு டாக்டருக்குக் கொடுத்து அழுவதற்குப் பதில், இன்று காய் கறிக்குக் காசு செலவழிக்கலாமே" என்பது தான் உங்கள் எதிர் வாதமாக இருக்க வேண்டும்.

சும்மாவா சொன்னார்கள், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று! அதைத் தான் இந்த இதழ் அட்டைப்படத்தில் உள்ள சிறுமியும் இன்னொரு விதமாக வலியுறுத்திச் சொல்கிறான்.

அன்புடன்,

(கி. ராஜேந்திரன்)
ஆசிரியர்



**உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்**

— பாரதியார்.

கோகுலம்

மார்ச் 1998

இந்த இதழில்...

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ராணுவத்தினர் போல் உடையணிந்து, தொப்பி வைத்து வலம் வருபவர்களைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?

என்.சி.சி (National Cadet Corps) என்று சுருக்கமாக அழைக்கப்படும் தேசிய மாணவர் படையினர்தான் அத்தகைய உடைகளுக்குச் சொந்தக்காரர்கள்.

நாட்டில் நெருக்கடி நிலை ஏற்படும்போது, தன்னம்பிக்கையுடனும், கடமையுணர்வுடனும் எதிர்த்து நிற்க வேண்டும். அதற்காக மனத் துணிவும், ஒழுக்கமும் உடையவர்களாக மாணவர்களை உருவாக்க 1946–ஆம் ஆண்டு இத் திட்டம் உருவாக்கப்பட்டது. 1948– ஆம் ஆண்டு முதல் நம் நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தேசிய மாணவர் படையின் ஆரம்ப கால நோக்கம் நிறைவேறியதா, தற்போது அதன் செயல்பாடு என்ன என்பதை அறிய சென்னை அசோக்நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் என்.சி.சி பொறுப்பாளர் திருமதி ஆர்.சி. சரஸ்வதி அவர்களைச் சந்தித்தோம்.

உங்கள் பள்ளியில் தேசிய மாணவர் படை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

தேசிய மாணவர் படையின் முக்கிய குறிக்கோளே ஒற்றுமையும் ஒழுக்கமும்தான். சுதந்தரப் பொன் விழாவை குறிக்கும் வகையில் எங்கள் பள்ளியில் சென்ற வருடம்தான் தேசிய மாணவர் படை ஆரம்பிக்கப்பட்டது.

யார் வேண்டுமானாலும் சேரலாமா?

பொதுவாக விருப்பம் உள்ளவர்கள் சேரலாம். ஆனால் ஒரு பள்ளியில் மொத்தம் நூறு மாணவர்கள்தான் அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த நூறு பேரில் ஜூனியர் 50, சீனியர் 50 என நாங்கள் பிரித்திருக்கிறோம்.

ஆயிரம் பேருக்கும் அதிக மாணவர்கள் உள்ள பள்ளியில் நூறு



பேரை மட்டும் தேர்வு செய்வது எப்படி?

சாதாரணமாக ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளுக்குத்தான் வாய்ப்புக் கொடுக்கப்படும். ஆனால் எங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு என்பதால் எட்டு, ஒன்பது வகுப்பு மாணவிகளையே இதில் சேர்த்திருக்கிறோம்.

நீங்கள் எந்த முறையில் தேர்வு செய்கிறீர்கள்?

இரு நூறுக்கும் மேற்பட்டவர்கள் ஆர்வத்துடன் வந்தார்கள். அதில் நன்றாகப் படிக்கக் கூடிய, உடல் ஆரோக்கியமாக இருக்கக் கூடிய மாணவிகள் நூறு பேரை, அவர்கள் பெற்றோர்களின் அனுமதியுடன் சேர்த்துக் கொண்டோம். இதனால் படிப்பும் பாதிக்காது இல்லையா?

எல்லா பள்ளிகளிலும் தேசிய

நாட்டுப்பற்றை வளர்க்கும் தேசிய மாணவர் படை!



மாணவர் படை இருக்கிறதா?

எல்லா பள்ளிகளிலும் இருக்காது. தேசிய மாணவர் படை இயக்கத்திலிருந்து தேர்ச்சி பெற்ற ஆசிரியர் வழிகாட்டியாக இருந்தால்தான் அப்பள்ளிக்கு அங்கிகாரம் அளிப்பார்கள்.

பெண்களுக்கென்று தனியான பயிற்சிகள் உள்ளதா?

ஆமாம். பொதுவாக ஜூனியர் பிரிவு, சீனியர் பிரிவு, பெண்கள் பிரிவு என மூன்றாகப் பிரித்திருக்கிறார்கள். ஜூனியர் பிரிவு என்பது பள்ளியிலும், சீனியர் பிரிவு கல்லூரியிலும் இருக்கும். பெண்கள் பிரிவுக்கென்று தனியான பயிற்சிகள் உள்ளன. முதலுதவி, தகவல் தொடர்பு, மருத்துவ சேவை போன்ற சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

வருடத்திற்கு இத்தனை வகுப்புகள் நடத்த வேண்டும் என்று ஏதாவது விதி முறை இருக்கிறதா?

ஒரு வருடத்திற்கு 40 வகுப்புகள் நடத்த வேண்டும். ஒவ்வொரு வகுப்பும் இரண்டு மணி நேரம் இருக்கும்.

தேர்வுகூட உண்டா?

ஆமாம். முகாம் நடக்கும். இறுதியில் தேர்வு நடைபெற்று சான்றிதழ்களும் கொடுக்கப்படும்.

இதற்காக அரசு நிறைய செலவு செய்ய வேண்டியிருக்குமே?

ஆமாம். ஒரு மாணவர்க்கு வருடத்திற்கு 80 ரூபாய் அரசு செலவு செய்கிறது. மேலும் முகாம், தேர்வு ஆகியவற்றிற்கும் செலவாகும்.

என்.சி.சி மாணவர்களுக்கு துப்பாக்கிச் சுடுதல் பயிற்சியெல்லாம் அளிக்கப்படுகிறதே! நாட்டிற்கு நெருக்கடி என்றால் இவர்கள் பாடுபடுவார்களா?

என்ன இப்படி கேட்டுட்டீங்க! நிச்சயமாக அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் நாட்டைக் காக்க மாணவர் படையினர் போராடுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை!

நாட்டைக் காப்பதும், ஒழுக்கத்தை போதிப்பதும் மட்டும்தான் இதன் கொள்கையா?

முக்கிய நோக்கம் இதுதான். மேலும் உடல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை வளர்த்தல், தேசப் பற்றை ஊக்குவித்தல், சேவை மனப்பான்மையை உருவாக்குதல் போன்ற பல நல்ல அம்சங்கள் இதில் உள்ளன.

ஸ்கவுட், கைட்ஸ், என்.எஸ்.எஸ் போன்ற இயக்கங்களுக்கும் என்.சி.சி.க்கும் என்ன வித்தியாசம்?

ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு விதத்தில் முக்கியமானதே!

இதுபோன்ற இயக்கங்கள் மாணவர்களுக்கு அவசியம் தேவைதானா?

நிச்சயமாக. இயந்திர கதியில் ஓடிக் கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் நாட்டுப்பற்றை ஊட்டவும், சேவை மனப்பான்மையை உருவாக்கவும் இது போன்ற இயக்கங்கள் மாணவர்களுக்கு அவசியம் தேவை.

மாணவர் படையில் இருப்பவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் ஏதாவது வித்தியாசத்தை உணர்கிறீர்களா?

நீங்களே பழகிப் பார்த்தால் தெரியும். மாணவர்களுக்குத் தலைமையேற்று நடத்தக் கூடிய தகுதி இவர்களுக்குக் கிடைக்கிறது. மேலும் சில நெருக்கடிகளில் இவர்கள்தான் முன் வந்து உதவிகள் செய்கிறார்கள்.

பொதுவாக மாணவர் படையின் பயன்களைச் சொன்னீர்கள். மாணவருக்கு சொந்த வாழ்க்கையில் பயன் ஏதும் உண்டா?

என்.சி.சி. மாணவர்களுக்கு

''சிரிச்சதுக்காகவா நம்ம சுந்தரை டாக்டர் கிட்டே அழைச்சிட்டு போனாங்க?''

''ஆமாம். விழுந்து விழுந்து சிரிச்சதனால அடிபட்டுருச்சுடா.''

— பா. ஜெயக்குமார்



பிரகாசமான எதிர்காலம் உண்டு. பள்ளி, கல்லூரிகளில் சேரும்போதும், வேலைக்குச் செல்லும்போதும் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அதேபோல் ராணுவம், விமானப்படை, கப்பல் படை போன்றவற்றில் சேருவதற்கும்





இது ஒரு முக்கிய தகுதியாக மதிக்கப்படுகிறது.

இதைப் பற்றி மாணவர்கள் என்ன சொல்கிறார்கள்? பார்ப்போமா!

ஸ்ரீலக்ஷ்மி (எட்டாம் வகுப்பு)

நான் என்.சி.சி.யை மிகவும் நேசிக்கிறேன். டிசம்பரில் முகாமிற்குச் சென்று வந்தேன். இப்போது எங்கள் குழுவை தலைமை தாங்கி நடத்துகிறேன். இந்த உடையைப் போடும்போது தன்னம்பிக்கை வருது. நானோ எங்கள் பள்ளியில் யாராவது ஒருத்தரோ சிறந்த மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லி அணிவகுப்பிற்குச் செல்ல வேண்டும் என்பதே என் ஆசை. நான் கண்டிப்பாக ராணுவப் படை, கப்பல் படை, விமானப் படை போன்ற ஏதாவது ஒன்றில் சேர்ந்து நாட்டிற்காக சேவை செய்ய வேண்டும் என்பதே லட்சியம்.

சுகன்யா (எட்டாம் வகுப்பு)

இதில் சேர்ந்ததிலிருந்து எனக்கு நம் நாடு பற்றிய பெருமிதம், நாட்டுப் பற்று போன்ற உணர்வுகள் ஏற்பட்டன. நான் ஒரு ஐ.பி.எஸ் ஆக வந்து நாட்டுக்காக உழைக்கணும்.

விநு பார்கவி (எட்டாம் வகுப்பு)

முதல் முறையாக பத்து நாட்கள் முகாமிற்கு பெற்றோர்களைப் பிரிந்து சென்றிருந்தேன். முகாமில் பல்வேறு இடங்களிலிருந்து மாணவர்கள் வந்திருந்தனர். எல்லோரும் நன்றாகப் பழகினோம். ஒற்றுமையாக இருந்தோம். இது ஒரு நல்ல அனுபவம்.

ஜனனி (எட்டாம் வகுப்பு)

என்.சி.சி.யில் சேர்ந்தாலே நாட்டுக்காக நாமும் ஏதாவது செய்யணும் என்ற உணர்வு ஏற்படுது. படிப்பு பாதிப்பதில்லை. பெற்றோர்களிடமும், நண்பர்களிடமும் நல்ல வரவேற்பு இருக்கிறது.

படங்கள்: ஸ்ரீஹரி

புரிந்தது!



பிரபு எதைக் கேட்டாலும் உடனே அவன் அப்பா வாங்கிக் கொடுத்து விடுவார். ஒரே மகன் என்பதால் அதிக செல்லம். இவ்வளவுக்கும் பிரபுவின் அப்பா வசதியானவர் அல்ல.

இன்று அப்பா வந்தவுடன் தன் நண்பனிடம் உள்ளது போன்று ஒரு 'வீடியோ கேம்' வாங்கித் தரும்படி கேட்க வேண்டுமென நினைத்திருந்தான் பிரபு.

பிரபுவின் ஆசையை அறிந்த அப்பாவால் ஒன்றும் பேச முடியவில்லை.

மறுநாள் பிரபுவை தன்னுடன் தொழிற்சாலைக்கு அழைத்துச் சென்றார்.

பிரபுவை உட்கார வைத்து விட்டு அவன் அப்பா வேலை செய்ய ஆரம்பித்தார். சிறிது நேரம் கூட ஓய்வு இன்றி உழைக்கும் அப்பாவையே பார்த்துக் கொண்டிருந்தான் பிரபு.

மாலை வீடு திரும்பும் போது "உனக்கு வீடியோ கேம் வாங்குவதற்கு சிறிது காலம் காத்திருக்க முடியுமா?" என்று கேட்டார் பிரபுவின் அப்பா.

"அப்பா! உங்களுடைய கஷ்டத்தை நான் உணர்ந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று கண்கலங்கிய படி கூறினான் பிரபு.

— துரை. கார்த்திக்,
ஒன்பதாம் வகுப்பு
தேசிய மேல் நிலைப்பள்ளி
ராஜமன்னார்குடி.

கிழிந்த சட்டை!

சரணும், சந்துருவும் நண்பர்கள். சரண் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். சந்துரு பணக்காரன். வகுப்பில் இருவரும் எல்லாவற்றிலும் முதல் இடத்தில் இருப்பார்கள். சந்துருவிடம் தான் ஒரு பணக்காரன் என்ற நினைப்பு இருந்தது. அதனால் எல்லோரையும் கேலி செய்து சிரிப்பான். சரண் எவ்வளவு சொல்லியும் சந்துரு திருந்தவில்லை.

ஒரு நாள் அவர்களின் வகுப்பு மாணவன் ராஜா வந்து கொண்டிருந்தான். அவன் சட்டை சிறிது கிழிந்திருந்தது. அதைப் பார்த்த சந்துரு, "என்னடா மகா ராஜா பள்ளிக்கு கிழிந்த சட்டை



போட்டுக் கொண்டு வருகிறார்" என்று சொல்லி சிரிக்க, அதைப் பார்த்து மாணவர்கள் எல்லோரும் சிரிக்க, ராஜாவின் முகம் வாடியது.

சரண் ராஜாவிடம் சந்துருவுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

மறுநாள் சந்துரு மதிய உணவு இடைவேளையில் மேஜை மீது ஏறி உட்கார்ந்து

கொண்டு அங்கு வருகிறவர்களை கேலி செய்ய ஆரம்பித்தான். திடீரென ஆசிரியர் வரும் சத்தம் கேட்டதும் வேகமாக இறங்கினான். அப்போது மேஜையில் உள்ள ஆணியில் சட்டை இழுபட்டுக் கிழிந்தது. 'நாம் எல்லோரையும் கேலி செய்தோம். நம்மை யாராவது கேலி செய்வார்களோ' என்று தனக்குள் நினைத்துக் கொண்டே வந்தான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த சரண், "இந்தாடா, இந்த சட்டையைப் போட்டுக்க" என்றான்.

"எப்படி வந்தது இந்த புதுச் சட்டை?" என்றான் சந்துரு.

"தைக்கக் கொடுத்ததை காலையிலே பள்ளிக்கூடம் வரும்போது வாங்கினேன்" தயங்காதே, சீக்கிரம் போட்டுட்டு வா, பாடம் ஆரம்பிக்கப் போறாங்க" என்று சொன்ன நண்பனை நன்றியுடன் பார்த்தான் சந்துரு.

— கே. அனிதா,
எட்டாம் வகுப்பு,
இசையம்பலம் பள்ளி,
ஆரோவில், பாண்டிச்சேரி.

தடால் திருடன்!

பத்தாம் வகுப்புத் தேர்வு நெருங்கி விட்டது. எனவே ரவிக்கு படிப்பதற்காக விடுமுறை விட்டிருந்தார்கள். இரவு அதிக நேரம் படித்ததால் தாமதமாகக் கண் விழித்தான் ரவி. அதற்குள் அவன் அப்பாவும் அம்மாவும் வேலைக்குச் சென்று விட்டனர். அவன் தங்கை டிபன் வைத்திருப்பதாகக் கூறிவிட்டுப் பள்ளிக் கூடம் சென்றுவிட்டாள்.

மணி பத்தடித்தது. ரவிக்குக் கண் எரிச்சல். நல்ல பசி. குளித்துவிட்டு டிபன் சாப்பிடலாம் என்று முடிவு செய்து, குளியல் அறைக்குள் சென்றான். திடீரென்று ஏதோ சத்தம் கேட்டது. வீட்டில் யாரோ நடமாடுவது போல் ரவிக்குத் தோன்றியது. தூக்கக் கலக்கத்தில் வாசல் கதவை மூடாமல் குளிக்க தான் வந்துவிட்டதை ரவி புரிந்து கொண்டான். தலையில் அடித்துக் கொண்டான். இனி என்ன செய்வது?



ரவி லேசாகக் கதவைத் திறந்து பார்த்ததும் நடுங்கிவிட்டான். முன்பின் தெரியாத யாரோ ஒருவன் நடமாடுவது தெரிந்தது. திருடனாகத்தான் இருக்க வேண்டும். தானும் ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் திருடனையும் பிடிப்பது எப்படி என்று ரவி யோசித்தான். அப்போது சோப்பில் அவன் கால் பட்டு வழுக்கியது. உடனே அவன் மனதில் ஒரு திட்டம் உதித்தது.

திருடன் சந்தேகப்படாமல் இருக்க தண்ணீரை நன்கு திறந்து விட்டான். சோப்பை நன்றாகத் தண்ணீரில் கரைத்து அதைக் குளியலறை முழுவதும் மெழுகுவதுபோல் பரப்பினான். மேலும் சோப்புக் கட்டியையும் அந்த அறையின் தரையில் நன்கு பரவலாகத் தேய்த்தான்.


மெதுவாக குளியல் அறைக் கதவைத் திறந்தான். உள்ளே இருந்தபடியே "திருடன், திருடன்" என்று கத்தினான். திகைத்துப் போன திருடன் குளியல் அறையை நோக்கிப் பாய்ந்து வந்தான். ரவியின் வாயை அடைத்துவிட வேண்டும் என்று வேகமாக வந்த திருடன், குளியல் அறையினுள் காலை வைத்ததும், 'தடால்' என்று வழுக்கி விழுந்து விட்டான். உடனே ரவி ஜாக்கிரதையாக வெளியேறிக் குளியல் அறைக் கதவை மூடி வெளியில் தாழ்ப்பாள் போட்டான்.

திருடனை சாமர்த்தியமாகப் பிடித்த ரவியை அனைவரும் பாராட்டினர்.

— து. கங்காதேவி,
சூளை, சென்னை.

❖ குழந்தைக் கவிஞரின் நினைவு நாள் விழா கோகுலம் சிறுவர் சங்கம் சார்பில் எங்கள் பள்ளியில் நடத்தப்பட்டது. மாணவர்களே நிதி வசூல் செய்து ஊனமுற்ற மாணவர்களுக்கு ஊன்று கோல்கள் வாங்கிக் கொடுத்தனர்.

– க. ராஜமாணிக்கம்,
தலைமை ஆசிரியர்,
அரசினர் ஆண்கள் மேல்
நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.



❖ எங்கள் பள்ளியில் படிக்கும் அமைதி விரும்பி என்ற மாணவன், தன்னுடைய பிறந்த நாளுக்கு 13 கதைப் புத்தகங்களை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான்.

– சிவ. பாக்யா, ஐந்தாம் வகுப்பு,
ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி,
கருப்பம்புலம்.

❖ 16 வயதாகும் கோகுலத்தின் பழைய வாசகர்களின் மலரும் நினைவுகளை வெளியிட்டிருந்தீர்கள். எனக்குள்ளும் பழைய நினைவுகள் மலர்ந்தெழுந்தன.

கோகுலத்திற்குப் பெயர் வைப்பவர்களுக்கு கொழுக்கட்டைப் பிரசாதத்துக்குள்ளே பொற்காசு வைத்து பரிசு தருவதாக அறிவிப்புச் செய்தீர்கள்! அப்போது இருந்தே நான் கோகுலம் வாசகன். (இப்போது எனக்கு 33 வயதாகிறது) அடேயப்பா! அப்போது கோகுலம் எப்படி வண்ணமயமாக இருக்கும் தெரியுமா? 'பலே பாலுவும், பாட்டில் பூதமும்' போன்ற கதைகள் குழந்தைகளின் மனங்களைக் கொள்ளை கொண்டனவே!

எட்டாம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வு. ஒவ்வொரு நாளும் இரண்டிரண்டு தேர்வுகள். வகுப்பில் முதல் இரண்டு இடங்களில் தேறினால்தான் National Talent Test என்ற Scholarship தேர்வு எழுத முடியும். தேர்வுக்கு முதல் நாளே "கோகுலம்" வந்து விட்டது. (அப்போது மாதமிருமுறை என நினைவு). மூன்று நாளும் கோகுலத்தைப் படிக்காமல், பாடத்தைப் படித்து நன்கு தேர்வு எழுதியது மூச்சடக்கி (நீரில்) மூழ்கியிருந்த சாதனைதான்!

– இ.க. பாலசுப்பிரமணியன், கீழ்நத்தம்
அஞ்சல், நெல்லை மாவட்டம்.

❖ கொலைகாரச் செடிகள் படமும், கட்டுரையும் வெகுவாகக் கவர்ந்தன.

– ம. சண்முகம், ஏழாம் வகுப்பு,
திண்டிவனம்.

❖ பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் எனக்கு, துருவப் பிரதேச விலங்குகள் என்ற பாடத்திற்கு குறிப்பெடுக்க 'சீல்கள் தத்தெடுக்குமா?' என்ற கட்டுரை மிகவும் உதவியது.

– ரா. ஞானசேகரன், பன்னிரெண்டாம்
வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல் நிலைப்
பள்ளி, வத்தலக்குண்டு.

❖ சோம்பேறிகளுக்கு என்ன பரிசு, எஸ்.ஆர்.தி. சுந்தரம் அவர்களின் பட்டம் நாடகம் ஆகியன கருத்து நிறைந்தவை.

– ராஜிராதா, பெல் டவுன்ஷிப், திருச்சி.

❖ பரீட்சைக்குத் தயாராகும் எங்களைப் போன்ற மாணவர்களின் பிரச்னைகளையும் ஆலோசனைகளையும் வெளியிட்டு எங்களின் எண்ணத்தைப் பிரதிபலித்து விட்டீர்கள்.

– க. வளர்மதி, பன்னிரெண்டாம் வகுப்பு,
ஒத்தக்கடை.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1998

K. Rajendran
Publisher

முதல் முறையாக...



ஏழாம் வகுப்பை நோக்கி ஆங்கில ஆசிரியர் திருத்திய விடைத்தாள்களுடன் வருவதைச் சன்னல் ஓரத்தில் இருந்த மாணவன் பார்த்து விட்டான்.

"சார் பேப்பரோட வராரு" என்று கொஞ்சம் குரலை உயர்த்தி மற்றவர் காதுகளில் விழும்படி சொல்லிவிட்டு அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்து கொண்டான்.

சற்று முன் வரை இருந்த சலசலப்புகள் மாறி வகுப்பே 'கப்-சிப்'பென்று ஆகிவிட்டது.

முன் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருந்த இளவேனிலின் கண்கள் அடிக்கடி வாயிற்படி பக்கமாகச் சென்று, அந்த ஆசிரியர் வருகையை எதிர்பார்ப்பது தெரிந்தது. அவள் முகம் வெளிறிப் போயிருந்தது.

இதோ, ஆங்கில ஆசிரியர் வகுப்புக்குள் வந்து விட்டார்.

அறுபத்தைந்து மாணவ, மாணவியர் படிக்கும் அந்த ஏழாம் வகுப்பின் ஆங்கில விடைத்தாள்களை அவர் அப்போதுதான் திருத்தி முடித்துக் கொண்டு வந்திருந்தார்.

விநாடிகள் யுகங்களாக மாணவர்களுக்குத் தோன்றின! மாணவர்களின் பொறுமையை நெடு நேரம் சோதிக்க ஆசிரியர் விரும்பவில்லை. 'சடக்'கென்று எழுந்து, மேசையின் முன்புறம் வந்து நின்று கொண்டார். வகுப்பு முழுவதுமாக எல்லாரையும் ஒருமுறை நோட்டம் விட்டார்.

"பேப்பர் சார்!" கொஞ்சம் நன்றாகப் படிக்கும் கலையரசன் சற்றே துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டான்.

விடைத்தாளை வரிசையாகக் கொடுக்க ஆரம்பித்தார்.

இதுவரையில், பத்து மாணவர்களைத் தவிர, எவருடைய முகத்திலும் தேர்ச்சிப் பெற்றதற்கான மகிழ்ச்சிக் குறி தென்படவில்லை.

இளவேனிலின் இதயத் துடிப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது.

இதோ, இளவேனில் எண்ணைச் சொல்லி ஆசிரியர் அழைத்தார். இளவேனிலும் தயங்கித் தயங்கி ஆசிரியர் அருகில் வந்து நின்றாள். அவர் முகத்தைப் பார்க்கும் துணிச்சல் அவளுக்கு இல்லை. விடைத்தாள் 'கை'க்கு வந்ததும், 'என்ன மதிப்பெண்' என்று பார்க்கும் ஆவலும் இல்லாமல் தன் இருக்கைக்குச் சென்று உட்கார்ந்தாள்.

உடனிருந்த தோழிகள், "காட்டுடி இளவேனில், எத்தனை மார்க்கு?" என்று கிசுகிசுத்தனர். அவள் காட்டவில்லை. "இப்படித்தா, நான் பார்க்கிறேன்", என்ற தன் தோழி கல்பனாவிடமும் தரவில்லை.

இரா. வேங்கடேசன்



இதற்குள் மற்ற எல்லாருடைய விடைத்தாள்களும் தரப்பட்டு விட்டிருந்தன.

"பார்த்தாச்சா? ஏதாவது 'கரெக்ஷன்' இருந்தா இப்பவே சொல்லிடணும். 'ரேங்க்' போட்ட பிறகு மாத்த முடியாது." ஆசிரியரின் எச்சரிக்கைக்குப் பிறகு இளவேனில் விடைத்தாள் மடிப்பை மெல்லப் பிரித்தாள்.

என்ன ஆச்சர்யம்! நூற்றுக்கு முப்பத் தைந்து கிடைத்திருந்தது. முதல் முறையாக ஆங்கிலப் பாடத்தில் அவள் தேறியிருந்தாள்! ஆசிரியரின் கட்டளைப்படி பார்த்தால் 'கரெக்ஷன்' வழியாக மேலும் ஒன்றிரண்டு கிடைக்கலாம் என எதிர் பார்த்து, பெற்ற மதிப்பெண்களைக் கூட்டிப் பார்த்தாள். .

'அடடா! இதென்ன? முப்பது மதிப்பெண்கள்தானே வருகின்றன.' மறுபடியும் கூட்டினாள்.... அதேதான்! இளவேனில் முகம் சுருங்கியது.

'ரேங்க் வாங்கும் தனது நீண்ட நாள் லட்சியம் இப்போதுதான் நிறைவேற உள்ளது. அதிகமாக இருக்கிறது என்று கூறித்திருத்திக் கொள்ளலாமா? வேண்டாமா?' இப்படி ஒரு போராட்டம் இளவேனில் மனதில் எழுந்து குழப்பியது.


இளவேனில் எண்ணங்களில் அலைந்து கொண்டு இருக்கும்போது, 7048 என்ற எண்ணைச் சொல்லி ஆசிரியர் அழைத்தார். 'விருட்'டென்று இளவேனில் எழுந்து, சென்று தன் விடைத்தாளைத் தரும் போது, "மார்க் அதிகமா இருக்கு சார்!" என்றாள்.

"அப்படியா?" என்று பிரித்துப் பார்த்துக் கூட்டினார். பிறகு நூற்றுக்கு முப்பது என மாற்றி விட்டுப் பக்கத்தில் கையொப்பமும் இட்டார்.

இளவேனில் அமைதியாகத் திரும்பினாள்.


"பேசாம இருக்க வேண்டியதுதானே? முதல் முதலாகக் கிடைச்ச 'ரேங்கை'த்

"என்ன ரொம்ப குஷியா இருக்கே?"
"நான் எடுத்த படத்திற்கு தேசிய விருது கிடைச்சிருக்கு, அதான்!"
—ப. சரவணமுத்து, பொன்னமராவதி.



தொலைச்சிட்டியே!" என்று கல்பனா இளவேனிலைத் திட்டினாள்.

"முப்பது மார்க் வரைக்கும் கஷ்டப்பட்டு முன்னேறி வந்துட்டேன். இன்னும் ஒரு ஐந்து மார்க்கை இன்னும் கொஞ்சம் கவனமாப் படிச்சு அடுத்த பரீட்சையிலே வாங்கிடுவேன்னு எனக்கு



நம்பிக்கை இருக்குடி கல்பனா. இந்த மாதிரி மார்க் எனக்கு வேண்டாம்."

அடுத்த நாள். ஆங்கில ஆசிரியர்தான் ஏழாம் வகுப்புக்குப் பொறுப்பாசிரியர். மாணவர்களின் தகுதியை வரிசைப்படுத்தியிருக்கும் அட்டைகளை, முதல் நாள் அறிவித்தபடியே வழங்கத் தயாரானார்.

"ஆங்கிலத்தால் 'ரேங்க்' பெற முடியாமல் போன முப்பத்திரண்டு பேர்களும் கடுமையான முயற்சியை மேற்கொண்டால்தான் அடுத்த வகுப்புக்குப் போக முடியும்" என்றார். சிறிது நேரம் வகுப்பு முழுவதையும் கவனித்தார். மாணவர் பலரின் முகங்கள் பரிதாபமாகக் காட்சியளித்தன.

"நீங்கள் தேவையில்லாமல் ஆங்கிலத்தைக் கண்டு பயப்படுவதை விட்டு விடுங்கள். பயப்படாமல் என்னிடம் சந்தேகத்தைக் கேளுங்கள்" என்று ஆதரவாகக் கூறினார்.

'ரேங்க் கார்டு'களை வழங்கி வரும் போது, "இளவேனில் பத்தாவது 'ரேங்க்'" என்றதும் அதுவரை துயரமாக இருந்த இளவேனில் திடுக்கிட்டுத் திகைத்துப் போனாள்.

ஆங்கிலத்தில் 'பெயிலாகி' இருக்கும் போது எனக்கு 'ரேங்கா?' என்று நினைத்தபடி இளவேனில் வெற்றியாளர் பட்டியலோடு இருந்த தனது அட்டையைப் பெற்றுக் கொண்டாள்.

ஆங்கிலத்தில் நூற்றுக்கு முப்பத்தி ஐந்து என்று குறிக்கப்பட்டிருந்தது.

"சார்! நான் முப்பதுதான் வாங்கியிருந்தேன்." இளவேனில் அட்டையைக் காட்டிக் கேட்டாள். ஆசிரியர், 'அது சரிதான்' என்பது போல தலையாட்டினார். பின் காரணத்தையும் விளக்கினார்:

"வகுப்பில் நடத்தப்படாத பாட வினா ஒன்று வினாத்தாளில் இடம் பெற்றிருந்தது. அதை எழுத முயற்சி செய்திருந்தவர்களுக்கு எல்லாம் ஐந்து மதிப்பெண்களைக் கூட்டிப் போடும்படி தலைமை ஆசிரியர் கூறியுள்ளார்."

இளவேனிலும் மேலும் நாலைந்து பேர்களும் இதுபோல மதிப்பெண் கூடுதல் பெற்றவர்களில் இருந்தார்கள். அவர்கள் எல்லாருமே இந்த மதிப்பெண்ணால் தேர்ச்சியும் பெற்றிருந்தார்கள்.

"இளவேனில்! நீ தேர்ச்சி பெற்றதைவிட உன் நேர்மையைத்தான் நான் பெரிதாகப் பாராட்டுகிறேன்" என்றார் ஆசிரியர்.


கல்பனா 'உன் நேர்மைக்குக் கிடைத்த பரிசு' என்று பாராட்டினாலும் இதுவரையில் தூங்கிக் கிடக்கும் சுயமுயற்சியைத் தூண்டிவிட இது தனக்குக் கிடைத்த ஊக்கமாகவே கருதினாள் இளவேனில்.

எங்கள் ஊரில் நடந்தது!



ஏட்டுச் சுரைக்காய்!

எங்கள் வீட்டு ஓட்டில் சுரைக் கொடி படர்ந்திருந்தது. ஓட்டு மீது பெரிய சுரைக் காய் இருப்பதைப் பார்த்த அம்மா என் தம்பியை மேலே ஏற்றி, பறிக்கச் சொன்




னார். அவனோ "ஏம்மா இவ்வளவு கஷ்டப்பட்டு சுரைக்காய் பறிக்கணுமா?" என்று கேட்டான். அதற்கு, "நம்ம வீட்டிலேயே தண்ணீர் ஊற்றி வளர்த்த கொடியில் காய்த்த காயைப் பறிக்க வேண்டாமா?" என்றார் அம்மா. "அம்மா இது ஓட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்றான். "உன் புத்தகத்தை நல்லாப் பாருடா. ஏட்டுச் சுரைக்காய்தான் உதாவது. ஓட்டுச் சுரைக்காய் உதவும்" என்றார் அம்மா. பிறகு ஒரு வழியாக அவன் பறித்துக் கொடுத்தான்.

ஜெ. மகேந்திரன், ரெய்ச்சூர், கர்நாடக மாநிலம்.

மழையில் நனையாமல் இருக்க...

எங்கள் கிராமத்தில் குடை வியாபாரத்திற்காக ஒவ்வொரு வீட்டிலும் விளம்பரம் எழுதி வந்தனர், அந்தக் குடைத் தயாரிப்பாளர்கள். பக்கத்து வீட்டில் விளம்பரம் வரைந்ததைக் கண்ட அந்த வீட்டார் சத்தம் போடத் தொடங்கினர். "விளம்பரம் செய்யக்கூடாது என்று எழுதியிருக்கிறோமே, கண் தெரியவில்லையா?"




என்று சண்டை போட்டனர். குடை விளம்பரக்காரர்களில் ஒருவர் "விளம்பரம் செய்யக் கூடாது என்று நீங்கள் எழுதியிருப்பது மழையில் அழியக் கூடாதென்னுதான் குடையை வரைந்தோம்" என்றார். பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு அதிகக் கோபமும் எங்களுக்கெல்லாம் சிரிப்பும் ஏற்பட்டது.

சி. லோகேஸ்வரி, வெள்ளையாம்பட்டு.

சன்டே போறேன்!

நான் வெளியூரில் படிக்கிறேன். விடுமுறைக்கு வீட்டிற்கு வந்திருந்தேன். என் நண்பன் என்னைப் பார்க்க வந்திருந்தான். சிறிது




நேரம் பேசிவிட்டுக் கிளம்பும்போது "எப்படா ஊருக்குப் போறே?" என்றான். "சன்டே ஊருக்குப் போறேன்" என்று பதில் கூறினேன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த பாட்டி "ஏண்டா அந்த ஊர்ல சண்டையாயிருந்தால், இப்ப போக வேண்டாம். இன்னும் ஒரு வாரம் கழிச்சு சண்டை முடிஞ்ச பிறகு போகலாம்" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன சொல்றீங்க?" என்றேன். "நீதானே சண்டை, போறேன்னு சொன்னே," என்றார் பாட்டி. " ஞாயிற்றுக் கிழமையைத்தான் ஆங்கிலத்தில் சொன்னேன்" என்று புரிய வைத்தேன்.

சுதாகர், துத்திப்பட்டு கிராமம்.

பன்ரொட்டி!

நான், அம்மா, அப்பா, தம்பி அனைவரும் ஊருக்குச் சென்றோம். பஸ்ஸில் ஏறியதும் தம்பி தூங்கி விட்டான். சிறிது நேரம் கழித்து கண்டக்டர் "எங்கே போகணும்?" என்று கேட்டார் டிக்கெட் தருவதற்கு. "பண்ருட்டி நாலு கொடுங்க" என்றார்



அப்பா. தூக்கத்திலிருந்து எழுந்த தம்பி "அப்பா எனக்கு ரெண்டு பன், ரொட்டி வேண்டும்" என்றானே பார்க்கலாம்!

வ. உமா சங்கரி, சிவயோகபுரம், புதுக்கோட்டை மாவட்டம்.

வேணி வருமா?

எங்கள் ஊருக்கு வேணி என்ற பஸ் ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை வந்து போகும். நாங்கள் டவுனுக்குப் போக பஸ் நிறுத்தத்திற்கு வந்து சேர்ந்தோம். ஏற்கெனவே என் தோழியின் அப்பா அங்கு நின்று கொண்டிருந்தார். நான் அவரிடம் சென்று "மாமா, வேணி வரலையா?" என்றேன். "நானும் அதுக்காகத்தான் காத்துக்



கிட்டிருக்கேன்" என்றார். "மாமா நான் உங்க பெண் வேணியைக் கேட்டேன்" என்றவுடன் "அவ வரலைம்மா" என்றார்.

சு. கௌரி, திருவண்ணாதபுரம், நெல்லை மாவட்டம்.

சுப்பிரமணியன் நல்ல பையன். விஷமம் பண்ணும் சிறுவர்களின் அம்மா, அப்பா அவர்களிடம், 'சுப்பிரமணியனைப் பாருடா, எவ்வளவு நல்ல பையனாக இருக்கிறான்!' என்று சொல்லும் அளவு அத்தெருவில் எடுத்துக் காட்டாக இருந்தான். படிப்பிலும் சராசரிப் பையன்களை விடக் கெட்டிக்காரனாகவே இருந்து வந்தான்.

இவனிடம் உள்ள ஒரே குறை, பயந்த குணம். பகலானால் பரவாயில்லை, இரவுகளில் தாத்தா சொல்லும் பேய்க்கதைகளை காது கொடுத்துக் கேட்கமாட்டான்; எழுந்து சென்று விடுவான். இரவு ஏழு மணிக்கு மேல் எவர் வாயிலிருந்தும் 'பாம்பு' என்னும் சொல் வரக் கூடாது.

இத்தனைக்கும் அவனுடைய அப்பா போலீஸ்காரர். பெரிய மீசையும், கம்பீரமான உருவமுமாய் இருப்பார். அவனுக்கு அப்பாவிடம் மட்டும் பயம் கிடையாது. அவர் மாதிரி நல்ல மனிதர் உலகில் இருக்க முடியாது என்பது அவனுடைய தீர்மானமான எண்ணம்.

போலீஸ்காரருக்கு பயந்தாங்கொள்ளியாக சுப்பிரமணியன் மகனாகப் பிறந்துள்ளது குறித்து, தெருவாசிகளுக்கு வியப்புதான்.

இரவு படுத்தால் எப்போது கோட்டானின் குரல் கேட்குமோ என்ற பயம் சுப்பிரமணியனுக்கு பற்றிக் கொள்ளும்.

ஒரு நாள் இரவு மணி ஒன்பதரைக்குப் படுத்தபோது, மனதுள் இனம் தெரியாத பயம். விளக்கு ஒளியில் பார்த்தபோது, சுவரில் நிழல் ஒன்று ஆடியது. "அம்மா!" என்று படுத்தபடியே அலறினான். என்னவோ, ஏதோ என்று அவனுடைய அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா அனைவரும் விரைந்து வந்தனர்.

"என்னடா?"

பயத்துடன் அந்த நிழலைப் பார்த்தான்.

"அதுக்கு என்ன?"

திருவாழத்தான்



பயம் என்னும் பேய்...



"அதைப் பார்த்தால் பயமா இருக்கு."

"பார்க்காதே அதை" அப்பா சொன்னார்.

"வேறு எதையோ கண்டு பயந்திருக்கான்" என்றார் தாத்தா.

"எதுக்குத்தான் பயப்படறதுன்னு ஒரு விவஸ்தையே கிடையாதா?" என்று சொல்லிய பாட்டி, திருநீறு எடுத்து வரச் சென்றார். அம்மாவும் கிளம்பினார்.

"போகாதிங்க, அம்மா!" கெஞ்சினான்.

"போகாமல் என்ன பண்ணறது? அடுப்படிக் காரியங்கள் எல்லாம் யார் பார்க்கறது?"

"நான் பக்கத்துலே இருக்கேன். நீ போ காமாட்சி" என்று சொல்லிவிட்டு, பாட்டி அவனுடைய நெற்றியில் திருநீறைப் பூசி, உச்சந்தலையில் சிறிது தூவி, வாயைத் திறக்கச் சொல்லி போட்டார்.

மறுநாள் சமையலறையில் புத்தகங்களுடன் படிக்க வந்தான் சுப்பிரமணி.



"என்னடா?" வேலையைக் கவனித்தபடி கேட்டார் அம்மா.

"அங்கே படிக்க பயமா இருக்கம்மா!"

"ஏழாவது படிக்கிற பையன் பயப்படலாமா?"

"இங்கே இருந்து கொண்டுதான் படிப்பேன்."

"சரி. அப்படி ஓரமா உட்கார்ந்து படி."

அப்பா வந்தார். "என்னடா சமையலறையில் உட்கார்ந்து கொண்டு படிக்கிறே?"

அவன் பதில் சொல்லவில்லை. அம்மா சொன்னார், "நிழலைக் கண்டு பயப்படறான். ஏன்னு தெரியலே. பகல்லே சாதாரணமா இருக்கிறான். இரவு விளக்குப் போட்டதும் பயம் வந்து விடுது."

"எதையாவது பார்த்துப் பயந்திருப்பான்" என்று சொன்ன அப்பா, "ஏண்டா, எதைப் பார்த்தாவது சட்டென்று மிரண்டாயா? பயம் என்பது நம் மூளையில் இருக்கும் ஒரு உணர்வு. அதே போல தைரியமும் நம் மூளையில்தான் இருக்கிறது."

"ராத்திரி ஆச்சுன்னா, பயம் வருதுப்பா!"

"அது எங்கிருந்து வரும்? உன்னிடமே இருக்கும் போது, வெளியிலிருந்து வரவே தேவை இல்லை. வயசுப் பையன் பயப்படலாமா? பயப்படறவங்களுக்குத் துணையாக இருக்க வேண்டிய வயது. அதுவும் ஒரு போலீஸ்காரர் மகன் பயப்படறான்னா, ஊர் சிரிக்கும். எனக்கு அவமானம்."

அவன் பதில் ஏதும் பேசவில்லை.

பக்கத்து வீட்டு சுமதி அக்கா பாரதியின் ரசிகை. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி நாள் முழுதும் பேசுவதற்கான அத்தனை சமாச்சாரங்களும் அவளிடம் இருந்தன. பாரதியின் கவிதைகள், வசனங்கள், கட்டுரைகள் என்பதான மூன்று நூல்களையும் எடுத்து வைத்துக் கொண்டு புரட்டிக் கொண்டே இருப்பவள். பல கவிதைகள் அவளுக்கு

மனப்பாடம். பாரதியின் வார்த்தைகளை மேற்கோள் காட்டுபவள். ப்ளஸ் டூ படிக்கிறாள். சென்ற ஆண்டு பள்ளி ஆண்டு விழாவின் போது, மேடையில் தனி ஒருத்தியாக பாரதியின் பாஞ்சாலி சபதம் முழுவதையும் நாடகமாக நடித்துக் காட்டியவள்.

சுப்பிரமணியனின் பயத்தைக் கேள்விப் பட்டு, அவனைப் பார்க்க சுமதி அக்கா வந்தாள். விவரத்தைத் தெரிந்து கொண்டாள்.

"நாளைக்கு சனிக்கிழமை, இல்லையா? பள்ளி விடுமுறை. நாளை இரவுக்குள் உன் பயத்தை விரட்டிக் காட்டறேன், பார்!" என்றாள் சுமதி அக்கா.

"எப்படி?" சுப்பிரமணியன் ஆர்வத்துடன் கேட்டான்.

"அதெல்லாம் உனக்கு எதுக்கு? நாளைக்குக் காலையிலே எட்டரை மணிக்கு வருவேன். குளித்து விட்டுத் தயாராக இரு."

மறுநாள் காலையில் சொன்னது போல சுமதி வந்து விட்டாள். அவளுடன் சுப்பிரமணியனின் நண்பர்கள் வந்தனர்.

"என்ன சுமதி?" எதிரே வந்த அம்மா கேட்டார்.

"பஜனை பண்ணப் போறோம்!"

"பஜனையா? எதுக்கு?"

"உங்க மணியின் பயத்தைப் போக்குவதற்கு."

"அப்படியா? நானும் உன் பஜனையிலே கலந்துக்கலாமா?"

"ஓ! மாமா இருந்தால் அவரையும் கூப்பிடுங்கள். தாத்தா, பாட்டியும் கலந்துக்கலாம்."

"மாமா வெளியே போய்விட்டார். தாத்தாவும் பாட்டியும் இருக்காங்க. கூப்பிடறேன்."

நடுக்கூடத்தில் பாய்கள் விரிக்கப்பட்டன. சுப்பிரமணியன் சுவர் ஓரமாக உட்கார வைக்கப்பட்டான். அவன் எதிரே அனைவரும் அமர்ந்தனர்.

"மணி, நீயும் சேர்ந்து எங்க கூடப் பாடணும்" என்றாள் சுமதி அக்கா.

முதல் பாட்டை அவள் மட்டும் தனியாகப் பாடினாள். கணீர் என்று இருந்தது குரல். பாரதியின் விநாயகர் நான்மணி மாலைப் பாடல் அது.

"நிச்சலும் வாழ்ந்து,
நிலைபெற்று ஓங்கலாம்;
அச்சம் தீரும்,
அமுதம் விளையும்"

பாடலின் இந்த வரிகள் காதுகளில் விழுந்ததும், சுப்பிரமணியனின் உடலில் ஒரு விதப் பரவசம் பாய்ந்து உச்சந்தலை முதல் உள்ளங்கால்கள் வரை சென்றது.

"அடுத்த பாடல் 'ஜெயபேரிகை' என்றாள் சுமதி அக்கா. அவள் பாடியதும், வரி வரியாக மற்றவர்கள் பாட வேண்டும் என்று கூறினாள்.

"ஜெய பேரிகை கொட்டடா!" – சுமதி.

"ஜெய பேரிகை கொட்டடா!" – அனைவரும் பாடினர்.

குரலை உயர்த்தினாள் சுமதி. "பயம் என்னும் பேய்தனை அடித்தோம்...."

கூடி இருந்தோரும் தங்கள் குரலை உயர்த்தினர். "பயம் என்னும் பேய்தனை அடித்தோம்..."


இப்போது மிக உச்ச ஸ்தாயியில் குரலை சுமதி உயர்த்த, "பயம் என்னும் பேய்தனை அடித்தோம்..." என்னும் அடி அக்கூடம் முழுதும் நிரம்பி அறை நிலைகளைத் தாண்டி வீட்டில் புகுந்து, ஜன்னல்கள் வழியாக வெளியே சென்றது.

"பயம் என்னும் பேய்தனை அடித்தோம்" பாட்டின் இசை விலகி, அது மந்திரம் போல் வசனம் ஆகியது. திரும்பத் திரும்ப அவ்வரியை வசனமாகச் சொன்னார்கள். சுப்பிரமணியன் புதுப் பையனாக ஆனான்.

அப் பாடல் முடிந்ததும் 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பது இல்லையே' என்னும் பாடலை சுமதி எடுத்துக் கொண்டாள்.

வானம் அதிர்ந்தது.
பூமி குலுங்கியது.

பஜனையும் முடிந்தது. எல்லாரும் சுப்பிரமணியனின் முகத்தைப் பார்த்தார்கள். அவன் நாணத்துடன் புன்னகை புரிந்தான். சற்று நேரத்துக்கு முன் அவனுடைய முகத்தில் தேங்கி இருந்த பயம் இப்போது இல்லவே இல்லை. முகம் பளிச்சென்று இருந்தது.




"நம்ம ரகு, நாய் வளர்க்கறான்டா!"

"ஓ. நாயா?"

"ஓநாய் இல்லடா, நாய் தான் வளர்க்கறான்!"

— பா. ஜெயக்குமார், வந்தவாசி.



பின்விளைவு!

வாசலில் குரல் கேட்டு வெளியே வந்தார் செல்வனின் அப்பா. அங்கு வயதான ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார்.

"யாருங்க? உங்களுக்கு என்ன வேண்டும்?"

"ஐயா, நான் உங்க மகன் படிக்கிற பள்ளிக்கூட வாசலில் தின்பண்டக் கடை வைத்து நடத்தி வருகிறேன்" - நிறுத்தினார் பெரியவர்.

"சரிங்க. என்ன! ஏதாவது உதவி வேணுமா?

"என் பிழைப்புல மண் விழுந்துடுச்சு. இப்ப என் கடையில பசங்க யாரும் எதுவும் வாங்கிச் சாப்பிடுவதில்லே."

"ஏன்?" என்றார் செல்வனின் அப்பா உண்மையான குழப்பத்தோடு.

"நான் விற்கும் பொருள்களில் ஈ மொய்க்கிறதாம். சுத்தமாயில்லையாம்."

"ஈ மொய்க்கிற பண்டத்தைச் சாப்பிடக் கூடாது என்ற முடிவு சரிதானே! சரி. அதுக்கு நான் என்ன செய்யட்டும்?"

"என் கடையில வியாபாரம் நடக்க விடாமல் பண்ணினதே உங்க பையனும் ஒரு ஆசிரியரும்தானுங்க."

செல்வனின் அப்பா செய்வதறியாது நின்றார்.

"ஐயா! எனக்கு யாரும் கிடையாது. வயசு வேற அதிகமாயிடுச்சு. ஏதோ என்னால முடிஞ்ச தின்பண்டத்தை செஞ்சு

பள்ளிக்கூட வாசல்ல வைச்சு விக்கிறேன். எனக்கு இதை விட்டா பிழைப்புக்கு வேற வழி தெரியாது. உழைச்சே சாப்பிட ணும்னு நினைக்கிறேன். உங்க மகனால வந்த பிரச்னைக்கு நீங்கதான் ஒரு வழி சொல்லணும்" என்றார் பெரியவர் பணிவு டன்.

"பெரியவரே! எனக்கு நீங்க சொல்லித் தான் விஷயமே தெரியும். போயிட்டு அப்புறமா வாங்க. பையனோட பேசி விவரம் கேட்டு வைக்கிறேன்" என்று பெரியவரை அனுப்பி வைத்தார் அப்பா.

நூலகம் சென்று திரும்பிய செல் வனிடம் பெரியவரின் பிரச்னை பற்றிக் கேட்டார் அப்பா.

"அவர் சொன்னது உண்மைதான். புதுசா அறிவியல் ஆசிரியர் ஒருத்தர் வந்திருக்கிறார். ஒருநாள் வகுப்பில் சுற்றுச் சூழலைப் பற்றிக் கூறினார். அப்போது நான் எழுந்து "சார், நம்ம பள்ளிக்கூட வாசல்ல கூட ஈ மொய்க்கிற தின்பண்டங் கள் விற்கப்படுது. அவைகளைச் சாப்பிட் டாலும் கெடுதிதானே?" என்றேன். அவ ரும் அதை "ஆமாம்" என்று ஆமோதித்து விட்டு "இனி யாரும் ஈ மொய்த்த பண் டங்களைச் சாப்பிடக் கூடாது" என்றார். இந்த விஷயம் பள்ளி முழுவதும் பரவியது. பெரியவரின் வியாபாரமும் பாதிக்கப்பட் டது. இதுனால இப்படி ஒரு பின்விளைவு ஏற்படும்ன்னு நாங்க நினைக்கலே" என்றான் செல்வன் பரிதாபமாக.

"நீங்க செஞ்சது நல்ல காரியம்தான். ஆனால் அவருடைய நிலையும் பரிதாப மாக இருக்குதே?" என்றார் அப்பா.

"எனக்கும் மனசு உறுத்தலா இருக்கு. ஏதாவது உதவி செய்ய யோசனை சொல் லுங்கப்பா" - செல்வன்.

"எனக்கு ஒண்ணும் தோணலை. உங்க ஆசிரியரிடமே இது பற்றிப் பேசி, ஒரு முடிவுக்கு வாங்க. அவருக்கு ஏதாவது பண உதவி செய்ய முடிவு செஞ்சிங் கன்னா நான் கணிசமான தொகை தருகிறேன்" என்றார் அப்பா.

மறுநாள் அறிவியல் ஆசிரியருடன் விவாதித்தான் செல்வன்.

"நல்ல காரியம் செய்யும்போது இம் மாதிரி மனிதாபிமானப் பிரச்னைகள் ஏற்படுவதுண்டு. அந்தப் பெரியவரின் பிரச்னையை எப்படித் தீர்க்கலாம் என்ப தற்கு நீங்களே ஒரு வழி சொல்லுங்கள்" என்றார் மாணவர்களிடம் ஆசிரியர்.

செல்வன் எழுந்து, "சார் ஒரு யோசனை. பணம் வசூல் செய்து, பெரியவர் தான் தயாரிக்கும் பண்டங் களை விற்க மூடி போட்ட கண்ணாடி பாட்டில்களையும், ஈ மொய்க்காமலிருக்க வலையுடன் கூடிய தட்டுகள் போன்றவற் றையும் வாங்கிக் கொடுத்தோம் என்றால் அவருக்கும் பிழைப்பில் மண் விழாது. எங்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும்" என்றான்.

"நல்ல யோசனை. தலைமை ஆசிரியர் மற்றும் சக ஆசிரியர்களிடம் பேசி முடிவு செய்கிறேன்" என்றார் ஆசிரியர். அடுத்த நாளே அந்த யோசனை ஏற்கப்பட்டது. மாணவர்களில் பலர் பண உதவி செய்ய முன்வருவதாகக் கூறினர்.


மிட்டாய் தாத்தாவின் பிரச்னை தீரப் போவதை நினைத்து செல்வன் நிம்மதி யடைந்தான்.

"நரியை நாய்னு நினைச்சு வளத் துப்புட்டோம்."


"ஐயையோ! அப்புறம் எப்படி கண்டுபிடிச்சீங்க...?"

"பிஸ்கெட் திங்கும்போது வாலை ஆட்டாமல் இருந்துச்சு, அதை வச்சுத்தான்!"

- நெற்குப்பை கி. மனோகரன்



குறுக்கெழுத்துப் புதிர்



மேலிருந்து கீழ்

1. நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று (4)
2. பாண்டவர், கௌரவர்களின் குரு (4)
4. துணிகள் இதில் நெய்யப்படும் (2)
7. வறண்ட நிலத் தாவரம் (3)
9. ஏவுகணைகளில் ஒன்று (4)
10. விழுதுகள் உள்ள மரம் (2)
11. இங்கே பொருட்கள் வாங்கலாம் (2)
13. கொடியில் காய்க்கும் காய்களில் ஒன்று (3)

கீழிருந்து மேல்

3. பணத்தை பாதுகாப்பாக இங்கு போடலாம் (3)
6. கொடைவள்ளல்களில் ஒருவர்; முல்லைக்குத் தேர் தந்தவர் (2)
15. புலியை விடச் சிறியது. வேகமாக ஓடும் (4)

இடமிருந்து வலம்

1. சிலம்பு என்றதும் நினைவுக்கு வருபவர் (4)
8. இதைக் கேட்டால் பதில் சொல்ல வேண்டும் (3)
11. பொதி சுமக்க உதவும் விலங்கு (3)
12. டீசலைக் கண்டறிந்தவர் (4)
13. பலகார வகைகளில் ஒன்று (2)
14. ஷூமேக்கர் லெவி மோதிய கோள். கிழமைகளில் ஒன்று (4)

வலமிருந்து இடம்

2. சர்க்கரை இந்தக் காயிலிருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறது (4)
3. முதல் இரண்டு ஆங்கில மாதங்களில் கடைசி இரு எழுத்துகள். அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டியது (2)
5. சிந்திக்கும் ஆற்றல் உடைய இனத்தில் ஒரு நபர் (4)
6. ஆற்றைக் கடக்க இது உதவும் (3)
15. தமிழ் ஆண்டின் முதல் மாதம் (4)

— ந. ரமா, சென்னை

விடை : 65ஆம் பக்கம்

தண்ணீர்... தண்ணீர்...

ரமேஷுக்கு தாகம் எடுத்தது. நாக்கு வறண்டது. நந்தகுமார் பெரிய பாட்டில் நிறைய தண்ணீர் வைத் திருந்தான். ஆனால் ஒரு வாய்த் தண்ணீர் கூட தர முடியாதென்று சொல்லிவிட்டான். ரமேஷால் தாகத்தை அடக்க முடியவில்லை. மறுபடியும் ஒரு தடவை கேட்டுப் பார்த்தான்.

"உனக்குக் கொடுத்துட்டு நான் என்ன செய்ய? ஒரு தடவை சொன்னா புரியாது, போடா நாயே!" என்று கடுமையாகப் பேசி அனுப்பி விட்டான் நந்தகுமார்.

இருவரும் படிக்கும் பள்ளி நகருக்கு வெளியே இருந்ததால் தண்ணீருக்கு ஒரே தட்டுப்பாடு. வருஷம் முழுவதும் லாரியில் தான் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பார்கள். ஆனால் இன்று ஏதோ காரணத்தினால் காலையிலிருந்தே தண்ணீர் லாரி வரவில்லை. அதனால்தான் இத்தனை திண்டாட்டம்!

நந்தகுமார் யாருக்கும் எந்த உதவியும் செய்ய மாட்டான். தன் எந்தப் பொருளையும் பிறர் தொடக்கூட அனுமதிக்க மாட்டான்.

போன மாதம் நடந்த காலாண்டுத் தேர்வின் போது கூட ரமேஷின் ஸ்கேல் ஒடிந்து விட இரண்டு ஸ்கேல் வைத்திருந்த நந்தகுமாரிடம் இரவல் கேட்டான். நான் பயன்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை. உனக்குத் தரமாட்டேன் என்று உறுதியாகக் கூறிவிட்டான். வேறு வழியின்றி ரமேஷ் ஒடிந்த ஸ்கேலையே பயன்படுத்தி ஒரு வழியாகப் பரீட்சை எழுதி முடித்தான்.

நாட்கள் சென்றன. கடுமையான கோடை வெயில். ஊரில் தண்ணீருக்கு ஒரே தட்டுப்பாடாக இருந்தது.

நந்தகுமார் வீட்டில் இரண்டு நாளாக தண்ணீர் வரவில்லை. அம்மா அக்கம் பக்கத்தில் அலைந்து பார்த்தார். தண்ணீர் கிடைக்கவேயில்லை. அம்மாவின் கஷ்டத்தை அறிந்த நந்தகுமார், தானே சைக்கிளில் சென்று எங்காவது தண்ணீர் கொண்டு வருவதாகக் கூறினான்.

தண்ணீர் எங்கும் கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பி வந்து கொண்டிருந்த நந்தகுமாரை யாரோ கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தான். ரமேஷ் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான்.

"என்ன நந்து வெறுங்குடத்தோட போறே?" - ரமேஷ்.

"ரெண்டு நாளா தண்ணீர் வரலேடா! குடிக்கக் கூட ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லே! அம்மாவுக்கு உதவலாமேன்னு தான் சைக்கிள்ள குடத்தை மாட்டிட்டு வந்தேன். நானும் அலைந்ததுதான் மிச்சம். தண்ணீர் கிடைத்தபாடில்லை" என்று வருத்தத்தோடு கூறினான் நந்தகுமார்.

"சைக்கிளை வச்சுட்டு குடத்தை எடுத்துட்டு உள்ளே வாடா! தண்ணீர் தரேன்!" என்று சற்றும் யோசிக்காமல் கூப்பிட்டான் ரமேஷ்.

தயங்கியபடி நின்றிருந்த நந்தகுமாரை பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான்.

"ரமேஷ் உங்களுக்கு மட்டும் எப்படிடா தண்ணீர் கிடைத்தது?" என்று வியப்புடன் கேட்டான் நந்தகுமார்.

"ராத்திரியெல்லாம் கண் விழிச்சு கொஞ்சம் கொஞ்சமா தண்ணீர் அடிச்சதிலே நாலு குடம் தண்ணீர் கிடைச்சது. அதுல ரெண்டு குடம் தண்ணீரை நீ எடுத்துட்டுப் போடா."

''நீங்களே இவ்வளவு சிரமப்பட்டு தண்ணீர் அடிச்சிருக்கீங்க! அதைப் போய் எனக்குக் கொடுக்கிறே வேண்டாம்'' என்றான் நந்தகுமார்.


''இன்னிக்கு எங்களுக்கு ரெண்டு குடம் தண்ணீர் போதும். எடுத்துக்கடா'' என்று வற்புறுத்தினான் ரமேஷ்.


இரண்டு குடம் தண்ணீரை வாங்கின நந்தகுமாரால் பேச முடியவில்லை. தொண்டை அடைத்தது. ரமேஷின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

அவனைப் புரிந்து கொண்ட ரமேஷ் நந்தகுமாரை தட்டிக் கொடுத்தான்.

''உன் அம்மா தேடப் போறாங்க! சீக்கிரம் தண்ணீர் கொண்டு போய்க் கொடு'' என்று நண்பனை அனுப்பி வைத்தான் ரமேஷ்.

— எம். சுகந்தி





● எஸ். வினோத்பாபு, கபிஸ்தலம்.

? நம் ரத்தத்தில் A, B, AB, O என்று எப்படி குரூப் கண்டுபிடிக்கிறார்கள், டாக்டர்?

! ரத்தத்தில் சிவப்பணுக்கள் இருப்பது உனக்குத் தெரியுமல்லவா, வினோத்? அவற்றில் 'ஆண்டிஜென்' (ANTIGEN) என்றொரு புரதம் அமைந்துள்ளது. இது இரு வகைப்படும். A ஆண்டிஜென் B ஆண்டிஜென் என்பது அவற்றின் பெயர்கள். ஒருவருடைய ரத்தச் சிவப்பணுக்களில் A ஆண்டிஜென் இருந்தால் அவருடைய ரத்தம் A பிரிவைச் சார்ந்தது என்று கொள்ள வேண்டும். B ஆண்டிஜென் இருந்தால் அந்த ரத்தம் B பிரிவைச் சேர்ந்தது. A,B இரண்டு ஆண்டிஜென்களும் இருந்தால் அந்த ரத்தம் AB பிரிவு. சிலருக்கு இரண்டு ஆண்டிஜென்களும் இருக்காது. அப்படியென்றால் அவர்களுடைய ரத்தம் O பிரிவு என்று பொருள்.

● தின. அன்புதேவன், காட்டுமன்னார்கோவில்.

? கண் ஆபரேசன் செய்தவர்கள் ஏன் கண்ணில் பச்சைத் துணியைக் கட்டிக் கொள்கிறார்கள்?

! மற்ற வண்ணத் துணிகளை விட பச்சை வண்ணத் துணிக்கு கண்ணுக்குள் ஒளியைப்

கேட்கட்டுமா டாக்டர்?

மூக்கிலிருந்து ரத்தம்

புகவிடாமல் தடுக்கின்ற குணம் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

● ஆர். பெருமாள், மயிலாடுதுறை.

? கண்ணில் சுண்ணாம்பு விழுந்து விட்டால் உடனடியாக செய்ய வேண்டிய முதலுதவி என்ன?

! சுத்தமான துணி அல்லது பஞ்சு கொண்டு உடனடியாகக் கண்ணில் விழுந்த சுண்ணாம்பைத் துடைத்து விட வேண்டும். பின்பு கண்களில் தண்ணீர் விட்டு நன்றாகக் கழுவ வேண்டும். அதைத் தொடர்ந்து ஏதாவது ஒரு நுண்ணுயிர்க் கொல்லி (ANTIBIOTIC) கண் களிம்பைப் போட வேண்டும். பிறகு கண் மருத்துவரை ஆலோசித்து தேவையான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் கண் பார்வைக்குக் கெடுதல் வராமல் இருக்கும்!



● ஆர். புனிதா, திருவான்மியூர்.

? என் தோழி ஒருத்தி முகத்தில் அதிகமாக எண்ணெய் வழிகிறது. ஏன் என்று புரியவில்லை, டாக்டர். இதைத் தடுக்க வழி கூறுங்கள், ப்ளீஸ்!

! முகத்தில் இருக்கின்ற எண்ணெய்ச் சுரப்பிகள் அதீதமாக செயல்படும்போது முகத்தில் எண்ணெய்

வழியும். இதனைத் தடுக்க இரண்டு வழிகள் உண்டு. முதலாவது, உன் தோழி தன்னுடைய முகத்தை அடிக்கடி இளம் வெந்நீரில் கழுவி வெகு சுத்தமாக வைத்துக் கொள்வது; அடுத்தது, எண்ணெய்ப் பலகாரங்கள், நெய், வெண்ணெய், பாலாடை, தயிர், முட்டையின் மஞ்சள் கரு, இறைச்சி, சாக்லேட், ஐஸ் கிரீம் போன்ற கொழுப்புச் சத்து மிகுந்த உணவுகளைத் தவிர்ப்பது.



● இந்து பாரதி, லால்குடி.

? மூக்கிலிருந்து ரத்தம் வருவது ஏன்? இந்த ரத்தம் நல்ல ரத்தமா, கெட்ட ரத்தமா?

! மூக்கிலிருந்து ரத்தம் வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன. முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கு பார்ப்போம். குழந்தைகளுக்கும் சிறுவர் சிறுமிகளுக்கும் அடிக்கடி ஜலதோசம் பிடிக்குமானால் அல்லது மூக்கில் சளி சேருமானால் மூக்கில் ரத்தம் வடிய வாய்ப்புகள் அதிகம். அடுத்து மூக்கைப் பலமாகச் சிந்தும்போது, மூக்கை விரலால் குடையும்போது, மூக்கிலுள்ள சிறு புண்கள் சீண்டப்பட்டு ரத்தம் வெளி வரும். மூக்கில் நீர்ச்சதை, காளான் சதை போன்ற கட்டிகள் வளர்ந்தால் இதே நிலைமைதான். வாலிப வயதில் உள்ளவர்களுக்குக் 'காற்றறை அழற்சி' (SINUSITIS) இருக்குமானால் அவர்களுக்கு அடிக்கடி 'சில்லுமூக்கு'

வருவது ஏன்?


டாக்டர் கு. கணேசன்

ஏற்படும். வயதானவர்களுக்கு அதிக ரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற காரணங்களால் மூக்கில் ரத்தம் வடிவதுண்டு. இந்த ரத்தமானது சிரை (VEIN) யிலிருந்து வந்தால் அசுத்த ரத்தம்; தமனி (ARTERY)யிலிருந்து வந்தால் அது சுத்த ரத்தம்.

● ஆர். மகாதேவன், கவண்டம்பாளையம்

? எனக்குக் காதில் சீழ் வடிகிறது. எத்தனையோ டாக்டர்களிடம் சிகிச்சை செய்தும் சரியாகவில்லை. யோசனை சொல்லுங்கள், டாக்டர்!

! காதில் சீழ் வடிவதை நிறுத்த இப்போது நவீன அறுவை சிகிச்சை முறைகள் வந்துள்ளன. E.N.T மருத்துவத்தில் மேற்படிப்பு படித்த மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள். உங்கள் குறை தீரும். மீண்டும் காதில் சீழ் வடிவதைத் தடுக்க மூக்கில் சளி பிடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மூக்கடைப்பு ஏற்படக் கூடாது. காதில் நீர் செல்லக்கூடாது. குளத்தில், அருவியில் குளிக்க வேண்டாம். மூக்கை மெதுவாகச் சிந்துங்கள். நல்ல ஊட்டச் சத்துள்ள உணவுகளை உட்கொண்டால் நோய் எதிர்ப்பு சக்தி கூடும். அது காதில் சீழ் வடிவதைத் தடுக்கும்.



புதுமையான தண்டனை!

குடகு நாட்டை சர்வாதிகார மன்னன் ஆண்டு வந்தான். குற்றவாளிகளுக்குத் தன் இஷ்டப்படி தண்டனைகளை வழங்கி சந்தோஷப்படுவான்.

ஒருநாள் மன்னனுக்கு முன்னால் பல்வேறு குற்றங்களைப் புரிந்த குற்றவாளி ஒருவனை காவலர்கள் கொண்டு வந்து நிறுத்தினர்.

குற்றவாளி என்று சொன்னதுமே வாய்க்கு வந்தபடி சித்ரவதையான தண்டனையை வழங்கி விடும் மன்னன் அப்படி ஏதும் வழங்காமல், அவையோர்களைப் பார்த்து "இதுவரை நான் ஆயிரக்கணக்கான தண்டனைகளை வழங்கி விட்டேன். திரும்பத் திரும்ப அவைகளையே அளிக்க எனக்கு இஷ்டமில்லை. இதுவரை நான் வழங்காமல் விட்டு விட்ட புதுமையான தண்டனை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். இவனுக்கு வழங்குவோம்" என்று சொல்லி அனைவரையும் பார்த்தான்.

'நீயும் ஒரு மன்னனா?' என்று எண்ணியபடி அவையோர் மௌனமாக இருந்தார்கள்.

''உதவாக் கரைகளான உங்களை நம்பிப் பயன் இல்லை. என் விருப்பத்தை ஊர் முழுதும் பறைகொட்டி அறிவித்து விடுங்கள். புதுமையான தண்டனையைச் சொல்பவனுக்கு ஆயிரம் பொற்காசுகள்" என்று கூறிவிட்டு அகன்றான் மன்னன்.

ஆனால் ஒருவர்கூட இந்த விஷயத்தில் முன்வரவில்லை. இதற்குப் போய் ஆலோசனை சொல்வதா என்று பலர் இருந்து விட்டார்கள். பெரும்பாலானவர்களுக்கோ புதுமையாக எதுவும் தோன்றவில்லை. மன்னன்தான் நரகத்தையே ஊருக்குள் கொண்டு வந்து விட்டானே! அதை மீறி வேறு என்ன இருக்க முடியும்?

ஒரு நாள் பிச்சைக்காரன் ஒருவன் இந்த அறிவிப்பைப் பார்த்து விட்டு அரண்மனைக்கு வந்தான். அவனுக்கு எந்த யோசனையும் தோன்றவில்லை. பேசாமல் போய் மன்னன் முன் நின்றான்.

"இந்த ஊரில் பிச்சைக்காரனுக்குத் தான் புதுமையான எண்ணம் உதிக்கும் போலிருக்கிறது'' என்று இண்டலாகச் சொன்னான் மன்னன். "குற்றவாளியை என்ன செய்யலாம் சொல்'' என்று அதட்டினான்.


பசி மயக்கத்தில் இருந்த பிச்சைக்காரனுக்கு எதுவும் தோன்றவில்லை. ''எதுவும் வேண்டாம், பேசாமல் விட்டு விடுங்கள்'' என்று ஏதோ சொல்லப் போக... மன்னன் துள்ளிக் குதித்தான்.

''ஆகா! என்ன அருமையான யோசனை. புதுமையான தண்டனை இதுதான்'' என்று கூறி விட்டு ஆயிரம் பொற்காசுகளோடு கூடவே கொஞ்சம் போட்டுக் கொடுத்து அனுப்பினான்.

- உதயணன்






அதிர்ஷ்ட சித்தி!
கதை: பா. கவிதா 8 ஆம் வகுப்பு ஸ்ரான் வேளாங் கன்னி பள்ளி தி. நகர்
படம்:
ஊரிலிருந்து ரமாவின் சித்தி வந்திருந்தாள் –
பரீட்சைக்கு எல்லாம் எடுத்துட்டேன்...
..சித்தி என் பேனாவில் இங்க் மட்டும் போட்டுத் தந்திடுங்க!
ஏழாம் வகுப்பு படிக்கும் ரமா எப்பொழுதும் ஐந்தாம் ரேங்க்கே வாங்குவாள்!
ஓ, எஸ்!
இந்தா ரமா, இங்க் போட்டாச்சி. பரீட்சை நல்லா எழுது!
தேங்க்ஸ் சித்தி
காலாண்டு விடுமுறை முடிந்து பள்ளி திறந்தது –
அன்று வகுப்பில் –
வாசுகி முதல் ரேங்க்... ரமா இரண்டாவது ரேங்க்...
மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள் ரமா –


அன்று இரவு வீட்டில் –
முதல் முறையாக இரண்டாவது ரேங்க்! எல்லாம் சித்தி இங்க் போட்டுத் தந்த அதிர்ஷ்டம்தான்!
நாட்கள் சென்றன –
மன்த்லி டெஸ்ட் வருதே! சித்தி இருந்தால் நல்ல மார்க் வாங்கலாம்!
பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்தபோது –
ரமா, நாளைக்கு உன் சித்தி வருவதாக் கடிதம் போட்டிருக்கா!
அப்படியா? எனக்கு அதிர்ஷ்டம் தான்!
?
மறுநாள் –
சித்தி நீங்களே இந்தப் பரீட்சைக்கும் இங்க் ஊற்றிக் கொடுத்திடுங்க!
அடுத்த மாதம் அரைப் பரீட்சைக்கு என்ன பண்ணுவே?
உங்களால தான் நான் ரெண்டாவது ரேங்க் வாங்கினேன்!
அப்பவும் வந்திடுங்க!
உனக்காக பெங்களூரிலிருந்து வந்துக்கிட்டே இருக்கமுடியுமா?


மறுவாரம் பள்ளியில் -
வெரி குட் ரமா! இந்தத் தடவையும் நீ இரண்டாவது ரேங்க். இன்னும் நல்லா படிச்சா முதல் ரேங்க் வாங்கலாம்
அரை பரீட்சை நெருங்கியது -
இந்தத் தடவை சித்தியின் 'லக்' கிடைக்காது போலிருக்கே! என் ரேங்கை காப்பாற்றிக்கணுமே!
இரவு பகலாகக் கண் விழித்துப் படித்தாள் ரமா — சித்தி வராமலே பரீட்சையும் எழுதி முடித்தாள்.
ரேங்க்-கார்டு வாங்கிக்கொண்டு ஜாலியாக வீட்டுக்கு வந்த ரமாவுக்கு இன்னுமொரு ஜாலி!-
சித்தி என்ன திடீர்னு?
என் தோழி கல்யாணத்துக்காக வந்தேன். ...சரி,— என்ன ரேங்க்?
நீங்களே பாருங்க!
அடடே முதல் ரேங்க்! சபாஷ் ரமா! ...ம்... அதிர்ஷ்டம் என்பது வெறும் நம்பிக்கை தான். நாம் உழைக்காமல் எந்த அதிர்ஷ்டமும் தேடி வராதுன்னு இப்போ நீயே புரிஞ்சிருப்பியே!
ஆமாம் சித்தி!
முதல் ரேங்க் வாங்கினதுக்கு என் பரிசு!

பஞ்சுவிட்டான்


பூச்சியை எப்படிப் பிடிக்கும்?

அன்று விடுமுறை. பூமா தன் தோழியின் வீட்டிற்கு விளையாடக் கிளம்பினாள். லேசான வெயில். போகும் வழியில் இருபுறமும் மரங்கள், செடிகள். பூமா இயற்கை அழகை ரசித்தபடி மெதுவாக நடந்து கொண்டிருந்தாள்.

ஒரு செடியில் வண்ணக் குழம்பில் முக்கியெடுத்தாற் போல ஏதோ ஒன்று தென்பட, வேகமாக அதை நோக்கிச் சென்றாள் பூமா.

சிறிது தூரம் சென்றதும் முழு உருவமும் தெரிந்தது. அது ஒரு பறவை, நீலம், மஞ்சள், அரக்கு வண்ணம், வெள்ளை என பல அழகிய வண்ணங்களில் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகுடன் இருந்தது. அவள் இது வரை அந்தப் பறவையைப் பார்த்ததில்லை.

பறவை ஒன்றும் அப்படி



பெரிய உருவமாய் இல்லை. சிட்டுக் குருவியை விட கொஞ்சம் பெரிது. அவ்வளவுதான்! நீண்ட கூர்மையான அலகு இருந்தது.

பூமாவுக்கு அப்பறவையை பார்க்க, ரசிக்க மிகவும் விருப்பமாக இருந்தது. மெதுவாக அதன் அருகே சென்றாள். இவளது செருப்பு சத்தம் லேசாகக் கேட்டதும் வேகமாகப் பறந்து விட்டது அந்தப் பறவை. அவளுக்கோ மிகவும் ஏமாற்றம்!

யிலிருந்து கொத்தித் தின்றது. மேலும் சிறிது நேரம் அங்கேயே அமர்ந்து, பார்த்துக் கொண்டிருந்தது.

நம்மைப் போல அதற்கும் சாப்பிட்ட களைப்பு போலும்! அதுதான் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறது என்று பூமா தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

அவள் தோழி இவளுக்காக காத்துக் கொண்டிருப்பதைக் கூட மறந்தே போனாள்!

அந்த வண்ணப் பறவையை இன்



னொரு முறை பார்க்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அதன் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தாள். கொஞ்சம் நேரம்தான்!

அடடே! அவள் நினைத்தது போல் அது மீண்டும் அதே இடத்திற்கு வந்தது. ஆனால் இப்போது காய்ந்த மரக்கிளை ஒன்றில் அமர்ந்திருந்தது.

இம்முறை பூமா, அருகே செல்லும் எண்ணத்திற்குத் தடை போட்டு விட்டாள்! அங்கிருந்த பெரிய வேப்ப மரத்திற்குப் பின்னால் நின்று கவனிக்கலானாள்.

அந்தப் பறவை மரப்பட்டையை வேகமாகக் கொத்தியது. சின்னச் சின்ன பூச்சிகளை மரப்பட்டை

சிறிது நேரத்தில் வண்ணப் பறவை வேகமாகக் கிளம்பியது. பூமா உற்றுக் கவனித்தாள். காற்றில் பறந்து கொண்டிருந்த தட்டானை 'லபக்'கென்று அலகால் கொத்தியபடி மீண்டும் பறக்க ஆரம்பித்தது.

வேகம் என்றால் அதிவேகம்! சில நொடிகளில் கண்ணை விட்டு மறைந்தே விட்டது.

பறக்கும் போது வண்ணப் பறவை இன்னும் கூடுதல் அழகுடன் காட்சியளித்தது. இரண்டு சிறகுகளையும் விரித்தால் 'வானவில்லின்' வண்ணங்கள் போன்று அடுத்தடுத்து நிறங்கள் வரிசையாக இருந்தன. மேலும் பின்புற வால் அகலமாகவும், நடுவில் இரண்டு நீண்ட இறகுகளும் இருந்தன.

எஸ். சுஜாதா

அறிவியல் உண்மைகள்

◆ நம் நாட்டில் பஞ்சுவிட்டான், பஞ்சுருட்டான் என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது.

◆ நீலம், மஞ்சள், வெள்ளை, கறுப்பு, சிவப்பு, அரக்கு வண்ணம் என பல நிறங்களை ஒருங்கே பெற்றுள்ளது. மிகவும் அழகானது.

◆ இவை பூச்சிகளை உணவாக உட்கொள்வதால் 'பூச்சி - உண்ணிப் பறவை' (Bee - Eater) என்றே பொதுவாக அழைக்கப்படுகின்றன.

◆ மித வெப்ப நாடுகளில் வாழ்கின்றன. ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பாவில் காணப்படுகின்றன.

◆ இவை பொதுவாக ஒரே இடத்தில் கூட்டமாகவே வசிக்கின்றன.

◆ ஒவ்வொரு குடும்பத்தின் கூடு அல்லது பொந்து அருகருகே அமைந்திருக்கும். சில பறவைகள் தன் வீட்டிலிருந்து அடுத்த வீட்டிற்குச் செல்ல சுரங்கப் பாதைகள் அமைத்துக் கொள்கின்றன.

◆ சிறந்த முறையில் கூட்டை உருவாக்கி முட்டைகளை இடுகின்றன. சில பறவைகள் பெரிய செங்குத்துப் பாறையிலும், மலையிலும் கூட பொந்தை உருவாக்குகின்றன.

◆ இளவேனிற் காலத்தில் முட்டை வடிவ பொந்தின் மூலையில் முட்டைகளை இடுகின்றன. சில சமயம் ஒரே தடவையில் ஏழு முட்டைகள் வரை கூட இடும், ஒரு பெண் பஞ்சு விட்டான்! முட்டைகள் வெண்மையாக இருக்கும்.

◆ தாய் மட்டுமல்ல தந்தையும் கூட அடை காக்கும்.

◆ இருபது நாட்களில் முட்டையிலிருந்து குஞ்சு பொரிந்து விடும். முட்டையை உடைத்துக் கொண்டு வெளி வந்தவுடன் அவைகளால் பறக்க இயலாது. தாய் உணவைக் கொண்டு வந்து ஊட்டும்.

◆ குஞ்சுகளுக்கு இருபது நாட்களில் சிறகு வேகமாக வளர்ந்து பறக்கத் துவங்குகின்றன.

◆ குஞ்சுகள் பெரிதானதும் சில தாய், தந்தையுடனே தங்கி விடுகின்றன. சில குஞ்சுகள் மட்டும் பிரிந்து போய் வேறொரு கூட்டத்தில் சேர்ந்து விடும். இவை அந்தக் குடும்பத்திலுள்ள பெரிய பறவைகளுக்கு உதவி புரியும். இதனால் இவை 'உதவியாளர்கள்' என அழைக்கப்படுகின்றன.

◆ வண்ணத்துப் பூச்சி, தட்டான் பூச்சி, வண்டு மற்றும் சிறு சிறு பூச்சிகளே இவைகளின் முக்கிய உணவாகும். இவை குறிப்பாக தேனீக்களையே விரும்பி உண்ணுகின்றன.

◆ பஞ்சு விட்டான் தேனீ மற்றும் வண்டுகளைப் பிடிக்கும் போது அது தன்னைக் கொட்டி விடாமல் சாதுரியமாகப் பிடிக்கிறது. இரையின் கொடுக்கை பயன்படுத்த விடாமல் இறுக்கிப் பிடித்து கல் அல்லது பாறையில் தேய்க்கிறது. கொடுக்கிலுள்ள விஷம் கீழே வடிந்த உடன் அப்படியே அந்தப் பூச்சியை முழுங்கி விடும்.

◆ இவை இரையைப் பிடித்துக் கொண்டு வந்து பொந்தில் சேமித்து வைக்கின்றன. இந்தப் பூச்சிகளை குஞ்சுகள் சாப்பிட்டு விரைவாக வளர்கின்றன.

◆ மிகவும் வேகமாகப் பறக்கும். அபூர்வமாகவே தரையில் இறங்கும்.

◆ ஒரு பஞ்சு விட்டான் தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் ஒரு நாளைக்கு 225 பூச்சிகள் வரை பிடிக்கும்.

◆ மிகவும் உயரத்தில் பறக்கக் கூடியது. 'க்விப்'க்விப்' என சத்தம் எழுப்பும்.

பூமாவுக்கு ஒரே யோசனை! எதற்காக அந்தப் பூச்சியை இது தின்னாமல் கொண்டு போகிறது? அப்படியே நின்றாள். ஒரு வேளை இது தாயாக இருக்குமோ! தன் குஞ்சுகளுக்கு இரையாக எடுத்துப் போகிறதோ, என்று பலவாறு சிந்தித்த படியே தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். நேரமாகி விட்டது. இனி தன் தோழி வீட்டுக்குப் போக முடியாது!

சரி! நாளைக்கு அறிவியல் ஆசிரியரிடம் இப்பறவையைப் பற்றியும் அதன் பெயரையும் கேட்டுக் கொள்ளலாம் என்று நினைத்தபடியே மீண்டும் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள் பூமா.

'கெட்டிக்காரன்பட்டினம்' – ஊர் பெயர் வித்தியாசமாக இருக்கிறதல்லவா? ஊர் மக்களும் வித்தியாசமாகவே இருந்தார்கள். அரசமரத்தடி பிள்ளையார் கோவிலுக்கு மக்கள் தினமும் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

வழக்கம் போல் சோமையா, பிள்ளையாரைக் கும்பிட வந்தான். பிள்ளையாரைச் சுற்றி வந்தவன் அரசமரப் பொந்தில் என்னவோ இருப்பது போல தோன்ற உள்ளே தன் கையை நுழைத்தான். உடனே அவன் முகம் ஒரு மாதிரியானது. திடீரென கத்தினான்.

"ஆஹா! என்ன இன்பம்... என்ன இன்பம்... இறைவனைக் கண்டேன்!"

இவன் செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்த அடுத்தவனும் பொந்திற்குள் கையை நுழைத்தான். அவனும் கத்தினான்.

"ஆஹா என்ன இன்பம்! என்ன இன்பம்!"

பின்புறம் வந்த ஒரு பெண்மணியும் தன் கையை நுழைத்தார். உரக்கக் கூவினார்.

"ஆஹா என்ன இன்பம்... என்ன இன்பம்... தெய்வீகத்தைக் கண்டேன்!"

விஷயம் காட்டுத் தீ போல் பரவியது.

ஊர் மக்கள் அனைவரும் அரசமரப் பொந்தில் கையை விடவும் அதே போல் கத்தவும் செய்தனர். மன்னர் விஷயத்தைக் கேள்விப்பட்டார்.

கோவிலுக்கு வந்து கையை நுழைத்தவரின் முகம் அஷ்டகோணலானது. அவரும் கத்தினார். "ஆஹா... என்ன இன்பம்... என்ன இன்பம். நானும் இறைவனைக் கண்டேன்!"



கெட்டிக்காரன்பட்டினம்


மரப்பொந்தில் இருந்த தேள், 'எத்தனை பேரைத்தான் கொட்டுவது? மனித இனத்தில் பெரும்பான்மையானவர்கள் கொட்டினாலும் புத்தி கெட்டுப் போயிட்டாங்களே' என்று வருத்தப்பட்டது.

ரகசிய ஒற்றர் படை மூலம் விஷயமறிந்த மன்னன் சோமையாவை தேடி வருகிறாராம். நீங்கள் பார்த்தீர்களா?

- கே. சோமசேகர்


ஒளிந்திருக்கும் வார்த்தைகளைக் கண்டுபிடியுங்கள்!

- போட்டி
















இங்கு ஐந்து தொகுதிகளாகப் படங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் மூன்று படங்கள் உள்ளன. மூன்று படங்களில் இருந்து ஒவ்வொரு எழுத்தைச் சேர்த்தால் ஒரு வார்த்தை கிடைக்கும். ஐந்து வார்த்தைகளையும் கண்டுபிடித்து எழுதி, முகவரிக்கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி *31.3.98*. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடைகளை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



ஆசிரியர்,
கோகுலம்,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097



சொல் பார்ப்போம்!

முனியசாமியும் மாடசாமியும் நண்பர்கள். இருவரும் தங்கள் 'அறிவுத் திறனை' பரிசோதிக்க போட்டிகள் வைத்துக் கொள்வது வழக்கம்.

அன்று முனியசாமி சந்தைக்குப் போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். எதிரில் மாடசாமியைச் சந்தித்தான்.

"எங்கேடா போயிட்டு வரே?" என்றான் மாடசாமி.

"நான் எங்கே போயிட்டு வரேன்னு சரியாச் சொன்னா, நான் இப்ப சந்தையில வாங்கினது பூராவும் உங்கிட்டே கொடுத்துடறேன்."

மாடசாமி சிறிது நேரம் யோசித்துப் பார்த்து விட்டு, "எனக்கு கண்டுபிடிக்க முடியலை, நீயே சொல்லு" என்றான்.

"சரி, இப்ப வேற கேள்வி. நான் சந்தையிலே என்ன வாங்கினேன்னு சொன்னால், இந்தப் பையில இருக்கிற மாம்பழம் முழுவதையும் தர்றேன்" என்றான் முனியசாமி.

மீண்டும் யோசித்துப் பார்த்த மாடசாமியால் கண்டுபிடிக்க முடியவில்லை. "தெரியலை" என்றான் ஏமாற்றத்துடன்.

"மாம்பழம்தான் வாங்கிட்டு வந்தேன். சரி, எத்தனை மாம்பழம்ன்னு சொல்லு. இந்தப் பையில இருக்கிற அஞ்சு மாம்பழத்தையும் தந்துடறேன்" என்றான்.

"எனக்கு என்ன ஜோசியமா தெரியும்? ஒவ்வொரு கேள்வியா கேட்டுட்டு இருக்கே?" என்று கோபத்துடன் கூறிவிட்டு திரும்பிப் பார்க்காமல் நடந்தான் மாடசாமி.

முனியசாமியோ நண்பனை தோற்கடித்த மகிழ்ச்சியில் வீட்டை நோக்கிச் சென்றான்.

— கே. சுதர்சன்,
பாக்கியநாதன் விளை,
தூத்துக்குடி.

இரண்டிரண்டாக...

கண்ணப்பனுக்கு கொஞ்ச நாட்களாகவே கண்ணில் கோளாறு. எதைப் பார்த்தாலும் இரண்டிரண்டாகத் தெரிகிறது. இதனால்தான் எவ்வளவு சிக்கல்! பத்து இட்லி சாப்பிடுகிறவன் ஐந்து இட்லியுடன் எழுந்து விடுகிறான். பஸ்ஸிற்காகக் காத்திருந்து பஸ் வரும் போது 'ஏறும் வழி'யில் ஏறி விடலாம் என நினைத்து வந்த ஒரு பஸ்ஸையும் கோட்டை விட்டு விடுகிறான். இப்படி தினமும் எத்தனை நிகழ்ச்சிகள்!

கவலையடைந்த கண்ணப்பன் கண் மருத்துவரைக் காணச் சென்றான். மருத்துவர் பரிசோதனை செய்த பின்பு கண்



ணாடி போடுவதற்குச் சீட்டு எழுதிக் கொடுத்தார்.


கிளம்பும் போது, "சார் எவ்வளவு பணம் தரணும்?" என்றான். "நூறு ரூபாய்" என்றார் மருத்துவர். ஒரு ஐம்பது ரூபாயை அவரிடம் கொடுத்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தான் கண்ணப்பன்.

மருத்துவரோ நீ இப்படிச் செய்வேன்னு தெரிஞ்சுதானே ஐம்பது ரூபாய் என்று சொல்வதற்கு பதில் நூறு ரூபாய் என்று கூறினேன் என்று தனக்குள் நினைத்துக் கொண்டார்!

— வி. நாகராஜன்,
எட்டாம் வகுப்பு 'இ' பிரிவு
அரசினர் ஆண்கள் மேல்
நிலைப் பள்ளி
ஆட்டையாம்பட்டி.

ஞாபக மறதியா?

உங்களுக்கு ஞாபக மறதிப் பிரச்னையா? இனி கவலையை விடுங்கள்!



மரங்கனடர்ந்த சோலைகள் அல்லது பூங்காக்கள் வழியே ஒரு நடை போய் வாருங்கள். பின் மனம் ஒன்றிப் பாடங்களைப் படியுங்கள் அல்லது உங்களுக்குப் பிடித்த விஷயங்களை மனதில் நிறுத்துங்கள். அதன் பின் ஏற்படும் நினைவு குறைந்தது ஒரு மணி நேரத்திலிருந்து, ஒருநாள் வரை நினைவில் நிற்கும். தூய காற்று உங்களின் நினைவுத் திறமையைக் கூட்டும்.

30 நொடிகள் தூய ஆக்ஸிஜனை சுவாசிப்பதன்மூலம், நினைவுத்திறன் நீடிக்கும் என பிரிட்டிஷ் மனவியல் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஸ்வாதி, பழநி

சிவப்புச் சட்டை!

ராஜு கோபமாக உட்கார்ந்து இருந்தான். அதற்கும் காரணமிருந்தது. அவன் பிறந்த நாளுக்காக அப்பா நேற்று புதுச் சட்டை வாங்கி வந்திருந்தார். அந்தச் சிவப்புச் சட்டை ராஜுவுக்குப் பிடிக்கவில்லை. அதுதான் அவனுடைய கோபத்திற்குக் காரணம்.

ராஜுவைப் பார்த்த அவன் அப்பா "ராஜு இந்தா பில், இதை எடுத்துக் கொண்டு போய் கடையிலே கொடுத்துட்டு உனக்குப் பிடிச்ச சட்டையை வாங்கிட்டுவா" என்று அவனை அனுப்பி வைத்தார்.

கிளம்பினான் ராஜு. தண்டவாளத்தைத் தாண்டி கொஞ்ச தூரம் நடந்தால் கடை வந்து விடும். வேகமாக நடந்தான். தண்டவாளத்தைத் தாண்டும் போதுதான் கவனித்தான். மழையினால் மண் அரிப்பு ஏற்பட்டு தண்டவாளம் தொங்கிக் கொண்டிருந்தது. எதிரே ஒரு ரயில் வேகமாக வந்து கொண்டிருந்தது. அக்கம் பக்கத்தில் உதவிக்கு ஆட்களே இல்லை. என்ன செய்வது என்று யோசிக்கும் போது அந்த சிவப்புச் சட்டை கண்ணில் பட்டது. வேகமாக கவரிலிருந்து எடுத்து ஒரு குச்சியில் மாட்டி ஆட்டினான்.

ரயில் நின்றது. பயணிகள் அனைவரும் ராஜுவைப் பாராட்டினர்.

நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றிய சிவப்புச் சட்டையை ஆசையுடன் எடுத்துக் கொண்டு வீடு நோக்கிச்



சென்றான் ராஜு.

— எம். அமர்நாத்,
ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவு
அரசினர் மேல் நிலைப் பள்ளி
வத்தலக்குண்டு.

அப்பைய தீட்சிதர்

ஆரணிக்கு அருகில் அடையபலம் என்ற கிராமம். அங்கு வசித்த ரங்கராஜ தீட்சிதர் 'விசுவஜித்' என்ற யாகம் செய்தார். இந்த யாகம் செய்யும் காலத்தில் எவர் வந்து என்ன கேட்டாலும் இல்லை என்ற சொல்லே வாயில் வரக்கூடாது. இல்லை என்று மறுத்து விட்டால் யாக பலன் போய்விடும்.

ரங்கராஜ தீட்சிதரும் இல்லை என்று சொல்லாமல் தானம் செய்தார். எப்படி? வீடு, நிலம், ஆபரணம் எல்லாம் விற்றும் அயரவில்லை.


ரங்கராஜ தீட்சிதரின் குமாரர் அப்பைய தீட்சிதர். தந்தையே குருவாக இருந்து வடமொழி, தமிழ் இரண்டையும் கற்பித்தார்.

அப்போது ஆற்காட்டை சின்ன திம்ம நாயக்கர் ஆண்டு வந்தார். நாயக்கருக்கு சைவ சமயத்திடம் பற்று அதிகம். புலவர்களைப் போற்றும் பரந்த மனம் கொண்டவர். அப்பைய தீட்சிதரை அழைத்துக் கனகாபிஷேகம் செய்தார்.

கனகாபிஷேகம் இரண்டு விதமாய் செய்யப்படும். ஒன்று தங்கக் காசுகளையோ, ஆபரணங்களையோ குடத்து நீரில் போட்டு பெரிய சல்லடைகளைத் தலைக்கு மேல் பிடித்து நீராட்டுவது. இன்னொன்று ஒவ்வொரு பவுன் காசாக மெதுவாகத் தலையில் போடுவது. அப்பைய தீட்சிதருக்குச் செய்தது முதல் வழி. அபிஷேகம் முடிந்த பிறகு குடத்தில் போட்ட பொற்காசுகள் அபிஷேகம் செய்யப்படுபவர்களுக்கே சொந்தமாகும்.

ஒருமுறை வட நாட்டுப் புலவன் ஒருவன் தீட்சிதரோடு வாதிட வந்தான். அந்த சமயம் தீட்சிதருக்குக் கடும் வயிற்று வலி. மறுத்தால் வாதம் செய்ய அஞ்சுவதாகக் கருதப்படும். ஒப்புக் கொண்டார். ஒரு துரும்பை எதிரில் போட்டு, மந்திரம் ஜெபித்து விட்டு வாதத்தைத் தொடங்கினார். துரும்பு துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. வாதத்தில் வெற்றி தீட்சிதருக்கே என்று சொல்லவும் வேண்டுமா?. "தீட்சிதரே! நீங்கள் மகாபண்டிதர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தத் துரும்பு ஏன் துடித்துக் கொண்டிருக்கிறது? வாதத்தைத்





தொடங்கு முன் நீங்கள் எந்த மந்திரத்தை ஜெபித்தீர்கள் என்று தயவு செய்து சொல்ல வேண்டும்" என்று பணிவுடன் கேட்டான் புலவன்.

தீட்சிதர் "புலவரே! எனக்குக் கடும் வயிற்று வலி. அந்த உபாதையோடு வாதம் செய்ய முடியுமா? வலியை இந்தத் துரும்பில் இறக்கி விட்டு, வாதம் செய்தேன். கொஞ்ச நேரத்தில் வலி என்னிடம் வந்து விடும்" என்று சொல்லவும் புலவர் ஆச்சர்யப்பட்டார்.

"இத்தனை மந்திர சித்தி பெற்ற தாங்கள் வயிற்று வலியைப் போக்கிக் கொள்ளவும் தெரிந்து வைத்திருப்பீர்களே?" என்று கேட்டான்.

"கர்ம வினையை அனுபவிக்காது தப்பிக்க முடியாது. மறுபடி ஒரு ஜன்மமெடுத்து அனுபவிக்க நான் விரும்பவில்லை" என்று கூறியதும் நெடுஞ்சாண் கிடையாக அவர் கால்களில் விழுந்து, "உங்களை எனக்கு சமமாக நினைத்து வாதிட வந்த என் முட்டாள் தனத்தை மன்னிக்க வேண்டும்" என வேண்டினான்.

ஒரு சமயம் 'சுய உணர்வில் பக்தியோடு சிவனை பூஜிக்கிறோம். சித்தம் கலங்கி விட்டால் மற்றவர்களைத் திட்டுவோமா, தெய்வத்தைக் குற்றம் சொல்வோமா'? என்று சிந்தித்தார்.

ஊமத்தங்காயை அரைத்து வைத்தார். சீடர்களை அழைத்து, "இதை சாப்பிட்ட பின் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும். நான் உளறுவதை ஒன்று விடாமல் ஓலைகளில் குறித்து வையுங்கள். நான்

ஆர். பொன்னம்மாள்

உளறுவதை நிறுத்தி மயக்க நிலை அடையும் வேளையில் இந்த மாற்று மருந்தைக் கொடுங்கள். சற்று நேரத்தில் புத்தி தெளிந்து விடும்" என்றார்.

சீடர்கள் ஏடும், எழுத்தாணியும் கொண்டு வருவதற்குள் ஊமத்தங்காய் விழுதை சாப்பிட்டு விட்டார்.

அப்போது அவர் பாடியவை 'ஆத்மார்ப்பண ஸ்துதி!' அவர் பாடிய வேகத்துக்கு சிஷ்யர்கள், எழுதத் திணறினார்கள். எல்லாம் சிவஸ்தோத்திரங்கள். மயங்கி விழும் நிலையில் மாற்று மருந்தைக் கொடுத்தார்கள். புத்தி தெளிந்தது.

ஸ்தோத்திரங்களுக்கு தீட்சிதர் வைத்த பெயர் 'உன்மத்த பஞ்சாசத்'.

நந்தனார், மாணிக்க வாசகரைப் போல' அப்பைய தீட்சிதரும் சிதம்பரத்தில் பஞ்சாட்சரப் படியேறி ஜோதியில் கலந்தார்.



உலகின் உயர்ந்த கட்டடம்!

உலக அதிசயங்கள் ஏழு என்று நாம் படித்திருக்கிறோம். அந்த வரிசையில் எட்டாவதாக இந்த உயர்ந்த கட்டடத்தைச் சொல்லலாம். 40 வருடங்களுக்கு, உலகின் உயர்ந்த கட்டடம் என்ற பெருமையைப் பெற்றிருந்தது. தற்போது அப்பெருமையை வேறு புதிய கட்டடங்கள் பெற்று விட்டாலும், இக்கட்டடத்திற்கு இன்னும் தனிப் பெருமை உண்டு. கண்களைக் கொள்ளைக் கொள்ளும், நுணுக்கமான வேலைப்பாடுகள் உடைய இந்த எழில் மிகு கட்டடம் எதுவென்று தெரிந்து கொள்ள ஆவலாயிருக்கிறதா? அமெரிக்காவில் நியுயார்க் நகரத்தில் உள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடம்தான் இத்தகையச் சிறப்பு வாய்ந்த கட்டடம்.


'விண்ணை முட்டும்...' எனக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதற்குச் சரியான உதாரணம் இந்த எம்பயர் ஸ்டேட் கட்டடம்தான். இதன் புள்ளி விவரங்களைக் கேட்டால் வியப்பில் ஆழ்ந்து விடுவீர்கள். சென்னையில் உள்ள 14 மாடிகளை உடைய எல்.ஐ.சி கட்டடத்தைக் கண்டு மலைத்தவர்கள் உண்டு. அவர்கள் இந்த எம்பயர் ஸ்டேட் கட்டடத்தைக் கண்டால் மயக்கமே போட்டு விடுவர். மொத்தம் 102 மாடிகளை உடைய இதன் உயரம் 1,250 அடிகள், அதாவது 381 மீட்டர் (அம்மாடியோவ்!) இக்கட்டடத்தின் மேலுள்ள தொலைக் காட்சிக் கோபுரத்தையும் சேர்த்தால் உயரம் 1,472 அடிகள். இரண்டு ஏக்கர் பரப்பில் உள்ள இதன் எடையோ 3,31,000 மெட்ரிக் டன்கள். 54,400 மெட்ரிக் டன் எடை உடைய இரும்புத் தூண்கள் தான் இதை உயர்த்தி நிறுத்தியுள்ளன. இதில் பயன்படுத்தப் பட்டுள்ள செங்கல்களின் எண்ணிக்கையோ 10 மில்லியன் (ஒரு மில்லியன் என்பது 10 இலட்சம்; கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள்!) இதன் மின் தொடர்புகளில் 430 மைல் நீளத்திற்கு கம்பிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. என்ன, இதுக்கே மலைச்சிட்டிங்களா? இன்னும் எவ்வளவு இருக்கு!

இக்கட்டடத்திலுள்ள ஜன்னல்களின் மொத்தப் பரப்பளவு 5 ஏக்கர்கள். அவற்றைச் சுத்தம் செய்வதே தனி வேலை. 1,860 படிகளைக் கொண்ட இக்கட்டடத்தில், ஒவ்வொரு வருடமும் போட்டி நடக்கும். யார் மிக விரைவாக இப் படிகளைக் கடந்து உச்சிக்குச் செல்கிறார்கள் என்ற அந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர் எடுத்துக் கொண்ட குறைந்த பட்ச நேரம் 20 நிமிடங்கள்.

இதிலுள்ள லிப்டுகளின் மூலம் மணிக்குச் சுமார் 10,000 பேர் மேலே செல்ல முடியும். தரையில் இருந்து பார்த்தால், இக் கட்டடத்தை முழுமையாகப் பார்க்க முடியாது. டெகோ கலை நயத்தைப் பின்பற்றி வடிவமைக்கப்பட்ட இக்கட்டடத்தில் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட 90 அடி நடை (lobby) உள்ளது. இதில் உலகின் ஏழு அதிசயங்களோடு இக்கட்டடத்தையும்

பதிவு செய்திருக்கிறார்கள். இங்குள்ள கின்னஸ் உலகச் சாதனையரங்கில் சாதனைகளைப் பற்றியும், சாதனையாளர்களைப் பற்றியும் கண்காட்சி உள்ளது. 86ஆம் மாடியிலும் 102 ஆம் மாடியிலும் நகரைப் பார்க்க வசதி உள்ளது. அங்கிருந்து நியுயார்க் நகரை முழுமையாகப் பார்க்க முடியும். இரவு நேரத்தில், வண்ண விளக்கொளியில் நகரின் அழகு மனதைக் கொள்ளை கொள்ளும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இக்கட்டடத்தை வடிவமைத்து இருப்பவர்கள் ஷ்ரீவ், ஹார்மன், லேம்ப் ஆகிய பொறியியலாளர்கள். 1931ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட போது ஆன செலவு 41 மில்லியன் அமெரிக்க டாலர்கள். இக்கட்டடம் மின்னல் வேகத்தில் கட்டப்பட்டது என்றால் அது மிகையில்லை. ஒரு வாரத்திற்கு 4½ மாடிகள் வீதம் கட்டப்பட்டது. ஒரு சமயம், பத்தே நாட்களில் 14½ மாடிகள் கட்டப்பட்டன.



1931 மே 1 இல் இக்கட்டடம் அதிகார பூர்வமாகத் திறக்கப்பட்டது. ஆனால், இதில் உள்ள இடங்கள் அனைத்தும் முழுமையான பயன் பாட்டுக்கு வர 10 ஆண்டுகள் ஆயிற்று. அதனால் இதை சிறிது காலம் காலியான கட்டடம் என்றும் அழைத்தனர்!

1945ஆம் ஆண்டில் ஓர் பனி மூட்டமான நாளில் விமானம் ஒன்று இதன் 79வது மாடியில் மோதியது. இதனால் 14 பேர் உயிரிழந்தனர். 41 மில்லியன் அமெரிக்க டாலர் சேதாரம் ஏற்பட்டது.

— **கோ. சதீஷ் குமார்**




வைட்டமின்கள்!


வைட்டமின்கள் என்றால் என்ன?

வைட்டமின்கள் என்பன சில பொருட்களிலிருந்து மட்டும் கிடைக்கக் கூடிய புரத ஊட்டச் சத்து. இவை உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் உதவுகின்றன. வைட்டமின்களே உணவல்ல, ஆனால் மிகவும் அவசியமானவை. சமச்சீர் உணவை உட்கொண்டால் வைட்டமின்கள் போதிய அளவு கிடைக்கும்.

வைட்டமின் 'ஏ'

வைட்டமின் 'ஏ' இரவில் நாம் பார்ப்பதற்கு உதவுகிறது. நம் கண்களில் உள்ள சிறப்பு செல்கள் இருளுக்கு ஏற்றவாறு வேலை செய்ய வைட்டமின் 'ஏ' அவசியம்.






வைட்டமின் 'பி'

குறைந்தது 12 வெவ்வேறான வைட்டமின்கள் 'பி' வகையில் உள்ளன. இவற்றில் சில வைட்டமின்கள் உணவிலிருந்து சக்தியை வெளிக் கொண்டு வருகின்றன. மற்றவை ரத்தம் மற்றும் நரம்புகளை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகின்றன. சில 'பி' வைட்டமின்கள் முடி வளர்ச்சிக்கு உதவுகின்றன.


அட்டையில் : கீர்த்தனா
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

வைட்டமின் 'சி'



வைட்டமின் 'சி' தோல், ரத்தம் மற்றும் எலும்புகளின் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றன. காயங்கள் விரைவில் குணமாவதற்கும் உதவி புரிகின்றன. பசுமையான காய், கனிகளிலிருந்து வைட்டமின் 'சி'யைப் பெறலாம். பல நூறு ஆண்டுகளுக்கு முன் பலர் வைட்டமின் 'சி' குறைவினால் மடிந்தனர்.

வைட்டமின் 'டி'




'சூரிய ஒளி வைட்டமின்' என்று வைட்டமின் 'டி' அழைக்கப்படுகிறது. சூரிய ஒளி தோல் மீது படும்போது நமக்கு வைட்டமின் 'டி' கிடைக்கிறது. இதனால் எலும்புகள் வளர்ச்சியும், உறுதியும் அடைகின்றன. இவை உறுதியான பற்கள் முளைக்கவும் துணைபுரிகின்றன.



வைட்டமின் 'இ'

நமது உடலில் ரத்தம் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்ல வைட்டமின் 'இ' உதவுகிறது.

வைட்டமின் 'கே'



வைட்டமின் 'கே' 'பேன்டேஜ் (Bandage) வைட்டமின்' என்று அழைக்கப்படுகிறது. உங்களுக்கு ஏதாவது காயம் ஏற்பட்டால் சிறிது நேரத்தில் ரத்தம் நின்று விடுகிறதல்லவா? அது வைட்டமின் 'கே' வேலை செய்வதால்தான்!

வைட்டமின்களை எப்படிப் பெறலாம்?

ஏ – பால் மற்றும் பால் பொருட்கள், பாலாடைக் கட்டி, கீரைகள், மஞ்சள் வண்ணப் பழங்கள், கேரட், தக்காளி, முட்டை, மீன் எண்ணெய்.


பி – பால் மற்றும் பால் பொருட்கள், கோதுமை, தானியங்கள், பருப்புகள், பாலாடைக் கட்டி, பச்சை மிளகு, பச்சைக் காய்கறிகள், உருளைக் கிழங்கு, மீன், இறைச்சி.

சி – சிட்ரிக் அமிலம் கொண்ட ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை போன்ற பழங்கள், பச்சைக் காய்கறிகள், உருளைக் கிழங்கு, தக்காளி.

டி – சூரிய ஒளி, பால் மற்றும் பால் பொருட்கள், மீன் எண்ணெய், முட்டை.

இ – பருப்பு வகைகள், கீரைகள், கோதுமை ரொட்டி, காய்கறி, எண்ணெய், வெண்ணெய்.

கே – பச்சைக் காய்கறிகள், காலிஃப்ளவர், எண்ணெய்கள், தானியங்கள், பழங்கள், பருப்பு வகைகள்.



நூமாத்தாயி?

சிறைச்சாலை அதிகாரி, கைதிகள் அவர்களுடைய உறவினர்களுக்கு எழுதி அனுப்பும் கடிதங்கள் ஒவ்வொன்றாகப் படித்துப் பார்த்துக் கொண்டே வந்தார். அதில் ஒரு கடிதம்! அதைப் படித்ததும் அசந்து போனார் அந்த அதிகாரி.

அதில் க்ஷேம சமாசாரங்களுக்குப் பின்பு "நூமாத்தாயி ராஜகுமாரி சௌக்கியமாக இருக்கிறாளா? இன்னும் என் மீது கோபமாகவே இருக்கிறாளா? இல்லை, கோபம் தீர்ந்து விட்டதா? அவளை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று எழுதப்பட்டிருந்தது.

சிறை அதிகாரிக்கு உடல் வியர்த்தது. பயமும் உண்டாகியது.

'யார் இந்த நூமாத்தாயி? இவள் தாய்லாந்திலிருக்கும் நூமாத்தாயியா? இல்லை நம் நாட்டிலேயே இருப்பவளா? அந்த ராஜகுமாரிக்கும் இந்தக் கடிதம் எழுதியுள்ள பெண் கைதிக்கும் என்ன சம்பந்தம்? இப்படி அக்கறையுடன் எழுதியிருக்கிறதைப் பார்க்கும் போது நூமாத்தாயி இந்த நாட்டில்தான் இருப்பாள்' இப்படியெல்லாம் சிந்தனை ஓடியது!

துப்பறிபவர்களிடம் கடிதத்தைக் காட்டி நூமாத்தாயி யாரென்று கண்டு பிடிக்க உத்தரவிட்டார், அதிகாரி.

அப்போது சுதந்திர போராட்ட காலம். கைதிகள் எழுதும் கடிதங்களை ஜெயில் அதிகாரிகள் படித்துப் பார்த்த பிறகே, தபாலில் அனுப்புவர். பிரிட்டிஷ் அரசாட்சிக்கு எதிராக சதி, சூழ்ச்சி ஏதேனும் நடத்த சூசகமான செய்தி கடிதங்களில் இருக்குமோ என்ற பயம்.


ஒரு நாள் துப்பறியும் அதிகாரி சிறைச்சாலைக்கு வந்தார். அதிகாரியிடம் காதோடுகாதாக ஏதோ ரகசியமாகச் சொன்னார். அந்த அலுவலகத்திலிருந்த சக அதிகாரிகள் அதைக் கண்டு தமக்குள் சிரித்துக் கொண்டனர்.

1942ஆம் ஆண்டு, மகாத்மா காந்தி, சரோஜினி நாயுடு, இன்னும் சிலரையும் கைது செய்து ஆகாகான் சிறையிலடைத்து வைத்திருந்தனர். மேற்படி நிகழ்ச்சி அங்கே நடந்ததுதான்.

கடிதம் எழுதியவர் கவிக்குயில் சரோஜினி நாயுடு; எழுதியது அவருடைய குடும்பத்தாருக்கு; அவர் குறிப்பிட்ட 'நூமாத்தாயி' வேறு யாருமல்ல. அவர் செல்லப் பிராணியாக வளர்த்த ஒரு பூனை. அதன் பெயர்தான் 'நூமாத்தாயி!'

— ஏழ்வரைக்கடியான்

ஒன்பதாம் வீடு!



7. அப்பாவுக்காக

சிலருக்கு திறமைகள் பிறவியிலேயே அமைந்து விடுகின்றன. வேறு சிலருக்கு கலைகளில் அளவிட முடியாத ஈடுபாடு இருக்கும். அதை வைத்து அவர்கள் கடுமையான பயிற்சிகளால் தங்கள் திறமையை வளர்த்துக் கொண்டு பிரகாசிப்பார்கள்.

முதல் வகையான பிறவித் திறமைக்கு எடுத்துக்காட்டு சித்ரா. இரண்டாவது வகைக்கு உதாரணம், சித்ரா படித்த அதே பள்ளியில், அதே வகுப்பில் படித்து வந்த மாணவி விஜயா.

சித்ராவுக்குக் கிடைத்த பெருமையையும் புகழையும் பார்த்துத்தான் விஜயா ஓவியம் வரைய கட்டாயமாகப் பயின்றாள். எப்படியாவது சித்ராவைவிடத் திறமையானவள் என்று மற்றவர்கள் புகழும் வண்ணம் ஓவியம் வரையக் கற்று பரிசு பெற வேண்டும் என்ற நோக்கத்திலேயே அவள் ஓவியப் பள்ளி ஒன்றில் மாலை நேரத்தில் பயின்றாள். ஓரளவு வரையவும் கற்றுக் கொண்டு விட்டாள். ஆனால் இயற்கையாக அமைந்த கலையார்வத்தின் முன்னால் அவளது திறமை எடுபடவில்லை. இருந்தாலும் எப்பாடு பட்டாவது சித்ராவின் திறமை எடுபடாவண்ணம் ஏதாவது செய்து முன்னேறிவிடத் துடித்தாள் விஜயா.

அன்று தபால்காரர் சித்ராவைத் தேடி வந்தார். அவர் கையில் ஒரு கட்டு தபால் உறைகள்! அவர் வந்த போது பசுபதி வீட்டில் இருந்தார். இரண்டாவது சனிக்கிழமை ஆதலால் சித்ராவுக்குப் பள்ளி இல்லை. அவளும் வீட்டில் இருந்தாள்.

“என்னம்மா சித்ரா... அஞ்சல் வழி ஓவியக் கல்லூரியில் இருந்து உனக்கு இரண்டு தபால் வந்திருக்கு. பி. சித்ரான்னு பெயரை மட்டும் சரியா எழுதியிருக்காங்க. மத்தபடி வீட்டு எண், தெருப் பெயர், எல்லாமே தப்பா எழுதியிருக்கு! ஓவியம் சம்பந்தப்பட்டது என்பதால் கண்டிப்பா உனக்கு அனுப்பப்பட்டதாகத்

வெ. நல்லதம்பி

தான் இருக்கும்னு எடுத்துக்கிட்டு வந்தேன்'' என்று சிரித்தபடி இரண்டு கனத்த உறைகளைத் தந்தார் தபால்காரர்.

"ரொம்ப நன்றி ஐயா!" என்று உறைகளை வாங்கிக் கொண்டாள் சித்ரா. முகவரி, அமைச்சரிடம் அவள் தந்து விட்டு வந்த தவறான முகவரிக்கே சரியாக அனுப்பப்பட்டிருந்தது! அமைச்சர் சொன்னபடி செய்து விட்டார். இனி அதைப் பயன்படுத்துவதும், விடுவதும் அவள் கையில் இருக்கிறது.

''இன்னிக்கே சரியான முகவரிக்கு அனுப்பச் சொல்லி எழுதிப்போடும்மா'' என்று சிரித்தார் தபால்காரர்.


''கண்டிப்பாக இப்பவே பண்றேன். உங்கள் அன்புக்கு என் நன்றி'' என்று கை கூப்பினாள் சித்ரா.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தார் பசுபதி. சித்ராவின் கலை ஆர்வத்தை வளர்க்க உலகமே ஒன்றுபட்டு நிற்பது போலவும், அதற்கு எதிராகத் தானும் தன் மனைவியும் மட்டும் இருப்பது போலவும் ஒரு உணர்வு!

"அப்பா, உங்கள் அனுமதி இல்லாமல் நான் இதைப் பயன்படுத்த மாட்டேன். நான் வரைந்து அனுப்பினால்தானே அவர்கள் அடுத்த பாடத்தை அனுப்புவார்கள்?'' என்று கூறிய சித்ரா, தபால்காரர் கொடுத்த அஞ்சல் வழி ஓவியப் பாடங்களை பசுபதியிடம் தந்து விட்டு உள்ளே போய்விட்டாள்.

''எந்தச் சோப்பு போட்டுக் குளிச்சா அம்மா நான் சிகப்பா வேன்...?''

- நெற்குப்பை கி. மனோகரன்



நாட்கள் ஓடின. வகுப்பில் பாடம் நடந்து கொண்டிருந்த போது பெரிய மேடத்திடம் இருந்து ஒரு சுற்றறிக்கை வந்தது. லயன்ஸ் கிளப்பும் கோகுலம் சிறுவர் சங்கத்தின் கிளையும் இணைந்து பள்ளி மாணவர்களின் ஓவியத் திறமையை ஊக்குவிக்க ஓவியப் போட்டி ஒன்றை நடத்தப் போவதாகவும், அதில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்களின் பெயரைத் தெரிவிக்கும்படியும் அறிக்கை தெரிவித்தது.

''என் பெயரைச் சேர்த்துக் கொள்ளுங்கள் மேடம்'' என்று எழுந்து நின்றாள் விஜயா.

வேறு யாரும் பெயர் தரவில்லை. சித்ரா தலை குனிந்தபடியே பேசாமல் இருந்தாள்.

''ஏண்டி, உன் பெயரைச் சொல்லேண்டி?'' என்று தூண்டினாள் நளினி.

எல்லோரும் சித்ராவையே நோக்கினார்கள். அவள் எழுந்து பெயரைத் தராதது எல்லோருக்குமே புதிராக இருந்தது.


சித்ரா, தன் பெயரைத் தராதது அம்புஜம் டீச்சருக்கு அதிசயமாகப் படவில்லை. தன்னோடும் பெரியமேடத்தோடும் பசுபதி நடத்திய வாக்குவாதம் அவருடைய நினைவில் பசுமையாக இருந்தது.

"சித்ரா, உன் பெயரை நான் எழுதி அனுப்புகிறேன். உங்க அப்பாவிடம் கேட்டுப் பார். அவர் அனுமதி அளித்தால் கலந்து கொள். இல்லையேல் போட்டியன்று கலந்து கொள்ளாமல் இருந்துவிடு'' என்றார் அம்புஜம் டீச்சர்.

''இல்லை வேண்டாம் மிஸ். என் பெயரைத் தயவுசெய்து எழுதாதீர்கள்'' என்று கெஞ்சினாள் சித்ரா.

"வேறு யாராவது இருக்கிறீர்களா?'' என்று கேட்டார் அம்புஜம் டீச்சர். யாருமே எழுந்து நிற்கவில்லை. கனத்த மனத்துடன் சித்ராவின் பெயரை எழுதாமல் சுற்றறிக்கையைப் பியூனிடம் தந்து அனுப்பி வைத்தார்.

"பெயரை அனுப்ப கடைசி தேதி அடுத்த வாரம்தான். இந்தப் பட்டியல் நாளைக்குப் போய் விடும்.



ஒருவேளை கடைசி நிமிஷத்தில் உன் தந்தையின் மனம் மாறினால், நேராகவே லயன்ஸ் கிளப்புக்கோ, சிறுவர் சங்கத்திற்கோ போய்ப் பெயர் தரலாம்" என்றார் வகுப்பை முடிக்கும் போது அம்புஜம் டீச்சர்.

சித்ரா, தனது கண்களில் திரண்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். "விருப்பமில்லாதவர் பெயரை எழுத ஏன் இப்படிக் கட்டாயப்படுத்துகிறீர்கள் எல்லோரும்!" என்று வாய்விட்டுக் கூறி தன் எண்ணத்தை வெளிப்படுத்தினாள் விஜயா. சித்ராவின் பெயர் எழுதப்படாதது குறித்து அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சி.

ஒருவாரம் ஓடியது. இரவு ஏழு மணி இருக்கும். பசுபதி அப்பொழுதுதான் அலுவலகத்திலிருந்து வந்திருந்தார். சித்ரா படித்துக் கொண்டிருந்தாள்.

வாசலில் கார் நின்ற சத்தம் கேட்டது. சித்ரா வந்து கதவைத் திறந்தாள்.

"இது மிஸ்டர் பசுபதி வீடுதானே?" என்று கேட்டார் வந்தவர். அவர் வாட்ட சாட்டமாக இருந்தார். முகத்தில் செல்வக் களை. ஆனால் பண்பும் அடக்கமும் தெரிந்தது.

"உள்ளே வாருங்கள்" என்று அவரை வரவேற்று உட்கார வைத்தாள் சித்ரா. உள்ளே போக அவள் திரும்பியபோது, "நீதானேம்மா சித்ரா?" என்று கேட்ட அவர், நான் தான் நிஜாவின் அப்பா" என்று கூறி உட்கார்ந்தார்.

"வணக்கம் சார்" என்று கரம் கூப்பினாள் சித்ரா. இதற்குள் பசுபதியும் வந்துவிட்டார்.

"நான் லயன்ஸ் - கிளப் கவர்னர். அதோடு நிஜாவின் அப்பா," என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் அவர்.

"சித்ரா வரைந்த என் பெண்ணின் படம் என் வீட்டு வரவேற்பு அறையை அழகு செய்து கொண்டிருக்கிறது. எங்கே இருந்து பார்த்தாலும் பேசுவது போல் தத்ரூபமாக இருக்கிறது. பள்ளியில் கேட்டு நான்தான் வாங்கிக் கொண்டு வந்தேன்."

பசுபதி, சித்ராவை யோசனையுடன் பார்த்தார்.

"கோடை விடுமுறைக்கு முன்னாலேயே போட்டுவிட்ட படம்பா அது.

அதைப் பார்க்காமலேயே நிஜா போய் விட்டாள்'' என்றாள் சித்ரா கண்கள் பனிக்க.

"மிஸ்டர் பசுபதி, காரியமாகத்தான் நான் வந்திருக்கிறேன். பள்ளி மாணவர்களுக்காக லயன்ஸ் கிளப் ஓவியப் போட்டியை ஏற்பாடு செய்திருக்கிறது. பள்ளியிலிருந்து அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் சித்ராவின் பெயர் இல்லை. சித்ரா கலந்து கொண்டால், முதல் பரிசும் தங்கப் பதக்கமும் அவளுக்குத்தான் கிடைக்கும். ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதைக் கேட்டுப் போகவே நான் வந்திருக்கிறேன்."

பசுபதியின் முகம் இறுகியது. சித்ரா உள்ளே சென்று மறைந்து கொண்டாள்.



"குரங்கை வச்சு படம் எடுத்தீங்களே, படம் எப்படிப் போகுது?"

"இரண்டு நாளைக்கு ஒவ்வொரு ஊரா தாவித் தாவி போய்க்கிட்டிருக்கு!"

— மேலப்பாதி நாகராஜ்

பசுபதி இறுக்கமான முகத்துடன் தனது நிலையை விளக்கினார்.

"என் அனுமதி இல்லாமல் இனி எந்தப் போட்டிக்கும் பெயர்தரக்கூடாது என்று நான்தான் கண்டித்து வைத்திருக்கிறேன்."

உள்ளேயிருந்து வந்த சித்ரா, "நான்தான் என் பெயரை எழுதக்கூடாது என்று கூறி விட்டேன்" என்றாள்.

"மிஸ்டர் பசுபதி, நான் விவாதிக்கிறேனே என்று கோபப்படாதீர்கள். ஆயிரம் டாக்டர்களையோ, பொறியாளர்களையோ உருவாக்கி விட முடியும். ஆனால் பிறவி ஓவியன் ஒருவனை உருவாக்க மனித முயற்சிகளால் எளிதில் முடியாது. கற்பனை வளமும் ஓவியத் திறமையும் இறைவனின் திருவருள் இருந்தால் தான் கிட்டும். அதை வீணாக்கி விடாதீர்கள்," என்றார் நிஜாவின் அப்பா.

"இப்படிக் கிரீடம் சூட்டிச் சூட்டியே எங்கள் இலட்சியத்தைக் கலைத்து விடாதீர்கள் சார். சித்ரா டாக்டராகவோ, பொறியாளராகவோ ஆகட்டும். பிறகு வேண்டுமானால் ஓவியராகட்டும். அவள் எந்த ஓவியப் போட்டியிலும் கலந்து கொள்ள மாட்டாள். எங்களை மன்னியுங்கள்'' என்றார் பசுபதி.

"இதற்கு மேல் நான் உங்களைக் கட்டாயப்படுத்த மாட்டேன். போட்டிக்குப் பெயர்தரக் கடைசித் தேதிக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கு. அதற்குள் ஏதாவது அற்புதம் நடந்து, உங்கள் மனம் மாறினால், எனக்கு தொலைபேசியில் தகவல் தாருங்கள். தெய்வமாகி விட்ட என் பெண் நிஜாதான், உங்கள் மனதை மாற்றி, சித்ராவைப் போட்டியில் கலந்து கொள்ள வைக்க வேண்டும்'' என்று கை கூப்பினார் நிஜாவின் தந்தை.

பசுபதி அவருக்கு விடைகொடுத்து வழியனுப்பி வைத்தார்.

"வீடு தேடி வந்த பெரிய மனிதரை இப்படி மூர்க்கத்தனமாகப் பேசி அனுப்பி விட்டீர்களே!'' என்று சித்ராவின் அம்மா மங்கை குறைபட்டுக் கொண்டார். பசுபதி எதையும் பொருட்படுத்தவில்லை. சித்ரா, மனதைக் கல்லாக்கிக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள்.

அடுத்த நாள் அலுவலகத்திற்குப் போன பசுபதியை மேலதிகாரி சேர்மன் அழைப்பதாகத் தகவல் வந்தது.

பசுபதி குழப்பத்துடன் சேர்மன் அறைக்குள் நுழைந்து, வணக்கம் சொல்லி நின்றார்.

சிரிக்கவே மறந்தவர் என்று பெயரெடுத்திருந்த சேர்மன் அவரைக் கண்டதும் புன்னகைத்து, "வாருங்கள் பசுபதி... உட்காருங்கள்'' என்று உபசரித்தார்.

பசுபதிக்கு நடப்பது கனவா நனவா என்ற குழப்பம் வந்து விட்டது.

"நன்றி சார். இருக்கட்டும்.... அழைத்தீர்களாமே?'' என்று இழுத்தார்.

"முதலில் நீங்கள் உட்காருங்கள்" என்று கட்டாயப்படுத்தி அவரை உட்காரச் செய்தார் சேர்மன். வேறுவழியின்றி பட்டும் படாமலும் சோபாவின் நுனியில் உட்கார்ந்து கொண்டார் பசுபதி.

"உங்க மகள் சித்ரா பிறவி ஓவிய மேதையாமே...! என்னிடம் சொல்லவே இல்லையே?"

கடைசியில் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொள்ள வேண்டிய சமாச்சாரம் தானா? ஆனால் பசுபதி தன் வழக்கப்படி முகத்தை இறுக்கமாக வைத்துக் கொள்ளவில்லை! கேட்பவர் மேலதிகாரி ஆயிற்றே?



"என்னவோ எல்லோரும் பிறவி மேதை என்றுதான் சொல்லுகிறார்கள். ஏராளமாகப் பரிசு வாங்கியிருக்கிறாள். கண்களால் பார்ப்பதைக் கைகளால் வரைந்து காட்டுகிறாள்" என்று சித்ராவின் ஓவியப் பெருமைகளை விடாமல் ஐந்து நிமிடம் புகழ்ந்தார். அமைச்சர் புகழ்ந்து பரிசளித்தது, ஸ்டான்லியின் புகழாரம், நிஜாவின் படத்தை வரைந்தது என்று ஒன்று விடாமல் புகழ்ந்தார். புகழ்ந்து முடித்ததும்தான் சித்ராவிடம் இத்தனை திறமை இருக்கிறதா என்பதை அவரே எண்ணி வியந்து கொண்டார்.

"பசுபதி, உங்கள் சித்ராவால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும்" என்று நிறுத்தினார் சேர்மன்.

"என்ன வேண்டும் சொல்லுங்கள் சார்? செய்யக் காத்துக் கொண்டிருக்கிறோம்!"

"அடுத்த வாரம் வெள்ளிக் கிழமை எங்கள் வீட்டில் வரலட்சுமி விரதம். புது வீடு கட்டி முதன் முதலாகக் கொண்டாடும் பண்டிகை. கவசம் வைத்த வரலட்சுமி படத்தை அழகாக வரைந்து தரவேண்டும். முடியுமா?"

"சார், நானே சித்ராவை அழைத்துக் கொண்டு வருகிறேன். பார்ப்பவர்கள் எல்லாம், யார் போட்டார்கள் என்று கேட்கும்படி இருக்கும். எப்போ வந்தால் வசதியாக இருக்கும்?" என்று குழைந்தார் பசுபதி.

"சனிக்கிழமை பள்ளி விடுமுறை தானே? மாலையில் அலுவலகம் விட்டதும் என் காரிலேயே சித்ராவை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய் விடலாம். முடிந்ததும் எத்தனை நேரமானாலும் நானே கொண்டு விடுகிறேன். சரிதானே?"

பசுபதி தலையசைத்தார். மகிழ்ச்சியுடன்.

"பசுபதி, இந்த நேரத்தில் இதைச் சொல்வது பொருத்தமாக இருக்காது. உங்கள் பதவி உயர்வுக்கு சிபாரிசு செய்திருக்கிறேன். என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்" என்று சிரித்தார் சேர்மன்.

பசுபதி மகிழ்ச்சி நிறைந்த முகத்துடன் வீடு திரும்பி எல்லோருடனும் கலகலப்பாகப் பேசியது சித்ராவுக்கும் அம்மாவுக்கும் அதிசயமாக இருந்தது.

அப்பாவும் மகளும் சாப்பிட உட்கார்ந்தனர்.

"நிஜாவின் அப்பா தந்த விசிட்டிங் கார்டு பத்திரமாக இருக்கா?"

அம்மா மங்கை உள்ளே பத்திரப்படுத்திய விசிட்டிங் கார்டை எடுத்து வந்து தந்தார்.

"எதுக்குப்பா இதைக் கேட்கறீங்க?"

"நீ ஓவியப் போட்டியில் கலந்துக்கப் போறேம்மா. நான் முடிவு பண்ணிட்டேன். சாப்பிட்டதும் வெளியே போய் போன் பண்ணிட்டு வரலாம்."

பேசுவது அப்பாதானா என்ற சந்தேகத்துடன் சித்ரா பசுபதியைப் பார்த்தாள்.

"நான்தாம்மா பேசறேன்! இந்த முடிவுக்குக் காரணம் இருக்கு. நாளை மாலை எங்க சேர்மன் வீட்டுக்குப் போவோம். அங்கே அவர்கள் வீட்டுப் பூஜைக்காக வரலக்ஷ்மி படத்தை வரையப் போறே...!"

தந்தையின் தர்மசங்கடம் சித்ராவுக்குப் புரிந்தது. அவள் சிரித்தாள்.

"அப்பா, நீங்க என்ன சொல்கிறீர்களோ அதை நான் கண்டிப்பாகக் கேட்பேன். வரையச் சொன்னா வரையறேன். வேண்டாம்னா வேண்டாம். இப்பக்கூட நீங்க உங்க முடிவைத் தளர்த்திக் கொண்டதற்காக என்னைப் போட்டிக்கு அனுப்ப வேண்டாம்."

"அப்படி இல்லேம்மா. இந்த ஒரே ஒருமுறை கலந்துக்க. அப்புறம் வேண்டாம்."

தாயும் மகளும் சிரித்துக் கொண்டார்கள்.

(வளரும்)

குறளைக் கண்டுபிடியுங்கள் — போட்டி முடிவு

இந்தப் போட்டியில் ஏராளமானோர் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். பெரும்பாலானோர் சரியான விடையையே எழுதியிருக்கிறார்கள். எனவே பரிசுக்குரியோரை குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்க முடிந்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. ஆ. சிவசங்கரி, ஏழாம் வகுப்பு, 'அ' பிரிவு, முதலியார் மேல்நிலைப் பள்ளி, சாயிநாதபுரம், வேலூர்.
2. எஸ். ஜெய்கணேஷ், மணவாள நகர், திருவள்ளூர்.
3. எம். எஸ். ரமேஷ்குமார், தலை ஞாயிறு, நாகை மாவட்டம்.
4. ப. பெரில், ராமன் புதூர், நாகர் கோவில்.
5. கோ. பிரியா, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, பெரியதச்சூர் அஞ்சல், திண்டிவனம்.
6. செ. தாமரைக் கண்ணன், ஐந்தாம் வகுப்பு, 'அ' பிரிவு, காந்தி மெட்ரிக் பள்ளி, ந. கந்தம்பாளையம்.
7. க. அக்ஷயா, புலியூர் அஞ்சல், கரூர் மாவட்டம்.
8. என். பாப்பாரலிங்கம், ஆறாம் வகுப்பு, அருணகிரிப்பட்டிணம், தேவகோட்டை.
9. வி. ரம்யா, ஏழாம் வகுப்பு, பொன்மலை, திருச்சி மாவட்டம்.
10. எஸ். ஜானகிராமன், பத்தாம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, அனந்தபுரம், செஞ்சி.
11. ஆர். ஜெயஸ்ரீ, எட்டாம் வகுப்பு, இராயப்பேட்டை, சென்னை.
12. அ. தில்லை ஆனந்த், எஸ்.எஸ். காலனி, மதுரை - 10.
13. ஆர்.பி. லலிதாதேவி, அருப்புக்கோட்டை.
14. எம். முஹம்மது சாஜஹான், அடியக்கமங்கலம், திருவாரூர் மாவட்டம்.
15. பி. ரேவதி, நெல்லிக்குப்பம்.

சரியான விடை

கேடில் விழுச்செல்வம் கல்வி - ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



THE MAGIC RING

THE JURASSIC AGE

I'M YOUR HEART

NATURE SPECIAL

GOKULAM

The monthly magazine for children

Rs.5/-only

MARCH '98

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal,
Chennai - 600 097.



பூக்கள்

ஆயிரம் வண்ணப் பூக்கள்
அழகாய்ச் சிரிக்கும் பூக்கள்
வாசம் மிக்க மல்லிகை
வண்டு மொய்க்கும் ரோஜா
சிவப்பு பூசிய செம்பருத்தி
சிங்கார மஞ்சள் சாமந்தி
குளத்தில் மிதக்கும் தாமரை
குன்றா அழகு தாழம்பூ
மனதைக் கவரும் மகிழம்பூ
மலையில் பூக்கும் குறிஞ்சி
இன்னும் பல உண்டு
இங்கே சொல்ல இடமுண்டோ!

– ர. சோமநாதன்,
விக்கிரவாண்டி,
விழுப்புரம் மாவட்டம்.

கிளி

பச்சை வண்ணக் கிளியாம்
பார்க்க நல்ல அழகாம்!

பிள்ளைப் போல பேசுமாம்
பூனையைக் கண்டால் அஞ்சுமாம்!

கூண்டில் அடைத்தால் கத்துமாம்
குறும்பு செய்தால் கொத்துமாம்!

கொத்தி கொத்தி தின்னுமாம்
கோவைப் பழநிற அலகாம்!

பறந்து திரியும் கிளியாம்
பார்த்து நாமும் ரசிப்போம்!

– ஜெ. மாலதி,
ரெய்ச்சூர்





குரங்கு


குட்டிக் குரங்கு கூட்டமே
குட்டிக் கரணம் போட்டிடும்
பல்டி அடித்துத் தாவியே
பார்ப்போர் மனதைக் கவர்ந்திடும்!


வெள்ளைக் குட்டி தாய்மேலே
வெளவால் போலத் தொங்கிடும்!
சுற்றிச் சுற்றி இரைதேடி
சுவைத்து உணவைச் சாப்பிடும்!

குச்சி எடுத்து சீண்டினால்
கோபம் கொண்டு பற்காட்டும்!
கொய்யாக் கனியை நீட்டினால்
கொள்ளை ஆசையில் கைநீட்டும்!

தாயே உணவைக் கொடுத்தாலும்
தட்டிப் பறித்துத் தின்றிடும்!
காண வாருங்கள் குழந்தைகளே
குரங்கின் குறும்புச் சேட்டைகளை!

– கு. காளிமுத்து,
வல்லம், தென்காசி தாலுகா,
திருநெல்வேலி.





இராமத்துப் பையன், பூவை அமுதன், பக். 120, ரூ. 24/- வசந்தா பிரசுரம், 6. ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033.

தனது தொடர்கதையாலும், சிறுகதைகளாலும் கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் படைப்பு இது. கல்வி, நல்ல பண்புகள் ஆகிய இரண்டுமே உயர்வுக்கு அடிப்படை என்பதை வலியுறுத்தும் நாடகம். நாடகத்தின் கதாநாயகன், ஏழைச் சிறுவன் கண்ணன். இவனுக்கு ஏற்படும் சோதனைகளும், இவற்றை எதிர் கொண்டு வெற்றி கொள்ள உதவும் பண்புகளும் நாடகத்தை வீறு நடை போட வைக்கின்றன. எளிமையான உரையாடல் ஆசிரியரின் திறமைக்கு எடுத்துக்காட்டு. இது குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் ஏ.வி.எம். அறக்கட்டளையின் தங்கப் பதக்கம் பரிசு பெற்றது (1995) என்பது கூடுதல் சிறப்பு.

குறளும் குழந்தைக் கவிதையும், வே.இரா. சிவஞான வள்ளல், பக் 80, ரூ.20/- 6, கலைஞர் தெரு, புலவர்நகர், வேலூர்–9.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் குழந்தைப் பாடல்களைப் படைத்து வரும் அனுபவம் மிக்க கவிஞரின் முத்தான முப்பத்தெட்டு பாடல்கள் இதில் உள்ளன. திருக்குறளின் அறத்துப் பாலில் உள்ள 38 அதிகாரங்களுக்கும், அதிகாரத்திற்கு ஒரு பாடலாக இது 38 மணியான திருக்குறள்களைச் சிறுவர் மனதில் பதிய வைக்கின்றது. தாளாகவே தாளம் போட வைக்கும் சந்தங்கள். உ-ம்

இந்த உச்சிப் பொழுதினில்
எரிக்கும் வெய்யில் காய்கையில்

இந்தச் சிறிய மண்புழு
என்ன பாடு படுதுபார்!

என்பி லாத உடலினை
எடுத்தி ருக்கும் யாவுமே

கன்றிப் போகும் வெய்யிலில்
காய்ந்து போகும் வெய்யிலில்!


– பக். 20


"என்பில் அதனை..." என்று தொடங்கும் குறளுக்கு எத்தனை எளிய விளக்கமாக அமைகிறது பாடல்! படங்கள் இல்லாதது பெரிய குறைதான். மு.வ. அவர்களின் அணிந்துரை சிறப்பு சேர்க்கிறது.


பைந்தமிழ் வளர்த்த பாவலர் செய்குத் தம்பி, அருள்தம்பி, பக். 192, ரூ:36/- மணிமேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை – 17.


செந்தமிழ்ப் பாவலராகவும், சமய வேறுபாடுகளைக் கடந்தவராகவும், அவதானியாகவும் விளங்கிய செய்குத்தம்பிப் பாவலரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் இது. சமயங்களைக் கடந்த இத் தமிழ்ப் பெரியாரது முழுமையான வரலாற்றை விளக்கும் நூல்கள் மிகக் குறைவு. இதை இந்த நூல் போக்குகிறது. சாதி மத வேறுபாடுகளைக் கடந்தவர்களாக அக்காலப் பெருமக்கள் இருந்த நேர்த்தியை புத்தகம் அழகாகக் கூறுகிறது. மத நல்லிணக்கம் அவசியம் தேவைப்படும் இக் காலத்திற்குத் தேவையான நூல். அவசியம் படிக்க வேண்டிய பட்டியலில் இடம் பெற முற்றிலும் ஏற்றது.

— ரே


நட்பு
கதை : சங்கீதா
படம் : சசி
அனி, கனி, முனி மூவரும் நண்பர்கள். அதிகாலை நேரம் –
சீக்கிரம் போனால்தானே உணவு கிடைக்கும் முனி.
இவ்வளவு சீக்கிரம் எங்கே கிளம்பிட்டே கனி?
இன்னிக்கி விறகு இருக்கு. பழம், காய மட்டும் கொண்டு வா.
சரி, சீக்கிரம் வந்துடறேன்.
அனி, நீயாவது தூங்கு. நேற்றே நிறைய தானியம் கொண்டு வந்துட்டே! வெயில் வந்ததும் தண்ணீர் எடுக்கப் போகலாம்.
சரி, நீயும் சிறிது ஓய்வு எடுத்துட்டு சமைக்க ஆரம்பித்தால் போதும்.
சிறிது நேரத்தில் கனி கொண்டு வந்த காய்களையும், அனி கொண்டு வந்த தானியத்தையும் சமைத்தது முனி.
மூன்றும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டன. மகிழ்ச்சியாக இருந்தன.
ஒரு நாள் –
முனி எப்படி இருக்கே? இளைச்சுப் போயிட்டியே!
எனக் கென்ன குறை! நல்லாத்தான் இருக்கேன் நரி.


கனி, அனியைக் காணோமே!
உணவு சேகரிக்கப் போயிருக்காங்க.
அவங்க ரெண்டு பேரும் சுலபமான வேலைகளைச் செய்யறாங்க. நீதான் கஷ்டப்படுறே!
எனக்கென்ன கஷ்டம், ஜாலியா வீட்லேயிருந்து சமைக்கிறேன்!
காய், விறகு கொண்டு வருவதும், தண்ணீர், தானியம் கொண்டு வருவதும்தான் சுலபமான வேலை.
உண்மையாகவா சொல்றே?
ஏதோ மனசுல பட்டது. சொன்னேன். இனி உன் சாமர்த்தியம், நான் வரேன்!
நனி போகும் வழியில் –
வாங் கண்ணா! வீட்டுக்குப் போகலாம்.
உன்னைத் தேடித்தான் வீட்டுக்குப் போனேன், நீ இல்லை.


ஏன் இப்படி ஒல்லியா போயிட்டே! முனியும் கனியும் சாதாரண வேலை செய்யறாங்க. நீதான் இப்படி அலைந்து திரிந்து தண்ணீர் கொண்டு போறே!
என் வேலை சுலபமானதுதான். நான் சாப்பிட உழைக்க வேண்டாமா?
நீதான் அதிகம் உழைக்கணுமா? யோசிச்சுப் பாரு. இந்த அண்ணன் சொல்வது புரியும்.
நனி சிறிது தூரம் சென்றவுடன் –
கனி என்னைப் பார்க்காமலே போறியே!
வாங்கண்ணா. வெயில்ல பறந்து வந்ததால் கண் இருட்டிடுச்சு. மன்னிச்சிடுங்க.
அவங்க ரெண்டு பேரும் ஜாலியாக வேலை செய்யறாங்க. நீதான் இப்படி வெயிலில் கஷ்டப்பட்டு கறுத்துப் போயிட்டே!
என் நிறமே கறுப்புதானே!
சொல்வதைச் சொல்லிட்டேன். ரொம்ப வேலை செய்யாதே!
நான் கிளம்பறேன்.
அன்று இரவு முனி, கனி, அனி மூன்றும் யோசித்தன. ஒவ்வொன்றும் தன் வேலைதான் கஷ்டம் என எண்ணின.


மறு நாள் காலை —
முனி, அனி நான் சமைக்கிறேன். நீங்க யாராவது என் வேலையைச் செய்யுங்கள்.
நானும் என் வேலையைச் செய்ய மாட்டேன்.
நான் மட்டும் எதுக்கு என் வேலையைச் செய்யணும்? என் வேலைதான் கஷ்டம்.
இல்ல என் வேலைதான் கஷ்டம்.
என் வேலை கஷ்டம்னு சொன்னதே அதுதான்.
இல்லையில்லை. என் வேலைதான் கஷ்டம். நனி அண்ணாவைக் கேட்டுப் பாரு.
எங்கிட்ட கூட அப்படித்தான் சொன்னது.
நம்மை பிரிக்கத்தான் நனி சதி செய்திருக்கு.
நல்ல வேளை. நாம சண்டை போட்டு பிரியறதுக்குள்ளே நனியின் சூழ்ச்சி புரிஞ்சிடுச்சு.
இனிமேல் யார் எது சொன்னாலும் நாம பிரிய மாட்டோம்.

இதுதான் சொர்க்கம்!



வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் ஒன்பதாவது கதை.

குட்டூர் ஆனந்த்

அதிகாலை ஐந்தரை மணி. அம்மா வீட்டு வாசலில் சாணம் தெளிக்கும் 'சளக் சளக்' ஓசையும் கிராமப்புறத்துச் சேவல்களின் 'கொக்கரக்கோ... கோ...' என்ற கூவலும் ரவியின் உறக்கத்தைக் கலைத்தது. கண்கள் சொருக திரும்பிப் படுத்து மீண்டும் தூங்க ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் அம்மா வந்து "ரவி... ரவி... எழுந்திரிடா?" என்று எழுப்பினார்.

''இன்னமும் தூக்கம் வருதும்மா'' என்றான் ரவி கண்களைக் கூடத் திறக்காமல்.

''வேலையெல்லாம் அப்படி அப்படியே இருக்குது எழுந்திருடா ரவி. அடுப்பே பத்த வைக்கலே, வீட்டைப் பெருக்கணும். தண்ணி எடுக்கணும், பால் கறக்கணும், இன்னும் எத்தனை வேலையிருக்குது. எழுந்திருடா" என்று கூறியபடியே அம்மா அடுப்பங்கரைப் பக்கம் சென்றார்.

வேறு வழியில்லாமல் மெல்ல எழுந்த ரவி வாசலில் வந்து நின்று பார்த்தான். வைகறை கால வெளிச்சம் கண்களுக்கு 'மசமச' என்று தெரிந்தது. கண்களைக் கசக்கியபடியே... புறக்கடைக்கு வந்து அதிகாலையின் குளிர்ந்த நீரில் முகம், கை, கால்களை கழுவிக் கொண்டான். தூக்கம் பறந்து போனது. புத்துணர்ச்சியோடு மாட்டுக் கொட்டகைக்கு வந்தான்.

கொட்டகையில் இருந்த இரண்டு கறவை மாடு, கன்றுக் குட்டிகளையும் பிடித்து வெளியில் கட்டி வைக்கோல் போட்டான். சாணிக் கூடையையும், தென்னந்துடைப்பத்தையும் எடுத்துக் கொண்டு சாணம் வாரும் வேலையில் ஈடுபட்டான். அடுத்த பதினைந்து நிமிடங்களில் அந்த வேலையை முடித்துவிட்டு, கை கால்களைக் கழுவிக் கொண்டான். சமையல் செய்வதில் ஈடுபட்டிருந்த அம்மாவிடம் கூறிவிட்டு பாடப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வயல் பக்கம் சென்றான். நெல் வயலுக்கு தண்ணீரைத் திருப்பிவிட்டு அருகில் இருந்த ஒரு பாறையில் வசதியாக அமர்ந்து கொண்டான் பாடத்தைப் படிக்க.

வீண் ஆரவாரமற்ற கிராமத்தின் அமைதி அந்த அதிகாலை வேளையில் மனதுக்கு இதமாகவே இருந்தது. சூரியன் 'இப்போ வரவா...? அப்புறம் வரவா?' என்று கேட்டுக் கொண்டிருந்தான். பார்க்கும் வரப்பெல்லாம் பயிர்களின் பச்சை நிறம் மனதை ஆக்கிரமித்தது. சிலுசிலுவென்ற இளம் குளிர்காற்று, அதிகாலையில் இரை தேடக் கிளம்பிவிட்ட பறவைகளின் ஆனந்தக் 'கீச்மூச்', பறக்கும் போது ஏற்படும் ஒருவித 'விஸ்க்' ஓசை, காதுக்கும் மனதுக்கும் இனிமையாக இருந்தது. எங்கோ தூரத்தில் பஞ்சாயத்து வானொலியின் விவசாய அறிவிப்பு கேட்டது... இத்

தனையும் கண்டு அனுபவித்து ரசிக்க ஒரு ஜன்மம் போதாது!

ஆனால் அன்று இவற்றையெல்லாம் ரவி ரசிக்கவில்லை. பின் படிப்பில் கவனமா... என்றால் அதுவும் இல்லை! அவனுக்கு என்ன ஆயிற்று?

சமீப காலமாகவே அவன் மனத்தில் ஒரு ஆசை வளர்ந்து கொண்டிருந்தது. அது 'அடுத்த வருடம் முதல் ஒன்பதாம் வகுப்பைப் பட்டணத்தில் தொடர வேண்டும்' என்பதே! ரவி அப்போதே கூறிவிட்டான். "அப்பா, நான் அடுத்த வருஷத்துல இருந்து மாமா ஊரான பட்டணத்தில தான் படிப்பேன்!" என்று.

"ஏண்டா! பக்கத்து ஊரிலேயே இருக்குற பள்ளில சொல்லித் தரது பாடமில்லையா?" என்று கேட்டார் அப்பா.

"அது இல்லப்பா.. கிராமத்துப் பக்கத்துல இருக்கிற பள்ளிங்க எல்லாம் சரியில்லப்பா... சரியாகவே சொல்லித் தரதில்லே... மாமா ஊர் பட்டணத்துல எல்லாம், ரொம்ப நல்லா சொல்லித் தராங்கப்பா.. அதனால நானும் பட்டணத்துலேயே படிக்கறேம்பா. அங்க எத்தனை எத்தனையோ போட்டியெல்லாம் நடத்துறாங்களாம்! நல்லா பரிசும் வாங்கலாம். ஆனால் இங்க அந்த மாதிரி எதுவும் இல்லை. அதோட அங்க நூல் நிலையம் மாதிரி பல வசதியிருக்கப்பா..." என்று கெஞ்சினான்.

அவர்கள் குடும்பம் சற்று வசதியானது என்பதால் ரவியின் விருப்பத்திற்கு மறுப்பு இன்றி சம்மதம் கிடைத்தது.

இந்த அளவுக்கு ரவியின் மனத்தில் பட்டணப் படிப்பில் ஆசையை வளர்த்தவன் அந்த ஊர் பெருந்தகையின் மகன் செல்வராஜ்தான்! அவர்கள் குடும்பம் ஊரிலேயே பெரிய பணக்காரக் குடும்பம். செல்வராஜ் ஆறாம் வகுப்பு முதலே சென்னையில் படித்து வருபவன். அவன் தான் சென்ற கோடை விடுமுறையில் ஊருக்கு வந்தபோது ரவியிடம் பட்டணத்துப் பள்ளியில் உள்ள மாடிக் கட்டடங்கள், பூங்காக்கள், பெரிய கடை வீதி, விதவிதமான வாகனங்கள் என்று அப்படியும், இப்படியும் மிகைப்படுத்திக் கூறி ரவியின் மனத்தில் பட்டணத்து ஆசையை வளர்த்து விட்டான். இதுவே கிராமப் பள்ளியின் மீது ரவிக்கு ஏற்பட்ட வெறுப்புக்குக் காரணம்!


விடிந்தால் சாணம் வாரணும், வயலுக்குத் தண்ணீர் காட்டணும், நடந்தே பள்ளிக்குப் போகணும். நல்ல பாதை என்றால் சுற்று வழி! குறுக்குப் பாதையென்றால் நீரும், சேறும் உள்ள வயல் வரப்புதான். சாயந்திரம் வந்ததும் தண்ணீர் எடுக்கணும்; சாணம் வாரணும்; எழுதணும், படிக்கணும். இந்த கிராமத்து வாழ்க்கையை கருமம் பிடித்த வாழ்க்கையாக நினைக்க ஆரம்பித்தான் ரவி. ஆனால் பட்டணத்து வாழ்க்கையை சொர்க்க வாழ்க்கையாகக் கற்பனை செய்து கொண்டான்.


இப்போதும் கூட ரவி தீவிரமாகப் படிப்பது பட்டணத்துப் பள்ளியில் சேர அதிக மதிப்பெண் வேண்டுமே என்று தான்.

ஒரு மாதம் கழிந்தது. முழு ஆண்டுத் தேர்வும் முடிந்தது. எட்டாம் வகுப்புத் தேர்வில் நல்ல மதிப்பெண் வரும். அப்புறம் நாமும் செல்வராஜ் கூட பட்டணத்தில் படிக்கலாம் எனக் கனவு காணத் தொடங்கினான் ரவி.

அடுத்த ஓரிரு தினங்களில் மணி, கோடை விடுமுறையில் கிராமத்துக்கு வந்து சேர்ந்தான். ரவி ஆவலோடு மணியைப் பார்க்கச் சென்றான். மணி கூட ரவிக்கு தூரத்து உறவு. இரண்டு வருடங்களாக சென்னையில் வசிப்பவன். ஒவ்வொரு விடுமுறைக்கும் மணி தவறாமல்

"ஏன் வீட்டை மாத்திக் கிட்டே?"
"அந்த வீட்ல ஒரு பூச்சிக் கூட சாப்பிடறதுக்கு இல்லையே!"
— பொன். குமார், சேலம் - 6.





கிராமத்துக்கு வருவான். மணி அவனை அழைத்துக் கொண்டு வயல் வெளிப்பக்கம் நடக்கத் தொடங்கியதும் ரவிக்குக் கோப மான கோபம் வந்தது.

"ஏன்டா மணி, நீ எப்ப பட்டணத்து லேருந்து வந்தாலும், இந்த வயக்காட்டுப் பக்கமாகவே நடக்கக் கூட்டிக்கிட்டு வர் றியே! அப்படி என்னடா இந்த சேத்துல யும், பயிர்லேயும் இருக்கு?" என்றான் ரவி.

"உனக்கு இதன் அருமை தெரியாததால் இப்படி கேட்கறே. எனக்கு நகரத்துல கிடைக்காத சுகம், சுதந்திரம், திருப்தியெல் லாம் இந்த கிராமத்தின் வயக்காட்டுலே தானேடா கிடைக்குது!" என்றான் மணி.

"என்னடா... மணி இப்படிச் சொல்றே! நகரத்துல இருக்கும் வசதி, அருமை பெருமை, சுகம் எல்லாம் இங்கே கிடைக் குமா?" என்று வியப்புடன் கேட்டான் ரவி.

"பொதுவா... மேலோட்டமா பார்த்தா அப்படித்தான் தெரியும்! ஆனா அது ரொம்பவும் தப்பு ரவி! இங்கபாரு, பச்சை கம்பளமாய் வயல் வெளிகள். அழகான மரம், செடி, கொடிகள், மலைகள் பார்க்க எவ்வளவு அழகா இருக்கு தெரியுமா?" என்று கண்களை விரித்து வியந்தபடி கூறி னான் மணி.

"இதை நீதான் மெச்சிக்கணும். பட்ட ணத்துலனா... ஜாலியா கடைவீதியில சுத்த லாம், விதவிதமான தின்பண்டங்கள், துணி மணிகள் வாங்கலாம். பெரிய மாடிக் கட்ட டமாக இருக்கும் பள்ளிக்குப் போகலாம். இங்க மாதிரி சாணம் அள்றது, தண்ணீர் பாய்ச்சும் வேலையே இருக்காது. ரோட்டுல நடக்கறப்போ சாரி சாரியா போற, வர பஸ், லாரி, காரையெல்லாம் பார்க்க எவ்வளவு நல்லா இருக்கும். அதையெல்லாம் பார்த் துக்கிட்டே இருந்தால் பொழுது போறதே தெரியாதே!" ஆதங்கத்தோடு கூறினான் ரவி.

"நீ சொல்றதும் உண்மைதான்! ஆனா கிராமத்துல கிடைக்கும் சுத்தமான காற்று, நீர் அங்கு கிடைப்பதில்லை. ஒரு நல்ல காய்கறி கிடைப்பதில்லை. தைரியமா தெருவுல காலை வீசி நடக்க முடியாது. பிக்பாக்கெட், தெருவுக்கொரு விபத்து, மனிதாபிமானம் குறைந்து போன இயந்திரத்தனமான மனிதர்கள். அப்புறம் பள்ளிக் கூடங்கள்ல தேவையில்லாம ஏராளமான நோட்டுகளை வாங்கச் சொல் வாங்க; படிப்பிலேருந்து கவனம் சிதற ஏராள கேளிக்கைங்க... மொத்தத்துல நகர வாழ்க்கை நரக வாழ்க்கை. அதனாலதான் நான் கூட இந்த வருஷத்திலிருந்து நம்ம கிராமத்து லேயே தங்கி பக்கத்தூர்லேயே ஒன்பதாம் வகுப்புல சேரப் போறேன்! எங்கப்



பிரபல ஓட்டலில் ரௌடி ஒருவன் வந்து உட்கார்ந்து கழுத்தில் பெரிய கைகுட்டையைக் கட்டிக் கொண்டான்.

மானேஜர் சர்வரைக் கூப்பிட்டார். ''அந்த மாதிரி ஓட்டல் உள்ளே அநாகரிகமா எதுவும் செய்யக் கூடாது. அவனுக்கு நயமாக எடுத்துச் சொல்லு'' என்று அனுப்பி வைத்தார்.

'கைகுட்டையைக் கழுத்தில் இருந்து எடு' என்று சொன்னால் தன் கதி என்ன ஆகும் என்பது சர்வருக்குத் தெரியாதா என்ன? அந்த புத்திசாலி சர்வர் ஒரு தந்திரம் செய்தார்.

ரௌடியிடம் சென்று, ''என்ன சார், ஷேவிங்கா, ஹேர்கட்டா, மொட்டையா?'' என்று அவர் கேட்டதுதான் தாமதம். ரௌடி, 'ஷாக்' ஆகி கைக்குட்டையை அவிழ்த்து விட்டு பலகாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தான்!

— ஏழ்வரைக்கடியான்

பாவும் கூட சம்மதிச்சுட்டார்'' என்றான் மணி.

"என்னடா மணி நீ இப்படிச் சொல்லறே? நான் வந்து இந்த வருஷம் பட்டணத்துல படிக்க வரதா இருக்கேன்."

"என்னது! பட்டணத்து பள்ளியிலயா! வேணாம் ரவி வேணாம்! எப்பப்பாரு கை வலிக்க வீட்டுப் பாடம்தான். அங்கெல்லாம் போரடிச்சா இந்த மாதிரி இயற்கையை ரசிக்க முடியாது! இங்க மாதிரி தெருவுல சுதந்திரமா விளையாடவும், நடக்கவும் கூட முடியாது. அங்க சுத்தமில்லாத உணவுப் பொருட்கள், வாடின காய்கறிகள் தான். போரடிச்சா, பாட்டு, சினிமா, வீடியோன்னுதான் நேரத்தை செலவழிக்கணும். ஆனா இங்க ஆடு, மாடுகளோடு பழகலாம், காடு கழனி சுற்றலாம்!" என்று கூறினான் மணி.


''அப்ப பட்டணத்துல படிக்கக் கூடாதா... மணி?'' என்று கேட்டான் ரவி.

''அப்படியில்ல ரவி! பட்டணத்துல கிடைக்கிற அதே கல்வி நம்ம கிராமத்துலேயே கிடைக்கறப்ப எதுக்கு கனியிருப்ப காய்கவர்வது? இங்க ஓய்வு நேரத்தில படிக்காத ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்றுத் தரலாம். முடிஞ்சவரைக்கும் நாம கிராமத்துலேயே இருக்கணும். அப்பத்தான் நகரத்துல மக்கள் நெருக்கடியும் குறையும். அப்போதான் கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கும். அப்புறமா... கிராமத்துல இருந்து அப்பா அனுப்புற பணத்தை ஜாலியா செலவு செய்ய எனக்குப் பிடிக்கல. ஆனா நாம கிராமத்துல இருந்தா வீட்டுக்கு நம்மால முடிந்த உதவிகளைச் செய்யலாம். நம்ம மனசும் திருப்திப்படும். பெற்றோர்க்கும் சந்தோஷமா இருக்கும். இதனால் நம்மால எல்லா வீட்டு வேலைகளையும் கத்துக்க முடியும். அதனாலதான் சொல்றேன், பிளஸ்டு வரைக்கும் நாம பக்கத்தூரிலேயே படிக்கலாம்!" என்று தனது நீளமான பதிலை முடித்தான் மணி.

"நீ என் கண்களைத் திறந்து விட்டாய். எனக்கும் நீ சொல்றதுதான் சரியாப்படுது! சுற்றுப்புறம் மாசுபடற இன்றைய நிலையில நமக்கு கிராமம்தான் லாயக்கு! இப்பவே போயி எங்கப்பாகிட்ட கிராமத்துலேயே படிக்கறேன்னு சொல்லிடறேன்!" என்று வீட்டை நோக்கி ஓடினான் ரவி.


தூரத்தில் வானொலியில் "சொர்க்கமே. என்றாலும், அது நம்மூரு போலாகுமா..." என்ற பாடல் ஒலிக்க, அதையே தெளிந்த மனத்தோடு ரவியும் பாடிய படியே சென்றான்.

விடுகதைக்கு விடை சொல்லுங்கள்!




1. குப்பையை துரத்துபவனுக்கு கூடத்தில் இடம் இல்லை. அவன் யார்?
2. ஆளுக்கொரு உயரத்தில் ஐந்து உடன் பிறப்புகள். அவர்கள் யார்?
3. நோயில்லாதவனுக்கு இந்த டாக்டர் ஊசி போட்டார். அவர் யார்?
4. பந்தல் கொடியில் பச்சைப் பாம்புக் கூட்டம். அது என்ன?
5. நெருப்பை ருசித்தவனுக்கு நீண்ட ஆயுள். அவன் யார்?
6. தினம் ஒரு சட்டையைக் கழற்று வான். அவன் யார்?
7. அம்மா தந்த தட்டில் தண்ணீர் விட்டால் நிற்காது. அது என்ன?
8. இலை இல்லாத மரம் தலை மேலே முளைத்திருக்கிறது. அது என்ன?

— த. அன்பழகன், விஜயபுரம் அஞ்சல்,
திருவாரூர் மாவட்டம்.



1. அக்கா வீட்டில் விளக்கேற்றினால் தங்கை வீட்டில் தானே எரியும்.
2. அண்ணன் தம்பி இரண்டு பேர். அவர்களைச் சுற்றிலும் பன்னிரெண்டு பேர்.
3. சின்னத் தம்பி சிவப்பாயிருப்பான். திறந்த வாய் மூடாதிருப்பான்.
4. அழுத்தி அழுத்தி மிதித்தால் அலறி அடித்து ஓடும்.
5. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நியாயம் சொல்லுகிறார்.
6. ஓங்கி வளர்ந்தான். ஒரு பக்கம் சாய்ந்தான்.
7. ஓடையில் ஓடாத நீர் ஒருவரும் குடிக்காத நீர்.

— பா. சண்முகப் பிரியா
பதினோராம் வகுப்பு,
ஒத்தக்கடை.





எங்கள் பள்ளியில் நடந்தது!



சென்னை ஸ்கொயர்

என் நண்பன் நான்கு நாட்கள் பள்ளிக்கு வரவில்லை. மறுநாள் பள்ளியில் அவனைப் பார்த்ததும் "ஏண்டா நாலு நாளா லீவு போட்டுட்டே?" என்று கேட்டேன். "எனக்கு சென்னை ஸ்கொயர் வந்து விட்டது, அத னால்தான் பள்ளிக்கு வர முடியலை" என்றான். எனக்கோ ஒன்றும் புரியவில்லை. "புரிகிற மாதிரி சொல்லேண்டா" என்று கூறினேன். "மெட்ராஸ் ஐ என்பதை சென்னை



ஐ என்று கூறுவதற்குப் பதில் சென்னை ஸ்கொயர்ன்னு சொன்னேன்" என்றான்.

இ.க. பாலசுப்ரமணியன், திருவண்ணாதபுரம்.

இரு வகை வழிபாடு!

தமிழ் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் "இறைவனை இரு வகையில் வழிபடலாம், அவை என்னென்ன?" என்று கேட்டார். என் நண்பன் வேகமாக எழுந்து "சார் ஒன்று நின்று கொண்டு வழிபடுவது, இன்னொன்று விழுந்து வழிபடுவது" என்றான். ஆசிரியர் சிரிக்க நாங்களும் சிரிக்க ஆரம்பித்




தோம். அவனுக்கோ ஒரு மாதிரி யாகிவிட்டது. இதைக் கவனித்த ஆசிரியர், "ஒன்று பாமாலை தொடுத்து வழிபடல், மற்றொன்று பூமாலை தொடுத்து வழிபடல்" என்று விளக்கினார்.

பி. சரவணமுத்து,

பொன். புதுப்பட்டி அஞ்சல்.

வீட்டுப் பாடம்

கணித ஆசிரியர் தினமும் வீட்டுப் பாடம் கொடுத்து செய்து வரச் சொல்வார். சகமாணவன் ஒருவன் தினமும் தப்புத் தப்பாகக் கணக்கு போட்டுக் கொண்டு வந்து ஆசிரியரிடம் திட்டு வாங்குவான். ஒரு நாள் ஆசிரியர் கோபத்துடன் "உனக்கு கணக்கு




தெரியலைன்னா உங்க அப்பா, அம்மா யாரிடமாவது கேட்டுச் செய்யலாமே! ஏன் இப்படி தினமும் திட்டு வாங்குறே?" என்றார். அவனோ "சார் என் அப்பாவிடம் கேட்டு தான் நேற்று வீட்டுப் பாடம் செய்துக்கிட்டு வந்தேன்" என்றான் வருத்தத்துடன். எங்களுக்கோ ஒரே சிரிப்பு. ஆசிரியரோ "இனி மேல் பள்ளி முடிந்ததும் என்னிடம் வா. நானே சொல்லித் தர்றேன்" என்றார்.

ஆபில் பாஷா, வத்தலக்குண்டு.

அர்த்தம் என்ன?

ஆங்கில ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். என் தோழி பாடத்தைக் கவனிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். இதைக் கவனித்த ஆசிரியர்




அவளை எழுப்பி, 'Funny' என்ற வார்த்தைக்கு அர்த்தம் கேட்டார். அவளோ பன்றி என நினைத்துக் கொண்டு "சுற்றுப்புறத்தை அசுத்தமாக்கும் ஒரு விலங்கு டீச்சர்" என்றாள். ஆசிரியருக்கே சிரிப்பை அடக்க முடியவில்லை.

கே. சாந்தி, மன்னார்குடி.

மழை வந்ததால்...

எங்கள் வகுப்பு ஆசிரியர் வாரத்தில் ஒரு நாள் திடீரென ஏதாவது தலைப்புக் கொடுத்து கட்டுரை எழுதச் சொல்வார். அன்று கிரிக்கெட் விளையாட்டைப் பற்றி எழுதச் சொன்னார். சிறிது நேரத்தில் ஒவ்வொரு நோட்டையும் வாங்கி மார்க் போட்டுக் கொண்டே வந்தார். என்




நண்பனின் நோட்டைப் பார்த்ததும் சிரிக்க ஆரம்பித்தார். பிறகு அவனையே படித்துக் காட்டச் சொன்னார். "ஆட்டம் தொடங்கிய உடன் மழை வந்த காரணத்தால் இன்றைய ஆட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது" என்று அவன் படிக்கவும் நாங்களும் சிரித்தோம்.


வி. நாகராஜன், வேலநத்தம்.

இரு சக்கர வாகனம்

வாகனங்களைப் பற்றி ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "யார், யார் இரு சக்கர வாகனங்களில் வருகிறீர்கள்?" என்றார். கேள்வியை சரியாகப் புரிந்து கொள்ளாத மாணவன் ஒருவன் எழுந்து "சார் நான் தினமும் பஸ்லதான் வர்றேன்" என்றானே பார்க்கலாம்!

வி. ஹரிஹரன், சேலம்.





ஸ்டாம்ப்

ரகு தன் நண்பனின் பிறந்த நாளுக்கு வாழ்த்து அட்டை தயாரித்தான். ஸ்டாம்ப் ஒட்டும் போது ரகுவின் நண்பன் குமார் அவனைத் தேடி வந்தான்.

"ஏண்டா ரகு, இப்படி ஸ்டாம்ப் ஒட்டி காசை வீணாக்குறே! நான் இதுவரைக்கும் ஸ்டாம்ப் ஒட்டி எதையுமே அனுப்பியதில்லை. அதை வாங்குகிறவன் கிட்ட தான் தபால்காரர் அபராதம் வசூலிப் பார்'' என்று தன் செயலை நியாயப் படுத்திக் கூறினான் குமார்.

"நாம் அனுப்புவதே சந்தோஷத்தை பகிர்ந்து கொள்ளத்தானே! இதுக்கு நீ அனுப்பாமலே இருக்கலாம். உன் நண்பன் ஸ்டாம்ப் ஒட்டலையான்னு கேட்டால் என்ன சொல்வே?'' என்று வருத்தத்துடன் கேட்டான் ரகு.

"அவன் வந்து கேட்டால் 'ஒட்டித்தான் அனுப்பினேன், தவறி விழுந்திருக்கும்' என்று சொல்லி சமாளித்து விடுவேன்'' என்றான்.

ஒரு மாதம் சென்றது. நாளை குமாரின் பிறந்த நாள். வாசலில் தபால்காரர் நிற் பதைப் பார்த்த குமார் வேகமாக ஓடினான்.


''ஸ்டாம்ப் ஒட்டாமல் வாழ்த்து அட்டை அனுப்பியிருக்காங்க. அபராத மாக நாலு ரூபாய் கட்டு'' என்றார் தபால்காரர்.

வேறு வழியின்றி பணத்தைக் கொடுத்து விட்டு வாங்கிக் கொண்டான். அனுப்பியவனின் பெயரைப் பார்த்ததும் கடுங்கோபம் கொண்டான் குமார்.

உடனே ரகு வீட்டிற்குச் சென்று "ஏண்டா ஸ்டாம்ப் ஒட்டாமல் அனுப் பினே?'' என்றான்.

ரகு அமைதியாக "நான் ஒட்டித்தான் அனுப்பினேன். தவறி விழுந்திருக்கும்'' என்றான்.

குமாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.



ஆபில்
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல் நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.

கவிப் பித்தன்!

மதகு நாட்டை பாண்டு ராஜா ஆண்டு வந்தான். அவனுக்கு கவிதைகள் என்றால் உயிர். அதனால் தன் பெயரை 'கவிப் பித்தன்' என்று மாற்றிக் கொண் டான்.

கவிதை என்ற பெயரில் எதை, யார் கொண்டு வந்து கொடுத்தாலும் பொன் னும், பொருளும் அள்ளிக் கொடுத்து வந்தான்.

இதனால் தினமும் நூற்றுக் கணக்கான வெளியூர் வாசிகள் கவிதையைப் படித் துக் காட்டி பரிசு பெற்றுச் சென்றார்கள். இதனால் அரசனின் நிர்வாகம் சீரழிந்தது.

கவிப்பித்தனின் நடவடிக்கை நாட்டு மக்களுக்கு எரிச்சலை ஊட்டியது.

நாட்கள் சென்றன. இன்று கவிப் பித்தனின் பிறந்த நாள். இன்று அற்புத மாகக் கவிதை பாடுவோர் எதைக் கேட் டாலும் பரிசாகத் தருவதாகக் கூறினான் அரசன்.

இதைக்கேட்ட ஏராளமானோர் அரசனை நோக்கிப் படையெடுத்தனர். அதில் ஒரே ஒரு கவிதை அரசனை மிகவும் கவர்ந்தது.

அந்தக் கவிஞனை நோக்கி "எதை வேண்டுமானாலும் கேள்!" என்றான் அரசன்.

"அரசே! இந்த நாட்டை எனக்குக் கொடுத்து விடுங்கள்!" என்றான் கவிஞன்.

அரசனுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. தான் எப்படி கண்மூடித் தனமான கவிதைப் பித்தனாக இருந்துள் ளோம் என்பது புரிந்தது.

அக்கவிஞனிடம் நாட்டை ஒப் படைத்து விட்டு வருத்தத்துடன் கிளம்பி னான் அரசன்.


"அரசே! உங்கள் நாட்டை ஆள்வது என் விருப்பம் அல்ல. உங்கள் பித்தைத் தெளிய வைப்பதுதான் என் எண்ணம். இனிமேலாவது நாட்டு மக்களின் நலனில் அக்கறை செலுத்துங்கள்" என்று கூறி விடை பெற்றுச் சென்றான் அந்தக் கவிஞன்.



அன்றிலிருந்து கவிப் பித்தன் மீண்டும் 'பாண்டு ராஜா'வாக மாறி நாட்டை சிறப் பாக ஆள ஆரம்பித்தான்.

- எல். மீனா,
எட்டாம் வகுப்பு, 'ஏ' பிரிவு.
லேடி சிவசாமி ஐயர்
பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
மைலாப்பூர்.

குறுக்கெழுத்துப் புதிர் — விடை



சிரிப்...



''உனக்கும் உன் தம்பிக்கும் இந்த வருஷம் ஒரு வயசு வித்தியாசம்னா அடுத்த வருஷம் எவ்வளவு வயசு வித்தியாசம் இருக்கும்?''

''இரண்டு வயசு வித்தியாசம் இருக்கும்; எனக்கா தெரியாது?''


— சீர்காழி வி. ரேவதி



''நாம கோபால் என்னடா இப்படி துறு துறுன்னு இருக்கான்?''

''இரும்புச் சத்து டானிக் அதிகமாகக் குடிக்கும் போதே நினைச்சேன்.''

— சிவ. பாக்யா, ஐந்தாம் வகுப்பு,
ஞானம்பிகா உதவி
தொடக்கப்பள்ளி,
கருப்பம்புலம்.



''இப்படித் துள்ளி துள்ளி சந்தோஷமா குதிக்கிறியே என்ன விஷயம்?''

''அந்தமான்ல இருந்து என்னோட அண்ணன் இன்னிக்கு வர்றான்!''

— கடலூர் கன்னியப்பன்



''நான் சிரித்தால் கன்னத்தில் குழி விழும். அதனால் எங்க அம்மா அதிர்ஷ்டம்ன்னு சொன்னாங்க!''

''எங்க பாட்டிக்கு சிரிக்காமலே கன்னத்தில் குழிவிழும்டா!''

— பி. மகாலட்சுமி,
பனமலை



''அப்பா, 'காகம் கரையும்'னு எங்க வாத்தியாரு சொல்லிக் கொடுத்தாரு. ஆனா அரைமணியா மழையிலேயே உட்கார்ந்துக்கிட்டிருக்கிற அந்தக் காக்கா கரையமாட்டேங்குதே!''

— டி.என். பாலகிருஷ்ணன்,
மடிப்பாக்கம்.

சிரிப்...

நேரம் தவறலாமா?

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



காட்சி - 1

இடம் : சுரேஷ் வீடு

சாரதா : சுரேஷ், இந்தா உன் 'ப்ரொக்ரெஸ் ரிபோர்ட்', பாத்துட்டேன்.

சுரேஷ் : நல்லா பாத்தியா?

சாரதா : நல்லா பாத்துட்டேன், இந்தா!

சுரேஷ் : பின்னே ஒரு வாழ்த்துகூட சொல்லாம சும்மா நீட்டறே? இந்த மாசம் எல்லா சப்ஜெக்டிலேயும் எவ்வளவு 'மார்க்' வாங்கிக் குவிச்சிருக்கேன் பாத்தியா?



சாரதா : இல்லையே, ஒரு 'சப்ஜெக்ட்'லே போன மாசத்தை விட இந்த மாசம் கம்மியா தானே 'மார்க்' வாங்கியிருக்கே!

சுரேஷ் : நல்லதைச் சொல்ல மாட்டியே...!

சாரதா : சுரேஷ்! நீ எதுலே வீக்கா யிருக்கியோ அந்த 'சப்ஜெக்ட்'லே முன்னேறிக் காண்பிச்சாத்தான் எனக்கும் அப்பாவுக்கும் சந்தோஷம்.

சுரேஷ் : சரியான பாட்டி!

(அவர்கள் அப்பா அங்கு வருகிறார்)

அப்பா : டேய், என்ன அக்காவுக்கும் தம்பிக்கும் வாக்குவாதமா? கையிலே என்ன, 'ப்ரொக்ரெஸ் ரிப்போர்ட்'டா? கொண்டா இப்படி!... ம்... எல்லாத்துலேயும் 75க்கு மேல வாங்கியிருக்கே. காலந்தவறாமை மட்டும் 20.

சாரதா : காலந்தவறாமையிலே போன மாசத்தைவிட இந்த மாசம் இன்னும் மோசம்; போன மாசம் 25; இப்போ 20 வாங்கியிருக்கான்!

அப்பா : சுரேஷ்! இந்த மாசமும் நீ இப்படி குறைஞ்ச மதிப்பெண் வாங்குவேன்னு நானும் எதிர்பார்க்கல்லே! நீ எல்லா சப்ஜெக்ட்லேயும் கெட்டிக்காரன்தான்! ஆனா, எதிலேயும் காலந்தவறாம நடந்துக்கற பழக்கமும் ரொம்ப முக்கியம்! நீ இதை அலட்சியமா நினைச்சுக்கிட்டிருக்கே.

சாரதா : ஆமாம்ப்பா! அதனாலதான்

இந்த மாசமும் எட்டு நாள் பள்ளிக்கூடத்துக்கு தாமதமாவே போயிருக்கான்!

சுரேஷ் : நான் என்னப்பா செய்யறது? எப்படியோ 'லேட்' ஆயிடறது!

சாரதா : எப்படியோ எப்படி 'லேட்' ஆகும்? பள்ளிக்கூடம் கிளம்பற சமயத்திலேதான் நீ ஷூவுக்குப் பாலிஷ் போடுவே... முதல் நாள் கழுவாம வச்சிருந்த டிபன் பாக்ஸைக் கழுவப் போவே... பென்சிலைச் சீவுவே... அட்டவணையை அப்போதான் பாத்து அவசரம் அவசரமா புத்தகங்களை அடுக்கப் போவே...

சுரேஷ் : போதும் சும்மா அடுக்கிக்கிட்டே போகாதே!

அப்பா : டேய் சுரேஷ்! இந்த மாதிரி வேலைகளையெல்லாம் நீ முந்தின நாளே படுக்கப் போறதுக்கு முன்னால கவனிச்சு, முடிச்சு வச்சிருக்கலாமில்லே? அப்படிச் செய்திருந்தா நேரத்துக்குப் பள்ளிக்கூடம் போய் சேர்ந்திருக்கலாம் இல்லையா?

சுரேஷ் : நான் என்னப்பா செய்யறது? முந்தின நாள் ராத்திரி டீ.வி.யிலே வர நிகழ்ச்சிகளைப் பாக்கறேன்! நேரம் போறதே தெரியல்லே!

சாரதா : டீ.வியிலே நிகழ்ச்சிகள் இருந்துக்கிட்டேதான் இருக்கும்! நீதான் அதை நிறுத்திட்டு முக்கியமான வேலைகளைக் கவனிக்கணும்.

அப்பா : டேய் கோபப்படாதே! சின்னவங்க, பெரியவங்க எல்லோருக்கும் காலந் தவறாமைங்கிறது ரொம்ப முக்கியம்! ஏன்னா வாழ்க்கையிலே ஒருத்தரோட காலந்தவறின செய்கை மத்தவங்களையும் பாதிக்கும்! அதனால இந்த நல்ல பழக்கத்தை இந்தச் சின்ன வயசுலேயே பழகிக்கணும்.. சாரதாவைப் பாரு, நேரப்படியே எல்லாத்தையும் செய்துக்கிட்டு வரா... இந்த பழக்கத்தை நீ அக்கா கிட்டேயிருந்துதான் கத்துக்கணும்!

காட்சி - 2

இடம் : சுரேஷ் வீடு

ரவி : சுரேஷ்!

சுரேஷ் : வா ரவி! கரெக்ட்டா ஆறு மணிக்கு வரேன்னு சொன்னே... வந்துட்டியே!

ரவி : எனக்கு எப்பவும் நேரப்படி நடக்கறதுதான் பிடிக்கும்... இந்த மாசத்துலேயிருந்து எல்லா விஷயத்துலேயும் நேரப்படித்தான் நடந்துக்கிட்டு வரேன்.. அதுக்காக தனியா 'கால அட்டவணை' கூட தயார் பண்ணிட்டேன்...

சுரேஷ் : அது என்ன கால அட்ட



வணை?

ரவி : காலையிலே எத்தனை மணிக்கு எழுந்துக்கணும், எப்போ குளிக்கப் போக ணும், எப்போ படிக்கணும். இப்படி எல்லா விதமான வேலைகளுக்கும் நேரம் குறிச்சு அட்டவணை தயார் பண்ணியிருக்கேன்.

சுரேஷ் : அதெல்லாம் எனக்குச் சரிப் பட்டு வராது...

ரவி : சுரேஷ்! ஒரு மகிழ்ச்சியான செய்திடா!

சுரேஷ் : என்னடா?





ரவி : வருகிற புதன்கிழமை நான் பாண்டியன் எக்ஸ்பிரஸ்லே மதுரைக்குப் போகப் போறேன்.

சுரேஷ் : டேய் இதுதான் மகிழ்ச்சியான செய்தியா?

ரவி : கேளுடா... மதுரையிலே இருக்கற மதுரை நாடகத் தமிழ் மன்றம் வியாழக் கிழமை பெரிய விழா நடத்தப் போறாங் களாம்! விழாவிலே பெரிய பெரிய கலை யுலகப் பிரமுகர்கள் கலந்துக்கப் போறாங் களாம். அந்த விழாவிலே போன வருஷம் நடந்த சிறுவர் நாடகங்கள்ளே சிறப்பா நடிச்ச மூணு பேருக்கு விருது வழங்கி பாராட்டப் போறாங்களாம். முதல் பரிசு எனக்குத்தான்! இந்தா உனக்கு அழைப்பிதழ்!

சுரேஷ் : அடேயப்பா! அப்போ பாராட்டுகள் பிரமாதமா இருக்கும். வாழ்த்துகள் ரவி! புதன்கிழமை புறப்படப் போறதா சொல்றியே? அன்னிக்குத்தானே நீயும் நானும் ஒண்ணா சேர்ந்து நடிக்கற நாடகமும், இங்கே நாடகப் போட்டியிலே கலந்துக்கப் போறது?

ரவி : ஆமாம், இருக்கட்டுமே! நாடகப் போட்டி சரியா ஐந்தரை மணிக்கு ஆரம்பிக்கப் போறது. ஒரு நாடகத்துக்கு இருபது நிமிஷம்தான் தரப் போறாங்க! மூணு நாடகம் போட்டியிலே கலந்துக்கப் போறது. ஆனா நீயும் நானும் சேர்ந்து நடிக்கற நாடகம்தான் மொதல்லே நடக்கப் போறது. அதனால எப்படியும் அஞ்சு ஐம்பதுக்கு நம்ம நாடகம் முடிஞ்சதும், ஸ்டேஷனுக்குப் புறப்பட்டா போதுமே! எக்ஸ்பிரஸ் ஆறே முக்கால் மணிக்குத்தானே கிளம்பப் போறது!

சுரேஷ் : அது சரி! நம்ம நாடகத்துக்குப் பரிசு கிடைச்சா?

ரவி : அதை என் சார்பிலே நீயே வாங்கிக்க... அடேடே! நேரம் 6.25 ஆயிட்டுது... 6.30க்கு நான் வீட்டுலே இருந்தாகணும். வரேன்!

காட்சி - 3
இடம் : சுரேஷ் வீடு

சாரதா : சுரேஷ்! என்ன செய்துக்கிட்டிருக்கே நீ? மணி இப்போ அஞ்சே கால்! அஞ்சரை மணிக்கு நாடகப் போட்டி ஆரம்பம்! இந்த சட்டையை காலையிலேயே தயார் பண்ணியிருக்கலாம் இல்லே?

சுரேஷ் : நான் என்ன செய்யறது? காலையிலே மின்சாரம் 'கட்'! இப்பத்தான் வந்திருக்கு!

சாரதா : அதுக்குத்தான் முதல் நாளே எல்லாத்தையும் தயார் பண்ணி வச்சுக்கணும்கிறது! நீ என்னடான்னா ராத்திரி பதினோரு மணி வரைக்கும் டி.வி. பார்த்துக்கிட்டிருக்கே... காலையிலே ஏழு மணிக்கு மேலதான் படுக்கையை விட்டு எழுந்திருக்கிறே.

சுரேஷ் : சாரதாக்கா! கவலைப்படாதே! இதோ புறப்பட்டாச்சு... சைக்கிளை எடுத்துக்கிட்டு பறந்து போயிடுவேன்... டாட்டா!

காட்சி - 4
இடம் : சுரேஷ் வீடு

சுரேஷின் அப்பா *(கோபத்துடன்)* : சுரேஷ்! காலந்தவறாத பழக்கம் இல்லாததனால நேத்து என்ன நடந்தது பாத்தியா?

சுரேஷ் : நான் என்னப்பா செய்யறது? சைக்கிளை எடுத்தா அதுலே காத்து இல்லே... சைக்கிள் கடைக்குப் போய் காத்து அடிச்சுக்கிட்டுக் கிளம்பறதுக்குள்ளே போட்டிக்கு லேட்டாயிடுத்து.

அப்பா : அதனால மொதல்லே நடக்க விருந்த உங்க நாடகத்தை மூணாவதா போடும்படியா ஆயிட்டது.

சுரேஷ் : அதனால என்னப்பா?

அப்பா : உனக்கு ஒண்ணுமில்லே. உன் கூட ஜோடியா நடிச்சானே, அந்த ரவி தான் ரொம்ப தவிச்சுப் போயிட்டான். அவன் நாடகம் முடிந்து வீட்டுக்குப் போன போது மணி ஆறரை ஆயிட்டுது! அவன் கூட அன்னிக்கு மதுரைக்கு வர விருந்த அவன் அப்பாவுக்கும் திடீர்னு குளிர் ஜுரம் வந்திருக்கு! வேற வழியில் லாம தனியா ஸ்டேஷனுக்கு ஓடியிருக்கான். எப்படி கஷ்டப்பட்டிருப்பானோ? பாவம்!

சுரேஷ் : நான் என்னப்பா செய்யறது?

சாரதா : முதல்லே இப்படி அடிக்கடி 'நான் என்னப்பா செய்யறது?'ன்னு சொல்றதை விடு!

காட்சி - 5
இடம் : சுரேஷ் வீடு

சுரேஷ் : சாரதா! ரவி இன்னிக்கு மதுரையிலேயிருந்து வரான்... ரவியை நான் ஸ்டேஷனுக்கே போய் பாராட்டிட்டு வரப் போறேன்!


சாரதா : ம்! போ! போ! நீ ஸ்டேஷனுக்கு போய் சேர்றதுக்குள்ளே, ரவி அவன் வீட்டுக்கே போய் சேர்ந்திருப்பான்!

சுரேஷ் : என்ன சொல்றே நீ?

சாரதா : மதுரை எக்ஸ்பிரஸ் எக்மோர் வந்து சேர்ந்து கால் மணி நேரம் ஆகப் போறது. இப்போ மணி ஏழரை!

சுரேஷ் : அச்சச்சோ. ஆமாம்! ரேடியோ கேட்டுக்கிட்டே நேரத்தைக் கோட்டை விட்டுட்டேன்.

சாரதா : ஸ்டேஷனுக்குப் போற விஷ



"என்னண்ணே! ஏன் உங்க பையன் அழுதிட்டிருக்கான்?"

"வேறொண்ணுமில்லை! முடி ரொம்ப வளர்ந்திருச்சு, போய் வெட்டிக்கிட்டு வான்னு சொன்னேன். அதான்!"

— ச. சிவக்குமார், ஈரோடு - 2.

யத்தை நேத்தே எங்கிட்டே சொல்லியிருந்தா, நான் நினைவுபடுத்தியிருப்பேன் இல்லே... எதையும் எங்கிட்டே சொல்ல மாட்டியே!

சுரேஷ் : சரி, சரி! நான் நேரா ரவி வீட்டுக்கே போய் பார்த்துட்டு வரேன்!

அப்பா : டேய் சுரேஷ்! இருடா.. நானும் ரவியைப் பார்க்க உன்கூட வரேன்! சாரதா நீயும் கூட வாம்மா!

காட்சி - 6
இடம் : ரவி வீடு

சுரேஷ் : ரவி! ரவி!

ரவி : டேய் சுரேஷ்! என்ன எங்கேயோ உள்பக்கமா பார்த்து கூப்பிடறே? இதோ நான் இங்கே உட்கார்ந்துக்கிட்டிருக்கேன்!

சுரேஷ் : ரவி... நீயா? என்னடா இதெல்லாம்? தலையிலே கட்டு... கையிலே கட்டு...

சுரேஷின் அப்பா : என்ன ஆச்சுப்பா உனக்கு? மதுரைக்குப் போனாயா, இல்லையா?

ரவி : போயிட்டு வந்துட்டேன் மாமா! போன புதன்கிழமை நடந்த நாடகப் போட்டிதான் இத்தனைக்கும் காரணம்!


சுரேஷ் : எப்படி?

ரவி : டேய் சுரேஷ், நீ நாடகப் போட்டிக்கு 'லேட்'டா வந்ததால, நம்ம நாடகத்தை மூணாவது நாடகமா போடும்படியாயிட்டுது! அதனால நாடகம் முடிஞ்சதும் அவசரம் அவசரமா வீட்டுக்கு ஓடி வந்தேன்....

ரவியின் அப்பா : அப்பத்தான் எனக்கு திடீர்னு குளிர் ஜுரம் வந்துட்டுது. அதனால ரவியைத் தனியாகவே போகச் சொல்லிட்டேன்.

ரவி : நான் ஸ்டேஷனுக்குப் போய், டிரெயினைப் பிடிக்க வேகமா ஓடினேன். அப்போ டிரெயின் நகர ஆரம்பிச்சுடுத்து... பாய்ந்து ஓடிப் போய் டிரெயின்லேயும் ஏறிட்டேன்!

ரவியின் அப்பா : ஆனா, ட்ரெயினுக்குள்ளேயே கால் தடுமாறிக் கீழே விழுந்து, ஏதோ கம்பி மோதி தலையிலே பலமா அடிபட்டிருக்கு. நல்ல வேளையா அதே டிரெயின்லே ஒரு டாக்டரும் வந்திருக்கார். அவர் உடனே இவனுக்குக் கட்டுப்



"இட்லி 'பஞ்சு' போல இருக்குன்னு ராமுகிட்ட சொன்னது தப்பாப் போச்சுடா..."

"ஏன்டா?"

"உடனே உறை வாங்கி தலையணையா தைச்சுடலாம்னு சொல்றானே!"

— நெற்குப்பை கி. மனோகரன்

போட்டு முதலுதவி செய்திருக்கார். அடுத்த நாள் விழாவுக்கும் அவர் வந்திருந்து, விழா முடிஞ்சதும் இவனை டிரெயின் ஏத்தி அனுப்பிச் சிருக்கார்!

சாரதா : சுரேஷ் என்னென்ன நடந்திருக்கு பார்த்தியா? நீ அன்னிக்கு சரியான நேரத்துக்கு நாடகப் போட்டிக்குப் போகாததனாலத்தான் இவ்வளவும் நடந்திருக்கு!

சுரேஷின் அப்பா : ஒருத்தரோட கால தாமதப் பழக்கம் சங்கிலித் தொடரா எப்படியெல்லாம் மத்தவங்களைப் பாதிக்கறது பார்த்தியா சுரேஷ்! இனிமேலாவது...

சுரேஷ் : ஆமாம்பா! என்னை மன்னிச்சுடுங்க மாமா! ரவி, உனக்கு இப்படி அடிபட்டதுக்கு என்னோட காலதாமதப் பழக்கம்தான் காரணம்! என்னோட கால தாமதத்தால இப்படியெல்லாம் நடக்கும்னு நான் எதிர்பார்க்கல்லே! என்னை மன்னிச்சுடுடா! இனிமே நானும் உன்னை மாதிரியே கால அட்டவணை போட்டு அதன்படியே நடக்கப் பழகிக்கறேன்!

சுரேஷின் அப்பா : நாங்க வரோம்!

ரவியின் அப்பா : இருங்க, ரவிக்குக் கிடைச்ச விருதைப் பார்க்க மறந்துட்டீங்களே! விருதைப் பார்த்துட்டு விருந்தும் சாப்பிட்டுட்டுப் போகலாம்!

ஆணவம் அழிந்தது!

மணியன் அவ்வூர் கிராமத்திலேயே இருந்த ஒரு சுமாரான பாடகர்.

பாடல்களை அவ்வப்போது உரக்கப் பாடுவார். அவரிடம் இருந்த பெரிய கெட்ட குணம் ஆணவம்தான்.

"நகரத்திலே இருக்கிற பெரிய பெரிய வித்வான்கள் எல்லாம் என்னிடம் போட்டிக்கு வந்தால் தோற்றுவிடுவார்கள். நான் இந்தச் சின்னக் கிராமத்தில் இருப்பதால் தான் அவர்கள் நகரத்தில் வாழ்க்கை நடத்த முடிகிறது. என்னருமை உங்களுக்கு எல்லாம் ஏன் தெரிய மாட்டேன்கிறது?'' என்று ஆணவத்துடன் அவ்வூர் மக்களிடம் பேசுவார்.

அவர்களும்,' 'இவருக்குச் சங்கீதம் தெரியுமளவிற்குப் பணிவாகப் பேசத் தெரியவில்லையே' என்று நினைப்பார்கள்.

ஒருநாள் மரத்தடியில் சிலர் அமர்ந்திருக்க, மணியன் தன்னைப் பற்றிப் பெருமையாகவும், ஆணவமாகவும் பேச ஆரம்பித்தார்.

"நானொரு பாடல் பாடுகிறேன் பாருங்கள். கலைமகளே பூலோகத்திற்கு ஓடோடி வந்து என்னை வணங்குவாள்'' - என்றார்.

இதைக் கேட்ட மக்களில் சிலர் முகம் சுளித்தனர். சிலர் "ஏதோ சுமாராகப் பாடுகிறார். இதற்கு "கலைமகளே வந்து வணங்குவாள்' என்று அகந்தையாகக் கூறுவதா'' என திட்ட ஆரம்பித்தனர். ஓரிருவர், 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' எனும் பழமொழிக்கேற்ப அவ்விடம் விட்டுச் சென்றனர்.



பாடகர் இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் பாடலைப் பாட ஆரம்பித்தார்.

என்ன காரணமோ தெரியவில்லை. அவரின் குரல் கரகரத்தது. 'இங்கு யாருக்கும் சங்கீத ஞானமே கிடையாது! யாராலும் தவறு கண்டுபிடிக்க இயலாது. அதனால் இந்தக் குரலுடன் முழுப் பாடலையுமே பாடி விடலாம்' என உறுதி கொண்டார் பாடகர்.

ஐந்து வரிகள்தான் பாடியிருப்பார். அதற்குள் முண்டாசு கட்டிய ஒருவன் அவர் முன் ஓடி வந்து நின்றான்.

"ஏங்க இப்ப கத்தின கழுதை எங்கே? அதை நான் காலையிலிருந்தே தேடிக் கொண்டிருக்கிறேன். அதன் குரலைக் கேட்ட பிறகுதான் எனக்கு மூச்சே வந்தது" - என்றான்.

இதைக் கேட்ட அந்தக் கிராமத்து மக்கள் அனைவரும் சிரித்தனர்.

பாடகர் மணியனோ வெட்கித் தலை கவிழ்ந்தார்.

''இந்தாப்பா, இந்த மனுஷன்தான் கத்தினார். வேண்டும் என்றால் உன்னுடன் அழைத்துச் செல்" என்று பாடகரைக் காட்டியவாறு அருகில் இருந்தவர்கள் கூறினர்.

பாடகரின் ஆணவம் அப்போதே அழிந்தது. அதிலிருந்து தன்னைப் பற்றிப் பெருமையாக ஆணவத்துடன் பேசுவதையே விட்டு விட்டார்!

- அ.கு. கிருஷ்ணன்

ஆயுட்காலம் எவ்வளவு?




மே பூச்சி - சில மணி நேரம்

எலி -2 முதல் 3 வருடங்கள்

கறுப்பு சிவப்பு வளையமுடைய நச்சுப் பாம்பு - 5 முதல் 6 வருடங்கள்

சங்கிலிக் கறுப்பன் பாம்பு - 14 முதல் 18 வருடங்கள்

நாய், பூனை - 12 முதல் 15 வருடங்கள்



கிளி, அன்னம், வாத்து - 50 வருடங்கள்


முதலை - 50 வருடங்கள்


யானை - 60 முதல் 70 வருடங்கள்

மனிதன் 65 முதல் 75 வருடங்கள்

ஆமை - 100 முதல் 150 வருடங்கள்

-பா. மைதிலி, எட்டாம் வகுப்பு, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மானாமதுரை







எது? எப்படி? ஏன்?

மிளகாய்க்கு காரம் தருவது எது?

உங்களுக்கு என்ன சுவை பிடிக்கும் என குழந்தைகளிடையே ஓட்டெடுப்பு நடத்தினால், பெருவாரியான வாக்குகள் பெற்று தலைமைப் பதவியைத் தக்க வைத்துக் கொள்பவர் 'இனிப்பார்'தான்!



ஆனாலும் கூட காரம், புளிப்பு இல்லா விட்டால், இனிப்பார்க்கு மதிப்பே இல்லை. காரம் என்றால் உங்கள் கண் முன்னே வருவது மரகதப் பச்சையுடுத்திய பச்சை மிளகாயும், செக்க செவேலென மின்னும் சிவப்பு மிளகாயும்தானே!

மிளகாயின் தாயகம் எது என்று சரியாகச் சொல்ல முடியாவிடினும், தென் அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் மிளகாய் இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மேலும் பெரு நாட்டிலுள்ள விவசாயிகள் சுமார் 4000 - 5000 ஆண்டுகளுக்கு முன்னரே மிளகாயைப் பயிரிட்டனர் என்பது குறிப்புகள் மூலம் தெரிய வருகிறது. ஆனால் அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் கண்டு பிடிப்புக்குப் பின்னர்தான், மிளகாயின் பயன்பாடும் பயிரிடும் முறையும் உலகம் முழுவதும் பரவியது. மிளகாய் 'சிலி' நாட்டிலிருந்து வந்ததாலேயே இதனை சில்லி (Chilly) என்று அழைக்கின்றனர். தென்அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு மிளகாய் வந்தது, 17ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான். அதற்கு முன், இந்தியாவில் விளைந்த மிளகு மற்றும் கிராம்புப் பொருட்களையே காரத்திற்கும், வாசனைக்கும் பயன்படுத்தினர். பொதுவாக வெப்பமான சமவெளிப் பகுதிகளில் மிளகாய் விளைகிறது. மண்ணின் தன்மை, சீதோஷ்ண நிலை மற்றும் சூழலுக்குத் தக்கபடி, மிளகாயின் உருவம், அளவு, நிறம் மற்றும் சுவை அமைகின்றன.

மிளகாய் காரத்திற்காகவும், சுவையூட்டவுமே உணவில் சேர்க்கப்படுகின்றது. இது இந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம் மற்றும் மகாராஷ்டிரா போன்ற இடங்களில் அதிகமாகவும், பீகார் மற்றும் பஞ்சாபில் குறைவாகவும், வருடப் பயிராக வளர்க்கப்படுகின்றது. மிளகாய்; கத்தரி மற்றும் தக்காளி குடும்பத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், இது சுவை, மணத்தில் மற்ற இரண்டிலிருந்தும் வேறுபட்டதாகும்! 'குண்டு குடை மிளகாய்' காரமில்லாதது. இது மற்ற காய்கள் போல் சமைப்பதற்கும், பச்சையாக 'சாலட்' செய்யவும் பயன்படுகிறது. மிளகாய் இனிக்குமா? 'என்ன காது குத்துகிறீர்கள்' என்கிறீர்களா! இருக்கிறதே! ஹங்கேரிய சிவப்பு மிளகாய்! இல்லை, இல்லை; ஹங்கேரிய இனிப்பு மிளகாய்! நீண்ட கூம்பு வடிவில் உள்ள 'காளைக் கொம்பு மிளகாய்' ரொம்பவே ரோஷக்காரன்! சுர்... என்று காரம்! இதைத்தவிர

வெள்ளை மற்றும் கறுப்பு மிளகாயும் உண்டு. எல்லா மிளகாயும் பழுத்தவுடன் சிவப்பாகி விடுகிறது.

மிளகாயின் காரம் எங்கு மறைந்துள்ளது தெரியுமா? அதற்குள் இருக்கும் விதையில்தான்! அதுவும் விதையை மூடியுள்ள அதன் மேல் தோலில்தான். அதிலுள்ள 'காப்சைசின்' (Capsicin) என்ற வேதிப்பொருள்தான் மிளகாய்க்கு காரச் சுவை தருகிறது. மிளகாய், பழமானதும், அதற்கு செந்நிற வண்ணம் பூசுவது 'காப்சாந்தின்' (Capsanthin) என்ற நிறமியே! மிளகாய்ப் பழத்தில் வைட்டமின் ஏ, சி மற்றும் இ அதிகமாய் உள்ளன. நிறைய சத்துப் பொருட்களும் உள்ளன.

கனவுகள் தோன்றுவது எப்படி?

என்னப்பா கண்ணை முழிச்சுகிட்டே கனவு காண்கிறாயா?'' ''எனக்கு கனவே வராதுப்பா! அப்படியொரு நிம்மதியான தூக்கம் தூங்குவேன்'' என்றெல்லாம் சொல்கிறோம். இந்த கூற்றுகள் உண்மையல்ல. அப்படி உலகில் யாரும் கனவு காணாமல் தூங்க முடியாது. கனவு கண்டதை சிலர் மறந்து விடுகின்றனர்.

கண்ணை விழித்துக் கொண்டே கொஞ்ச நேரம் தூங்க முடியும். அவ்வளவுதான். ஆனால் கண்ணைத் திறந்து தூங்கிக் கொண்டு கனவும் காண முடியாது. ஏனெனில் நாம் கண்மூடி தூங்கிய பின், கொஞ்ச நேரம் கழித்துப் பார்த்தீர்களானால், மூடிய கண்களுக்குள் கண் விழி உருளுவது தெரியும். இந்நிலைக்கு 'கண் உருளல்' தூக்கம் (REM-SLEEP - RAPID EYE MOVEMENT SLEEP) என்று பெயர். கனவு காண்பவர்கள் நேரில் காட்சிகளைக் காணுவது போல் கண் விழிகளை அங்கும் இங்கும் ஓட்டுவதால், இந்நிலை ஏற்படுகிறது. கண் உருளல் தூக்கத்தின் போதுதான் கனவே உண்டாகிறது. நாம் இதனை ''கனவுத் தூக்கம்'' என்று அழைக்கலாம். ஓர் இரவில் பொதுவாக 4 அல்லது 5 முறை கனவு காண்கிறோம். (ஒவ்வொரு கண்



உருளல் நிகழ்வின் போதும்) கனவு ஒவ்வொரு முறையும் சில நிமிடங்களிலிருந்து 90-100 நிமிடங்கள் வரை நீளும்.

பொதுவாக ஒருவர் 70 வயது வரை வாழ்கிறார் என்றால், அவர் வாழ்நாளில் 1/3 பகுதி தூங்கியே கழிக்கிறார்! இதில் கனவு காணும் நேரம் எவ்வளவு தெரியுமா? 50,000 மணி நேரம், அதாவது 6 வருடங்கள்! உங்களின் ஒரு நாள் தூக்கத்தில் 25% நேரம் கனவின் ஆக்கிரமிப்பு தான்! ஓர் இரவில் குறைந்தது 2 மணி நேரம் கனவு காண்கிறோம். ஆச்சரியமாக இல்லை! விழிக்குமுன் கண்ட கனவு மட்டுமே நினைவில் நிற்கிறது. மற்றவற்றை மறந்து விடுகிறோம்! கனவு என்பது மூளையில் உள்ள கார்டெக்ஸ் பகுதியில் ஏற்படும் மின்னலைகளின் தாக்கத்தால் உண்டாகும் மாய பிம்பமே! இந்த வகை மின் அலைகள் ஆல்பா அலைகள் என்று அழைக்கப்படுகின்றன. நம்மில் 69 சதவீதத்தினர் பகல் கனவு காண்கின்றனர்.

கனவுகள் வருவது ஏன்?

நீங்கள் தூக்கத்தில் கனவு காண்பவரா? 'இல்லை' என புத்திசாலித்தனமான பதில் சொன்னீர்களானால், உங்களுக்கு ஏதோ மனக் கோளாறு என்று எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஏனெனில் கனவு காணும்போதுதான் நமது மன இறுக்கம், அழுத்தம், கவலைகள் போன்றவைகள் கனவாய் வெளிப்பட்டு குறைகின்றன. நிறைவேறாத ஆசைகள்,



நியாயமற்ற உணர்வுகள் கனவுகளாகி அடிமனத்தின் வடிகால்களாகி விடுகின்றன. ஒருவரின் உடல் நலம் நன்கு இருக்க வேண்டுமானால், நல்ல தூக்கம் வேண்டும். தூக்கத்தின்போது கனவும் நேரிட வேண்டும். ஆழ்ந்த தூக்கத்தின்போது உடல் வளர்ச்சியும், சிதைந்த திசுக்கள் செம்மை படுத்தப்படுவதும், கனவின் போது மனநிலை சமனப்படுத்துதலும் நிகழ்கின்றன.

கனவில் நாம் பார்க்கும் காட்சிகள், பொதுவாக நம் அனுபவத்தில் உணர்ந்த காட்சிகளே. ஆனாலும், நாம் நேரில் பார்த்து மனதில் பதியாத நிகழ்ச்சிகளும், சினிமா அல்லது கதைகளில் பார்த்த காட்சி அமைப்புகளும், கலந்த ஓர் அவியலாய், மாயத் தோற்றம் போன்ற சில வித்தியாசமான காட்சிகளையும்கூட கனவில் பார்க்க நேரிடலாம். சில சமயம், திகில் கதைகளைவிட நம்ப முடியாத நிகழ்வுகள் நிறைந்த, அற்புதமான தொடர் நிகழ்வுகளாய்கூட கனவுகள் ஏற்படுவதுண்டு. பண்டைய கால எகிப்திய அரசர்கள், கனவுக்குப் பலன் கூற புரோகிதர்களை நியமித்திருந்தனராம்! ஜூலியஸ் சீசர் கொல்லப்படுவதற்கு முன்பு, அவன் மனைவி கார்பர்னியா தீய கனவு கண்டு அவன் கொல்லப்படலாம் என அஞ்சியதாக சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, அமெரிக்க அதிபராய் வாழ்ந்த ஆபிரகாம் லிங்கனும்கூட, தான் கொல்லப்படலாம் என கனவு கண்டு தன் நாட்குறிப்பில் அதனைப் பற்றி எழுதியுள்ளார் என்றும் சரித்திரம் சொல்கிறது. மனக் குழப்பத்துக்குத் தெளிவான முடிவு சில சமயம் கனவில் தோன்றும். ஜெர்மானிய வேதியியல் விஞ்ஞானியான கெகுலே என்பவர்; தற்போதைய வேதிப் பொருளான பென்சீன் (Benzene) உருவ அமைப்பை எப்படி அமைப்பது என்று திண்டாடிக் கொண்டிருந்து விட்டு, பின் உறங்கி விட்டார். அவர் கனவில் ஆறு பாம்புகள் ஒன்றின் வாலை மற்றொன்று கவ்விக் கொண்டிருப்பதுபோல் காட்சிகள் வந்தன. மறுநாள் காலையில் எழுந்த கெகுலே அறுகோண அமைப்புள்ள பென்சீன் வளையத்தை  உருவாக்கினார் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பாம்புகள் அவர் கனவில் ஏன் தோன்ற வேண்டும் என்று கேட்டால் பதில் இல்லை. கனவுக்குத் தெளிவான பொருள் இதுவரை சொல்லப்படவில்லை.

மனிதர்கள் மட்டுமல்ல, பெருமூளை வளர்ச்சியற்ற பூனை, நாய், குதிரை, மாடு போன்ற விலங்குகளும் கனவு காண்கின்றன. கனவுகள் பொதுவாக கறுப்பு, வெள்ளை பிம்பங்களாகவே இருக்கும். மிக அரிதாகவே கனவுகளில் வண்ணங்களைப் பார்க்கிறோம். பிறவியிலேயே செவிடானவர்கள், கனவில் ஒலியைக் கேட்க மாட்டார்கள். அது போல் பிறவியிலேயே கண் பார்வை இழந்தவர்கள், பிம்பக் கனவுகளைக் காண மாட்டார்கள். அவர்கள் கனவில் ஒலி மட்டுமே கேட்கப்படும். 7 வயதுவரை பார்வை இருந்து, அதன் பின் குருடானவர்கள், 'பார்வைக் காட்சிகள்' உடைய கனவு காண்பார்கள். பொதுவாக நாம் கனவில் சுவை மற்றும் வாசனையை உணர்வது இல்லை.

— எஸ். மோகனா

காற்றாடி

சதுர வடிவத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

1. படம் 1-ல் காட்டியபடி தாளைப் பிடித்துக் கொண்டு மேல் முனையை கீழ் நோக்கியும், இடது முனையை பக்க வாட்டு முனையில் தொடுமாறும் மடிக்கவும். பின் மீண்டும் பழைய நிலைக்கு தாளை பிரித்து விடவும்.

2. தாளின் வலது முனையும், இடது முனையும் நடுக் கோட்டைத் தொடுமாறு மடிக்கவும். அதே போல் மேல் மற்றும் கீழ் முனைகளை பின் பக்கத்தில் மடித்து விடுங்கள்.

3. இப்போது படம் 3-ல் உள்ளது போன்ற உருவம் கிடைக்கும். வலதுபுறத்தை மீண்டும் நடுக் கோட்டில் தொடு மாறு மடித்து விடுங்கள். அதே போல் இடது புறத்தையும் மடியுங்கள்.


4. படம் 4-ல் உள்ள உருவம் கிடைத்ததா? மேல் பாதியை கீழ் நோக்கி மடியுங்கள். மீண்டும் நிமிர்த்தி விடுங்கள்.

5. படம் 5-ல் உள்ளது போல் கீழ் பாதியை நடுக் கோட் டைத் தொடுமாறு மடிக்கவும்.

6. மடிக்கப்பட்ட பகுதியிலிருந்து படம் 6-ல் காட்டியபடி இருபுறமும் தாளை எடுத்து வெளியே விடுங்கள்.

7. அதே போல் மேற்புறமும் செய்யுங்கள். இப்போது இருபுறமும் படகு போன்ற வடிவம் கிடைத்திருக்கும். பின் படம் 7-ல் காட்டியபடி மடிக்கவும்.

8. இப்போது காற்றாடி தயார். இதை குண்டூசியால் நடுவில் குத்தி குச்சியில் சொருகி ஓடினால் காற்றாடி சுழலும்.



கபில்தேவ் சாதனையை ஷேன் வார்னே முறியடிப்பாரா?

அண்மையில் (ஜனவரி 5) ஆஸ்திரேலிய அணியின் லெக் ஸ்பின்னர் ஷேன் வார்னே 300-வது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்தினார். வார்னே தனது 300-வது விக்கெட்டாக தென் ஆப்பிரிக்க அணியின் கல்லிஸை வீழ்த்தியதன் மூலம் அணிக்கு வெற்றி தேடி தந்தார்.



• ஷேன் வார்னே



• கபில்தேவ்

ஷேன் வார்னேயின் வயது இச்சாதனையின்போது 28 ஆண்டுகளும் 114 நாட்களும் ஆகும். நான்கு மேற்கிந்தியர்கள், மூன்று ஆங்கிலேயர்கள், இரு பாகிஸ்தானியர்கள், ஒரு நியூசிலாந்துகாரர், ஒரு ஆஸ்திரேலியர், ஒரு இந்தியர் ஆகியோரோடு '300 விக்கெட்டுகள் எடுத்தோர்' பட்டியலில் இணைகிறார். இதற்கு முன்பு குறைந்த வயதில் 300 விக்கெட்டுகளை வீழ்த்தியவர் கபில்தேவ் மட்டுமே. அப்போது அவர் வயது 28 ஆண்டுகளும் ஒரு நாளும் ஆகும். தனது கிரிக்கெட் வாழ்வில் 434 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய கபில்தேவ் சாதனையை இதுவரை எவரும் முறியடிக்கவில்லை. ஷேன் வார்னேயும் 'அது கடினம்தான்' என ஒப்புக் கொள்கிறார்.

மேற்கிந்தியத் தீவின் லான்ஸ் கிப்ஸ் மட்டுமே ஷேன் வார்னேக்கு முன் 300 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய சுழற் பந்து வீச்சாளர். ஏனையோர் அனைவரும் வேகப்பந்து வீச்சாளர்களே!

தனது 22ஆம் வயதில் இந்தியாவிற்கெதிராக விளையாட, டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்கியவர் வார்னே. அப்போது அவரால் 45 ஓவர்கள் பந்து வீசி 150 ரன்கள் அளித்து ஒரே ஒரு விக்கெட்டை மட்டுமே பெற முடிந்தது. ஆனால் பிற்காலத்தில் பத்து விக்கெட்டுகளை 4 முறையும், ஐந்து விக்கெட்டுகளை 14 முறையும் வீழ்த்தி இச்சாதனைக்கு வித்திட்டார். 1994 – 95 இல் இங்கிலாந்திற்கெதிராக 71 ரன்களுக்கு 8 விக்கெட்டுகள் எடுத்தது வார்னேயின் சிறப்பான பந்து வீச்சாகக் கருதப்படுகிறது.

வில்லி 56 டெஸ்ட்களிலும், மால்கம் மார்ஷல், ரிச்சர்ட் ஹாட்லி ஆகியோர் 61 டெஸ்ட்களிலும் 300 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

"என்னுடைய பந்துவீச்சு பெருமளவு மாறி வந்திருக்கிறது. பேட்ஸ்மேனை எப்படி ஆட்டமிழக்கச் செய்வது என்பதை இப்போது நான் அறிந்து கொண்டதாக நினைக்கிறேன்" என்கிறார் வார்னே.

தற்போது கிரிக்கெட் ஆடுபவர்களில் கபில்தேவ் சாதனையை எட்டுவதற்கு

ஷேன் வார்னே, மேற்கிந்தியத் தீவு அணியின் கர்ட்லி அம்ப்ரோஸ், கோர்ட்னி வால்ஷ், பாகிஸ்தான் அணியின் வாசிம் அக்ரம் ஆகியோர் 300 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தி, மேலும் முயன்று வருகிறார்கள். யாருக்கு வெற்றி என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இளைஞர்களுக்கு வழி விடுகிறார்கள்!

தேவ் ரிச்சர்ட்சன்

தென் ஆப்பிரிக்க அணியின் விக்கெட் கீப்பர் தேவ் ரிச்சர்ட்சன் 43 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 38 வயது நிரம்பிய ரிச்சர்ட்சன் 150 கேட்ச்சுகள் பிடித்துள்ளார்; 2 முறை ஸ்டம்பிங் செய்துள்ளார். 1539 ரன்கள் குவித்துள்ள (ஒரு நூறு, எட்டு ஐம்பதுகள்) ரிச்சர்ட்சன் அண்மையில் ஆஸ்திரேலிய அணியுடன் ஆடி முடிந்த கையோடு ஓய்வு பெறும் செய்தியை அறிவித்திருக்கிறார். இச் செய்தி தென் ஆப்பிரிக்க அணி வீரர்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. சர்வதேச அளவில் தற்போது கிரிக்கெட் ஆடி வரும் வீரர்களில் வயது முதிர்ந்தவர் இவர் தான்!



• தேவ் ரிச்சர்ட்சன்

சஞ்சய் மஞ்ச்ரேகர்

இந்திய அணிக்காக 37 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய மஞ்ச்ரேகர் 2043 ரன்களைக் குவித்துள்ளார். 4 சதங்களும் (அனைத்தும் வெளி நாட்டில்) 9 அரை சதங்களும் இதில் அடங்கும். மேலும் 74 ஒரு தினப் போட்டிகளில் 1994 ரன்களை (15 அரை சதம்) எடுத்துள்ளார் மஞ்ச்ரேகர். 32 வயது நிரம்பிய சஞ்சய் மஞ்ச்ரேகர் விக்கெட் கீப்பிங் பணியும் செய்யக் கூடியவர். தில்லியில் 1987இல் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக மஞ்ச்ரேகர் முதன் முதலில் டெஸ்ட் களமிறங்கினார். அப்போதே அவருக்கு காயம் ஏற்பட்டது. எனினும் அதிலிருந்து விரைவில் குணமாகி 1992வரை அற்புதமாக ஆடி வந்தார்.



• சஞ்சய் மஞ்ரேகர்

1989இல் பாகிஸ்தான் அணிக்கெதிராக லாகூரில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 218 ரன்கள் குவித்தது மஞ்ச்ரேகரின் சாதனைப் பட்டியலில் முக்கியமானது. தனது ஆட்டத்திறன் குறைந்து வருவதால் ஓய்வு பெற முடிவெடுத்துள்ளதாக அறிவித்துள்ளார்.

டென்னிஸ் சாம்பியன்கள்


மார்டினா ஹிங்கிஸ் மீண்டும் சாதனை!

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸில் மகளிர் பிரிவில் மார்டினா ஹிங்கிஸ் சாம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார். இப்போட்டியில் ஸ்பெயின் வீராங்கனை கோஞ்சிதா மார்டினஸை அவர் வென்றார். மார்டினா உலகத் தரப்



• மார்டினா ஹிங்கிஸ்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/97 * Licensed
to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka



பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார்.

கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸில்தான் மார்டினா முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார். அப்போது இளம் வயதில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்றவர் என்ற பெருமையும் அவரை அடைந்தது. அப்போட்டியில் மேரி பியர்ஸை அவர் வென்றார்.

இதுவரை 5 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பங்கேற்ற மார்டினா ஒரே ஒருமுறை மட்டுமே இறுதிச் சுற்றில் தோல்வியுற்று பட்டம் பெறும் வாய்ப்பை நழுவ விட்டார். 1997 பிரெஞ்சு ஓபனில் இவா மஜோலி மார்டினாவை வென்றதன் மூலம் அப்பட்டத்தை அடைந்தார்.

அப்போட்டிக்கு முன்னதாக மார்டினா குதிரை சவாரியின் போது விபத்து ஏற்பட்டு காயமடைந்தார். அதனால் முழங்காலில் அறுவை சிகிச்சை செய்ய நேரிட்டது. எனினும் விடாமுயற்சியுடன் விளையாடி விம்பிள்டன், அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகளில் சாம்பியனானார்.

டென்னிஸ் வாழ்வில் ஒரே ஒரு முறை யாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்வதே மாபெரும் இலக்காகக் கருதப் படுகிறது. 17 வயதிலேயே 4 கிராண்ட்ஸ்லாம்களை வென்ற மார்டினா ஸ்விட்சர் லாந்து நாட்டுக்குச் சொந்தமானவர்.

டென்னிஸில் மட்டுமல்லாது எழுத்துலகிலும் மார்டினாவுக்கு ஆர்வம் அதிகம். உலக மகளிர் டென்னிஸ் சங்கத்தின் இன்டர்நெட் வெப்சைட் பகுதியில் டென்னிஸ் பற்றியும், தன்னைப் பற்றியும் அவர் எழுதி வருகிறார்.

மார்டினாவுக்கு முன் இது போன்ற தொரு சாதனையை நிகழ்த்தியவர் மோனிகா செலஸ். பிரெஞ்சு ஓபன் போட்டிகளில் தொடர்ந்து இருமுறை –90,91 ஆண்டுகளில் வென்றதன் மூலம் மிக இளம் வயதில் இத்தகைய சாதனை செய்தவர் எனும் பெருமையை அவர் பெற்றிருந்தார்.



• பீட்டர் கோர்டா

பத்தாண்டு போராட்டத்திற்கு வெற்றி

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸின் ஆடவர் ஒற்றையர் பட்டத்தைச் செக். குடியரசைச் சேர்ந்த பீட்டர் கோர்டா வென்றுள்ளார். சிலியின் மார்செலோ ரியாஸை வெகு சுலபமாக வீழ்த்தியதன் மூலம் கோர்டாவுக்கு முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் கிடைத்தது.

இதைக் கைப்பற்றுவதற்கு 10 ஆண்டு காலம் கோர்டா போராட வேண்டியிருந்தது. டென்னிஸ் உலகில் 30 வயதிலும் ஆடிக் கொண்டிருப்பவர்கள் அபூர்வம். உலகத் தரப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள கோர்டாவின் வயது 30.


1987இல் தொழில்முறை ஆட்டக்காரராக மாறிய கோர்டா இடக்கை ஆட்டக்காரர். 1992இல் பிரெஞ்சு ஓபன் இறுதிச் சுற்றில் ஜிம் கூரியரிடம் தோற்றதே பீட்டர் கோர்டாவின் டென்னிஸ் வாழ்க்கையில் இதுவரை குறிப்பிடத் தகுந்ததாக இருந்தது.

முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்வதற்குள் கடந்த 3 ஆண்டுகளாக பல்வேறு உடல் உபாதைகளால் பீட்டர் கோர்டா அவதிப்பட்டு வந்தார். 1995 வாக்கில் அவர் டென்னிஸிலிருந்து ஓய்வு பெற்று விடுவார் என்று கூறும் நிலையே இருந்தது. இருந்தும் மனந்தளராமல் போட்டிகளில் கவனம் செலுத்திய கோர்டாவுக்கு முக்கிய வெற்றி இந்த ஆண்டு கிடைத்திருக்கிறது!

— விளையாட்டுப் பையன்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones — Editorial : 2345624; Circulation Manager : 2345623;
Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription — (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


எந்த இரண்டு தவளைகள் ஒன்றாக இருக்கின்றன?




விடை : 2, 6


ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை ஒரே ஒரு முறைப் பயன்படுத்தி, முக்கோணத்தின் ஒவ்வொரு பக்க கூட்டுத் தொகையும் 20 வரும்படி எண்களை உருவாக்குங்கள்.

— எஸ்.பி. சுப்பராகவன், திருவாரூர்.





விடை :



''நான் என்றைக்கும் என் வீட்டுக்கு நன்றி உள்ள நாயா இருக்கத்தான் ஆசைப்படறேன்!''

''அதுசரி, வாலுக்கு எங்கே போவ?''

— காழி, ஆர். சீதாராமன்

''உங்க பையன் ஏன் அழறான்?''

''பெரியவன் அரையாண்டுத் தேர்விலே முதல் ரேங்க் வாங்கினான்னு ஒரு பேனா வாங்கிக் கொடுத்தேன். 'நான் 15வது ரேங்க் வாங்கியிருக்கேன், எனக்கு 15 பேனா வாங்கிக் கொடு'ன்னு அழறான்!''

— டி.என். பாலகிருஷ்ணன்

